ஜெர்மனியிலும் வன்னியன்
தொலைபேசி அட்டைகள்


'சொல்லும் நிமிடங்களை
சொன்னபடியே தருவது'
தொடர்புகட்கு: ரவி
01726312893 / 0622642067
Pub.

1.50 Euro


# ஈழமுரசு

ஐரோப்பா


POOBALAM WEEKLY

2004 | 25 Août - 01 Septembre 2004 | 28

சம்யுக்தா
Credits Immobiliers
வீடு வாங்க கடன் உதவி
அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்
SAM-YUKTHA
Credits-Finances-Investssements
6, Rue Cail -75010 Paris
Tél/Fax: 01 40 34 03 24
(M°: La Chapelle/Gare du Nord)


▶6
சம்பந்தர் மாறுகிறாரா...?


▶25
சந்திரிகா 100ற்கு 44!


▶7
இராணுவத் தளபதிகள் மாற்றம்
போருக்கான ஆயத்தப்படுத்தலே...

# விடுதலைப் புலிகளுக்கு ஆத்திரமூட்டி போருக்கு இழுக்கிறார் சந்திரிகா !

(23.08.2004)

இலங்கையில் சமாதான முயற்சிகள் தொடருவதற்கான அறிகுறிகள் மறைந்து வருகின்றன. விடுதலைப் புலிகளுக்கு ஆத்திரமூட்டி அவர்களே போரைத் தொடங்கினார்கள் என்று அவர்கள் மீதே பழியைப்போட்டு போரை நடத்துவதற்கு அரசு தரப்பு திட்டமிட்டுச் செயல்படுகிறது. படுபாதாளத்துக்குப்போய்விட்ட இலங் கையின் பொருளாதாரத்தை மீண்டும் ஒரு போரைத் தொடங்கியே ஈடுகட்ட முடியுமென்று சந்திரிகா அம்மையார் கருதுவதாக அவரது செயற்பாடுகள் எடுத்துக்காட்டுகின்றன. ............ ▶30



## யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கு ஆபத்து

### மட்டக்களப்பு தாக்குதல் குறித்து விடுதலைப் புலிகள் கண்காணிப்புக் குழுவிற்கு அறிவிப்பு


(23.08.04)

மட்டக்களப்பில் இராணுவ முகாமிற்கு அருகே அரசியல் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் குறித்து யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவினருக்கு தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.


மட்டக்களப்பு வாகரைக்கு தெற்கே காயங்கேணி பகுதியில் கடந்த வெள்ளிக் கிழமை நடாத்தப்பட்ட கிளைமோர் தாக்குதல் மற்றும் துப்பாக்கிச் சூட்டில் விடு தலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட முன்னாள் அரசியல்துறைப் பொறுப் பாளர் பாவாவும் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட புனர்வாழ்வுப் பொறுப்பாளர் யோகாவும் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதலில் மகளிர் படையணியைச் சேர்ந்த முக்கியஸ்தரான வேணுகா படுகாயமடைந்த அதேநேரம் அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் மயிரிழையில் உயிர் தப்பியிருந்தார். தமிழ்க் குழுக்களைப் பயன் படுத்தி இராணுவப் புலனாய்வுப் பிரிவே மட்டக்களப்பில் இவ்வாறான தாக்கு தல்களை நடத்தி வருவதாகவும் சு.ப.தமிழ்ச்செல்வன் இந்தக் கடிதத்தில் குற்றஞ் சாட்டியுள்ளார். ............ ▶02

## இது நிரந்தர சமாதானம் இல்லை



### வவுனியாவில் படையினருக்கு ரத்தனசிறி விக்கிரமநாயக்கா எச்சரிக்கை



(23.08.04)

இன்று வவுனியாவிற்கு அதிரடி விஜயம் ஒன்றை மேற்கொண்ட சிறீலங்காவின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்ணசிறி விக்கிரமநா யக்க படையினருக்கு எச்சரிக்கை விடுத்திருக் கின்றார். இன்று திங்கள்கிழமை காலை 9 மணியளவில் விசேட உலங்குவானூர்தியில் வவுனியாவில் உள்ள சிறீலங்காப் படையினரின் ஜோசப் முகாமிற்கு சென்ற விக்கிரமநாயக்க, அங்கு காவற்துறை, இராணுவ, கடற்படை மற்றும் விமானப் படையின் தளபதிகளை சந்தித்து உரையாடியுள்ளார்.

இதன்போது, விடுதலைப் புலிகள் மேற் கொண்டுவரும் போர் நிறுத்த மீறல் குறித்த கண்காணிப்பு குழுவினர் அக்கறைகொள்ள வில்லை எனக் குற்றம்சாட்டிய விக்கிரமநாயக்க, இது நிரந்தர சமாதானமில்லை, எனவே படையினர் போருக்கு தயார் நிலையில் தம்மை வைத்திருக்குமாறும் பணித்துள்ளார். ▶02

Orient Textilien & Schmuck

Koenigswall 16 (AM hbf),
44137 Dortmund-
Tel: 0231-162377
Fax:49-231-147836

தரம் உத்தரவாதம் அதிகதேர்வு மலிவோ மலிவு!!

* அனைத்து ஜவுளி வகைகள்
* கனம், தரம் மிக்க எவர்சில்வர் பாத்திரங்கள்
* அழகிய அன்பளிப்புப் பொருட்கள், அலங்கார ஆபரணங்கள், பரதநாட்டிய உடைகள்
* வாத்தியக் கருவிகள், கைக்கடிகாரங்கள்
* நவீன வண்ணங்களில் தரமான தங்காபரணங்கள், தாராள தேர்வில் 916/22K உத்தரவாதத்துடன் சிங்கப்பூர் விலையில் விற்பனையாகிறது.

உரிமையாளர்: ச.ஜெகதீஸ்


Pub

உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை - கப்டன் கஜன்



# V.T.Cash & Carry

900g யாழ்ப்பாணம் மிளகாய்துள் ஒரு போத்தல் 1Euro – மட்டக்களப்பு முறையில் தயாரிக்கப்பட்ட கட்டா கருவாடு 250g 1euro – 350 ச.மீற்றரில் அமைந்துள்ள ஸ்தாபனம்

Tél: 01 40 05 07 18
Fax: 01 40 05 06 92

15, Rue Cail, 75010 Paris.
M°: La Chapelle-Gare du Nord


# ஜே.வி.பி.யின் செயற்பாடு குறித்து சந்திரிகாவிற்கு இரகசிய புலனாய்வு அறிக்கை!

(23.08.04)

ஜே.வி.பி.யின் செயற்பாடுகள் குறித்து சிறீலங்கா அரச புலனாய்வுத்துறை, ஜனாதிபதியும், பாதுகாப்பமைச்சருமான சந்திரிகா குமாரதுங்கவிற்கு மிக முக்கியமான இரகசிய அறிக்கையொன்றை சமர்ப்பித்திருப்பதாக ஜனாதிபதி மாளிகையின் நம்பத்தகுந்த வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

சந்திரிகாவின் வேண்டுகோளின் பேரில் தேசிய புலனாய்வுப் பணியகம், தீவிரவாத தடுப்புப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் திணைக்களம் ஆகியன இந்த அறிக்கையினை சமர்பித்துள்ளதாக ஜனாதிபதிக்கு மிகவும் நெருக்கமான ஒருவர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் பிரதான பங்காளியான ஜே.வி.பி. தற்போதுள்ள அரசியல் சூழ்நிலைகளைப் பயன்படுத்தி பெருமளவு நிதி சேகரிப்பில் ஈடுபட்டுள்ளதாகவும், அரசாங்க பாதுகாப்புப் படைகளில் அவர்களது உறுப்பினர்களை இணைத்து வருவதாகவும் மேற்படி, புலனாய்வுத்துறை ஜனாதிபதியிடம் வழங்கியுள்ள இரகசிய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, சிறீலங்கா சுதந்திரக் கட்சியை முற்றுமுழுதாக மறுசீரமைக்க வேண்டுமென்றும், அதற்கான நடவடிக்கைகள் செப்டெம்பர் மாதத்திற்குள் ஆரம்பமாக வேண்டுமெனவும் பணிப்புரை விடுத்திருக்கும் ஜனாதிபதி இதற்கான பொறுப்பை பிரதமர் மகிந்த ராஜபக்சவிடம் வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

## யுத்த நிறுத்த உடன்பாடிக்கைக்கு ஆபத்து....

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் நிராயுதபாணிகளாக அரசியல் நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதலானது அப்பட்டமான யுத்த நிறுத்த மீறலென யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவிடம் விடுதலைப் புலிகள் கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

தாக்குதல் நடைபெற்ற விதம் மற்றும் நடைபெற்ற இடம் போன்ற விடயங்கள் இந்தத் தாக்குதலுடன் இராணுவத்தினர் சம்பந்தப்பட்டிருப்பதை தெளிவாகியுள்ளதாகவும் விடுதலைப் புலிகள் மேலும் கூறியுள்ளனர். ஆத்திரமூட்டும் இவ்வாறான தாக்குதல் நடவடிக்கையானது யுத்த நிறுத்த உடன்பாட்டுக்கே ஆபத்தாகிக் கொண்டிருக்கின்றது. தொடர்ந்தும் நாங்கள் பொறுமை காப்பதை இராணுவத்தினர் பல வீனமாகக் கருதக்கூடாது என விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைமையகத்திற்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, மட்டக்களப்பு தாக்குதலில் உயிரிழந்த விடுதலைப் புலிகளின் முன்னாள் அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் பாவா மற்றும் யோகா ஆகியோரின் பூதவுடல்கள் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் தாண்டியடி மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டுள்ளன.

## இராணுவப் புலனாய்வாளர் கொழும்பில் சுட்டுக்கொலை

(23.08.04)

சிறீலங்கா இராணுவப் புலனாய்வுத்துறையில் பணியாற்றிய குகன் என்பவர் இன்று சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இன்று இரவு சுமார் 10 மணியளவில் வெள்ளவத்தையிலுள்ள இந்து ஆச்சிரமம் ஒன்றில் வைத்து இனந்தெரியாத நபரொருவரால் இவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக சிறீலங்காப் பொலிசார் தெரிவித்துள்ளனர். குகநாதன் (47) குகன் என அழைக்கப்படும் இந்நபர், மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் சிறீலங்கா இராணுவத்தை விட்டு விலகி, வெள்ளவத்தையில் உள்ள சிறீ அரவிந்த ஆச்சிரமத்தில் வசித்து வந்ததாகப் பொலிசார் தெரிவித்துள்ள போதும் இது பற்றிய விபரமான செய்திகள் இன்னமும் கிடைக்கப் பெறவில்லை.

## இது நிரந்தர சமாதானம் இல்லை.....

சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா இலண்டனுக்கு வருகைதந்துள்ள நிலையில், சந்திரிகாவின் பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பை ஏற்றிருக்கும் விக்கிரமநாயக்க, வவுனியாவிற்கு அதிரடி விஜயம் செய்துள்ளது போருக்கான ஒரு முன்னேற்பாட்டு நடவடிக்கை என பல்வேறு தரப்பாலும் அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. இதேவேளை, வவுனியாவில் இருந்து படையினரின் முன்னரங்க காவல் நிலைக்கு சென்ற விக்கிரமநாயக்க, அங்கிருந்து விடுதலைப் புலிகளின் ஓமந்தை முன்னணி நிலைகளையும் பார்வையிட்டதுடன் மன்னாருக்குச் சென்று படையினரின் நிலைப்பாடுகளை அறிந்துள்ளார். அமெரிக்காவின் பல்வேறு தரப்பினரும் யாழ்குடாவிலுள்ள முன்னரங்க நிலைகளை சென்று பார்வையிட்டு திரும்பியுள்ள நிலையில், சிறீலங்காப் பாதுகாப்பு அமைச்சர், இன்று வவுனியாவிற்கு சென்று பார்வையிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## வவுனியாவில் இரு மனித எலும்புக் கூடுகள் கண்டுபிடிப்பு

(23.08.04)

வவுனியாவின் சிதம்பரபுரம் அகதி முகாமிற்கு அருகில் இரு மனித எலும்புக் கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. திங்கட்கிழமை மதியம் சிறீலங்கா பொலிசாரினால் இந்த எலும்புக் கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக் கூடுகளுக்கு அருகில் பெண் ஒருவரின் ஆடைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

வவுனியாவின் நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் ஸ்தலத்திற்கு சென்று இந்த மனித எலும்புக்கூடுகளை பார்வையிட்டுள்ளார். சிதம்பரபுரம் அகதி முகாமிலிருந்து பெண் ஒருவர் எட்டு மாதங்களுக்கு முன்னர் காணாமல் போயிருந்ததாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக்கூடுகளில் ஒன்று அந்தப் பெண்ணாக இருக்கலாம் என அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.


# INDIAN ASTROLOGERS FROM GENERATIONS



இந்தியாவில் பல தலைமுறைகளாக கைரேகை, முகநாடி எண்கணிதம், மாந்ரீகம், மருத்துவம் போன்ற துறைகளில் புகழ்பெற்று விளங்கும்

**பண்டிட் குமார சுவாமி அவர்கள்**
**பண்டிட் கிருஷ்ணா அவர்கள்**

பாரிஸ் மற்றும் ஜெர்மனி நகரங்களுக்கு வருகை தந்துள்ளனர்.
அம்பாளின் அருள்வாக்காலும் இவர்கள் தம் அனுபவத்தாலும் பல நாடுகளைச் சேர்ந்த மக்கள் எல்லா நன்மைகளும் பெற்று வாழ்க்கையில் வளம் பெற்றுள்ளனர்.

நடந்தவை, நடப்பவை, நடக்க இருப்பவை ஆகிய முக்கால பலன்கள் தொழில், கல்வி, குடும்பம், திருமணம், குழந்தை பாக்கியம் மற்றும் உங்கள் பிரச்சனைகளை தெரியப்படுத்தி பரிகாரமும் கூறுகின்றனர்.

இவ்வரிய வாய்ப்பினை பயன்படுத்தி சுவாமியை அணுகி வாழ்க்கையில் எல்லா நலன்களும் பெற்று வாழுங்கள்.

சுவாமிகளை அணுக வேண்டிய முகவரி

| Mr. Pundit Krishna | Mr. Pundit Kumar Swamy |
|---|---|
| 19 RUE CAIL, ESWARA, TAMIL ALAYAM<br>LA CHAPELLE 75010 Paris.<br>Métro: La Capelle, Gare du Nord<br>Port : 06 23 28 09 22<br>Tél: 01 53 26 59 21 | MUNCHNER STR. 18<br>LINKAM ASIAN MARKT<br>ADLER STR 5<br>44137 DORTMUND<br>Tel : 01 60 99 21 38 68 |

# Errances Travels

55, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle ou Louis Blanc

Tel: 01 42 09 70 00
Fax: 01 42 09 53 39

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

à partir de

| | | |
|---|---|---|
| Bombay | - | 560 Eu |
| Delhi | - | 560 Eu |
| Bangkok | - | 550 Eu |
| Colombo | - | 660 Eu |
| Singapour | - | 660 Eu |
| Madras | - | 658 Eu |
| New york | - | 550 Eu |
| Montreal | - | 540 Eu |
| Oslo | - | 315 Eu |
| Toronto | - | 540 Eu |

# கிழக்கிலுள்ள புலிகளின் முகாம்கள் தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு

## கண்காணிப்புக் குழுவிடம் சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சு கோரிக்கை

(22.08.04)

திருகோணமலை உட்பட கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளால் அமைக்கப்பட்டுள்ள முகாம்கள் தொடர்பான அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவை கேட்டுள்ளார். திருகோணமலை மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் முகாம்களை அமைத்துள்ளது தொடர்பாக கடற்படையினர், போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

இது தொடர்பாக கண்காணிப்புக் குழுவின் தீர்மானத்தை விரைவில் தெரிவிக்குமாறு தான் கேட்டுள்ளதாகவும் எனினும், அறிக்கை சமர்ப்பிப்பதற்கு கண்காணிப்புக் குழு இரண்டு வாரகால அவகாசம் கேட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். இதேவேளை கிழக்கில் அமைதி நிலவுவதாக போர் நிறுத்த கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது. எனினும், சில சமயங்களில் அங்கு இடம்பெறும் படுகொலைகள் பாரதூரமானவைகள் என்று கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவர் ஹாக்ருப் ஹாக்லன்ட் தெரிவித்தார். அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலேயே இந்தப் படுகொலைகள் இடம்பெற்றுள்ளன. போர் நிறுத்த கண்காணிப்புக் குழு என்ற ரீதியில் இந்தப் படுகொலைகள் தொடர்பாக மேலதிக நடவடிக்கை எதுவும் எடுக்க முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# புலிகளின் படகுகளை சோதிக்க எமக்கு அதிகாரமில்லை

## கண்காணிப்புக்குழு தெரிவிப்பு

(22.08.04)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரின் சந்தேகத்திற்கிடமான படகு அல்லது கப்பல்களை நிறுத்தி சோதனையிட எமக்கு அதிகாரமில்லை. ஆனால் புலிகளின் படகை கடற்படையினர் சோதனை செய்தால் அதனை நாம் கண்காணிப்போம் என யுத்த நிறுத்தக் கண்காணிப்பு குழுவின் பிரதித் தலைவர் தெரிவித்தார். கடந்த செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவு கடற்பரப்பில் சாலை என்னுமிடத்தில் கடற் புலிகளின் டோரா படகுகளில் இருந்து பெட்டிகளை இறக்கி சிறிய படகுகள் மூலம் கரைக்கு கொண்டு சென்றதாகக் கடற்படையினர் கண்காணிப்புக் குழுவுக்கு அறிவித்தனர். இதனையடுத்து அங்கு விரைந்த கடல் கண்காணிப்பாளர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் படகை சோதனை செய்ய முற்பட்டபோதிலும் புலிகள் அதனைத் தடுத்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கடந்த செவ்வாய்க்கிழமை சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் நடைபெற்ற பாதுகாப்பு ஆணையகக் கூட்டத்திலும் மேற்படி சம்பவம் குறித்து முழுமையாக ஆராயப்பட்டது. இது குறித்து பாதுகாப்பு ஆணையகம் யுத்த நிறுத்தக் கண்காணிப்பு குழுவிடம் விளக்கம் கோரவுள்ளதாகவும் தெரியவருகிறது. இவ்விடயம் குறித்து கேட்டபோதே கண்காணிப்புக்குழுவின் பிரதித்தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

## யாழ். பல்கலைக்கழகத்தில் சந்திரிகாவின் உருவப்படங்கள் அடித்து நொருக்கப்பட்டன

(22.08.04)

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் உருவப்படங்களை அடித்து நொருக்கியுள்ளனர்.



பல்கலைக்கழக வளாகத்தில் காணப்பட்ட சந்திரிகாவின் அனைத்து படங்களையும் மாணவர்கள் அடித்து நொருக்கியதோடு கூட்டம் கூட்டமாக நின்று சந்திரிகாவிற்கு எதிரான கோஷங்களையும் எழுப்பியுள்ளனர். வளாகத்தில் உள்ள சந்திரிகாவின் படங்களை அகற்றும்படி கடந்த சில தினங்களுக்கு முன்னரேயே மாணவர்கள் கோரிக்கை விடுத்திருந்தமை வாசகர்கள் அறிந்ததே.

# விசேட கொமாண்டோ பாதுகாப்பு தருமாறு ஈ.பி.டி.பி. கோரிக்கை

(22.08.04)

ஈ.பி.டி.பி. குழுவின் பாதுகாப்பு தொடர்பாக, அக் குழுவின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா அடுத்த ஓரிரு தினங்களில் ஜனாதிபதி சந்திரிகாவை சந்தித்துப் பேசவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இந்நிலையில் சந்திரிகா ஒரு வாரகால விடுமுறையில் இலண்டன் சென்றுள்ளதால் அவர்களின் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினை ஒருவார காலத்திற்கு தள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை, சந்திரிகாவைச் சந்தித்து, டக்ளஸ் தேவானந்தாவும் தங்கள் கட்சியினரும் இலக்கு வைக்கப்பட்டு வருவது குறித்தும் தங்களுக்கான பாதுகாப்பை அதிகரிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் சுட்டிக் காட்டவுள்ளதாகவும் ஈ.பி.டி.பியினர் தெரிவித்துள்ளனர். கடந்த பல வருடங்களாக தாங்கள் விடுதலைப் புலிகளினால் இலக்கு வைக்கப்பட்டு வருகின்ற போதிலும், தங்களுக்கு தொடர்ந்தும் பொலிஸ் பாதுகாப்பே வழங்கப்பட்டு வருவதாகவும் தங்களின் பாதுகாப்பு நிலைமையை கருத்தில் கொண்டு தங்களுக்கு விசேட கொமாண்டோ பாதுகாப்பு வழங்கப்பட வேண்டுமெனவும் கூறியுள்ளனர்.

ஜனநாயக வழிக்குத் திரும்பிய தங்களுக்கு அதிகரித்த பாதுகாப்பு வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தை சர்வதேச சமூகத்தினூடாகவும் தாங்கள் வலியுறுத்தவுள்ளதாகவும் தெரிவித்தனர். இதேவேளை, தங்களிடம் ஆயுதங்களை கையளிக்குமாறு ஈ.பி.டி.பி. ஜனநாயகக்கட்சி கோரியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# புலிகளின் மருத்துவத்துறை மிகக் குறுகிய காலத்தில் வளர்ச்சி பெற்றிருக்கின்றது

## – வே.பாலகுமாரன்

(22.08.04)

விடுதலைப் புலிகளின் மருத்துவத்துறை மிகக் குறுகிய காலத்தில் வளர்ச்சி பெற்றிருக்கின்றது. பல்வேறு இன்னல்களை சந்தித்து பல உபகரணங்களைப் பெற்று மருத்துவத்துறை இன்று அற்புதமான சாதனையைப் படைத்திருக்கின்றது என்று விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் கா.வே.பாலகுமாரன் அவர்கள் தெரிவித்துள்ளார். மருத்துவ போராளி தூயவனின் `யுத்த காண்டம்' நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு வெளியிட்டு உரை நிகழ்த்தும் போதே கா.வே. பாலகுமாரன் அவர்கள் இவ்வாறு தெரித்தார்.

அவர் தனது வெளியீட்டுரையில், உலகப் போரியல் வரலாறுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது நாம் மிகப்பெரிய சாதனையை படைத்திருக்கின்றோம். எமது நீண்ட பெரும் போராட்டத்தின் வலுத் தெரியாது சிறிலங்கா அரசு இன்று தரை தட்டி நிற்கின்றது. எமது போராட்டத்தின் ஊடாக போர்ப் பணியை பதிவு செய்து வெளிப்படுத்தும் பணியில் இன்று தூயவனின் `யுத்த காண்டம்' பெரும்பணியை ஆற்றியிருக்கின்றது எனவும் திரு.கா.வே.பாலகுமாரன் மேலும் தெரிவித்தார்.

நேற்று சனிக்கிழமை மாலை 4.45 மணியளவில் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் இந்த நூல் வெளியீட்டு நிகழ்வு ஆரம்பமானது. நிகழ்வின் பொதுச் சுடரினை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம் ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக் கொடியினை மருத்துவ பிரிவுப் பொறுப்பாளர் ரேகா ஏற்றிவைக்க, விழா சுடரினை பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனைகளின் பொறுப்பாளர் மனோஜ் ஏற்றிவைத்தார். மருத்துவக் கலாநிதி சுயந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நூல் வெளியீட்டு விழாவில், நூலின் முதற் பிரதியினை மருத்துவ கலாநிதி கெங்காதரன் வெளியிட்டு வைக்க, மருத்துவ கலாநிதி எழுமதி கரிகாலன் பெற்றுக் கொண்டார். சிறப்பு பிரதிகளை மகளிர் மருத்துவப் பொறுப்பாளர் வழங்கினார்.

நூலின் மதிப்புட்டு உரைகளை மருத்துவ கலாநிதி சிவபாலன், ஆய்வாளர் மு.திருநாவுக்கரசு ஆகியோர் நிகழ்த்தினர். நிகழ்வில் மருத்துவ போராளிகள், மருத்துவர்கள், படைப்பாளர்கள், போராளிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# புலிகள் தொடர்பான தரவுகளை பெற்றுத்தருமாறு சந்திரிகா அதிகாரிகளிடம் அவசர வேண்டுகோள்

கொழும்பு மற்றும் கொழும்பை அண்டியுள்ள பகுதிகளில் தங்கியிருக்கும் விடுதலைப் புலிகள் தொடர்பான தரவுகளை தமக்குப் பெற்றுத்தருமாறு, சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிக்கா, படைத்துறை அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. வடக்கு - கிழக்கு பகுதிகளிலிருந்து தெற்குக்கு நகர்வுகளை மேற்கொள்ளும் விடுதலைப் புலிகள் தொடர்பான பிறிதொரு அறிக்கையைச் சமர்க்குமாறும், அவர் படைத்துறை அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அத்துடன், தென் பகுதியின் பாதுகாப்பைப் பலப்படுத்துமாறும், திடீர் சோதனைகளை நடாத்துமாறும், சந்திரிக்கா, சிறிலங்கா படைத்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு ஜனாதிபதி சந்திரிக்காவினால் பெற்றுக்கொள்ளப்படும் தகவல்கள், பின்னர் நோர்வேயின் சமாதான ஏற்பாட்டாளர்களுக்கும், இராஜதந்திரிகளுக்கும் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

"SHELVA" "ZUG"
Credit and Insurance
குறைந்த வட்டியில் அதிகூடிய
வங்கிக்கடன்
30% வீதத்தில் வாகனக் காப்புறுதி
சாரதிப் பத்திரம் இல்லாவிட்டாலும் 30 மட்டுமே...
வீட்டுக்காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
இலங்கையிலிருந்து சுவிஸ் வருபவர்களுக்கான மருத்துவக் காப்புறுதி
(Visa கிடைக்காவிட்டால் பணம் திருப்பிக் கொடுக்கப்படும்)
"SHELVA" "ZUG"
T.Thangarajah
Buonaserstr. 2
6343 Rotkreuz
Switzerland
Telefon
041 790 64 63
041 790 64 66
Fax
041 790 64 68
Natel
079 514 64 28

# புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளவே யாழ். மாவட்டத்திற்கு புதிய இராணுவத் தளபதி

(22.08.04)

யாழ். மாவட்டத்தில் புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்குடனும் ஒரு பிரசார உத்தியை கையாளும் நோக்குடனுமே யாழ். மாவட்ட புதிய இராணுவத் தளபதி சுனில் தென்னக்கோனின் நியமனம் அமைந்துள்ளது. புதிய இராணுவத் தளபதி சுனில் தென்னக்கோன் முன்னாள் இராணுவத் தளபதி சுசில் சந்திரபாலவை விட படையினர் மத்தியில் செல்வாக்கு மிக்கவர். அது மட்டுமல்லாமல் சிறந்த பேச்சாற்றல் உடையவராகவும் விளங்குபவர். இவர் திருகோணமலையை தலைமையகமாக கொண்ட 22வது டிவிசனின் பொதுக் கட்டளை அதிகாரியாக கடமையாற்றிய காலத்தில் சாதாரண படைச் சிப்பாய்களின் மனதை வென்ற ஒருவராக இருந்ததுடன் பாதுகாப்பு நிலைவரத்தில் மிக இறுக்கமான போக்கையும் கடைப்பிடித்து வந்தார்.

1951ம் ஆண்டு பிறந்த சுனில் தென்னக்கோன் 1971 ஜூலை 24ம் திகதி இராணுவத்தில் இணை அதிகாரியாக இருந்தார். 1972 ஒக்ரோபரில் ஆட்லறிப் படைப் பிரிவில் 2ம் லெப்ரினன்ட் தர அதிகாரியாக நியமிக்கப்பட்டார். பின்னர் படிப்படியாக முன்னேறி 1997ல் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராக பொறுப்பேற்றார்.

இதன் பின் 1998இல் இராணுவப் பேச்சாளராக நியமிக்கப்பட்ட சுனில் தென்னக்கோன், பின்னர் 23வது படைப்பிரிவின் பொதுக்கட்டளை அதிகாரியாக மட்டக்களப்பில் பணியாற்றி இறுதியாக திருமலையில் பணியாற்றியவர். பாகிஸ்தான் உட்பட வெளிநாடுகள் சிலவற்றிலும் இவர் பயிற்சி பெற்றவர்.



குடாநாட்டில் புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள தருணம் பார்த்து அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட புதிய இராணுவத் தளபதி, படையினர் மத்தியில் இடம் பிடித்தாலும் மக்கள் மனதை வெல்வது என்பது இயலாத காரியம். ஆனால் இவரின் நியமனத்தை படையினரது எதிர்கால நடவடிக்கைகளிற்கான முன்னேற்பாடாகவே கருத வேண்டியுள்ளது, என கொழும்பு இதழொன்று தெரிவித்துள்ளது.

# சிங்கப்பூரில் 7வது தமிழ் இணைய மாநாடு

(22.08.04)

`நாளைய உலகில் தமிழ்த் தகவல் தொழில்நுட்பம்' குறித்து விரிவாக விவாதிக்கும் இந்த ஆண்டின் தமிழ் இணைய மாநாடு டிசம்பர் மாதம் 11, 12 ஆகிய நாட்களில் சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற உள்ளது. இதனை தமிழ் இணைய மாநாடுகளை நடத்தி வரும் உத்தமம் அமைப்பின் தலைவர் திரு. முத்து நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

இணையத்தில் மிக வேகமாக வளர்ச்சி கண்டு வரும் மொழிகளில் ஒன்று தமிழ். இன்று இணையத்தில் ஆங்கிலத்தைப் பயன்படுத்தி செய்யக்கூடிய செயல்களில் பெரும்பாலானவற்றை - அநேகமாக அனைத்தையும் - தமிழ் மொழியைப் பயன்படுத்தியே செய்ய முடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இந்த வளர்ச்சியை மேம்படுத்தவும், தரப்படுத்தவும் உலகத் தமிழ் தகவல் தொழில்நுட்ப மன்றம் (உத்தமம்) 1997ம் ஆண்டு துவங்கி ஆண்டு தோறும் அனைத்துலக மாநாடுகளை நடத்தி வருகிறது. இந்த வரிசையில் இந்த ஆண்டு நடைபெற இருப்பது 7வது தமிழ் இணைய மாநாடு ஆகும். இந்த 7வது தமிழ் இணைய மாநாடு டிசம்பர் 11, 12 தேதிகளில் சிங்கப்பூரில் நடைபெற உள்ளது. இந்த அனைத்துலக மாநாடு சிங்கப்பூரில் நடைபெறுவது இது மூன்றாவது முறை.

`நாளைய உலகில் தமிழ்த் தகவல் தொழில்நுட்பம்' என்ற பொருளில் நடைபெற உள்ள இந்த மாநாட்டில், தமிழ்த் தகவல் தொடர்பான பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்பட உள்ளன. பலநாடுகளைச் சேர்ந்த சுமார் 50 கணினி வல்லுநர்களும், முன்னணிக் கணினி நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும் இந்த மாநாட்டில் பங்கேற்க உள்ளனர். இந்த ஆண்டு நடைபெற உள்ள இந்தத் தமிழ் இணைய மாநாடு இதற்கு முந்தைய மாநாடுகளிலிருந்து சற்று வேறுபட்டிருக்கும். தமிழ்த் தகவல் தொழில்நுட்பத்தின் வர்த்தக, சமூக பயன்பாடுகள் குறித்த விவாதங்களைக் குறைத்துக் கொண்டு, தொழில்நுட்ப அம்சங்களில் இந்த மாநாடு அதிகம் கவனம் செலுத்தும். `இரண்டாயிரமாவது ஆண்டு மிகப் பெரிய அளவில் தமிழ் இணைய மாநாட்டை சிங்கப்பூர் நடத்தியதைத் தொடர்ந்து நடைபெற்ற தமிழ் இணைய மாநாடுகள் பெரிய அளவிலேயே நடைபெற்று வருகின்றன. தொழில்நுட்பத்தை ஆழ்ந்து பரிசீலிக்கும் விதமாக முதன்முறையாக சிறிய அளவில் இப்போது சிங்கப்பூரில் மாநாடு நடக்க உள்ளது. தமிழ்த் தகவல் தொழில் நுட்பத்தின் பயன்பாடுகளை மக்களிடம் எடுத்துச் செல்வது எத்தனை முக்கியமோ அந்த அளவிற்கு மாறிவரும் தொழில்நுட்பங்களில் தமிழுக்கு உரிய இடம் கிடைப்பது குறித்து ஆராய்வதும் முக்கியமானது' என்று முத்து நெடுமாறன் தெரிவித்தார். `இந்த மாறுபட்ட வடிவத்தையும் சிங்கப்பூர்தான் அறிமுகப்படுத்த உள்ளது' என்றும் அவர் கூறினார்.

2004ம் ஆண்டிற்கான தமிழ் இணைய மாநாட்டை நடத்துவதற்குரிய அனைத்துலக அமைப்புக் குழு, சிங்கப்பூர் ஏற்பாட்டுக் குழு ஆகியவற்றையும் உத்தமம் அறிவித்துள்ளது. இந்த அனைத்துலக மாநாட்டை சிங்கப்பூரில் நடத்துவதற்கு கிடைத்த வாய்ப்புக் குறித்து மகிழ்ச்சி தெரிவித்த சிங்கப்பூர் மாநாட்டுக் குழுவின் தலைவர். திரு. அருண் மகிழ்நன், `சிங்கப்பூரில் தமிழ் இணைய மாநாடு நடைபெறும் போதெல்லாம் தமிழ் சமூகம் பலனடைகிறது. அனைத்துலகத் தமிழ் சமூகத்திற்கு நாமும் ஒரு சிறிய அளவில் உரிய பங்களிப்பு செய்வதில் மகிழ்ச்சி அடைகிறோம்' என்று தெரிவித்தார்.

# பொய்ச் சான்றிதழ்களை சமர்ப்பித்து புலிகளுடன் இணைய வந்த நால்வர் பராமரிப்பு நிலையத்தில் ஒப்படைப்பு

(22.08.04)

தமது வயது குறித்து பொய்ச் சான்றிதழ்களை சமர்ப்பித்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைவதற்கு முயன்ற நான்கு சிறுவர்கள் விடுதலைப் புலிகளின் சிறப்புக் குழுவினரால் அடையாளம் காணப்பட்டுள்ளனர். போலி ஆவணங்கள் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் சேர முயன்ற இந்த நான்கு சிறுவர்களும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் நடாத்தப்படும் சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஒப்படைக்கப்பட்டுள்ளனர். 15 வயதிற்கும் 17 வயதிற்கும் இடைப்பட்ட 4 சிறுவர்களே கிளிநொச்சியில் உள்ள சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். சிறீலங்கா இராணுவத்தினரின் அச்சுறுத்தல்கள் அதிகரித்துவரும் நிலையில் விடுதலைப் புலிகளுடன் இணைந்துகொள்ள வருபவர்களின் தொகை அதிகரித்துள்ளது. சர்வதேச சட்ட விதிகளுக்கு அமைய, 18 வயதிற்கு குறைந்தவர்களை விடுதலைப் புலிகள் படையில் இணைத்துக்கொள்ள மறுத்துவரும் நிலையில், தமது வயதினை அதிகரித்து, போலியான சான்றிதழ்களை காண்பித்து விடுதலைப் புலிகளில் இளைஞர்கள் இணைவதற்கு முண்டியடிப்பது குறிப்பிடத்தக்கது.



# குற்றப் புலனாய்வு பிரிவினரால் மட்டு. இளைஞர்கள் மூவர் கைது

(22.08.04)

கொழும்பிலிருந்து வந்த சிறீலங்கா குற்றப் புலனாய்வு பிரிவினரால் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. தன்னாமுனையைச் சேர்ந்த கிறிஸ்தோபர் ஜெயக்குமார் (25), அருமைநாயகம் ஜெயசீலன் (28), மட்டக்களப்பு ஜயந்திபுரம் எக்டர் றெஜினோல்ட் சில்வா ஆகிய மூவருமே கைது செய்யப்பட்டவர்களாவர்.

கடந்த புதன்கிழமை அதிகாலை தெமட்டகொடவிலிருந்து வந்த குற்றப்புலனாய்வு பிரிவினர் இவர்களை கைது செய்துள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதே வேளை ஆகஸ்ட் 15ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஜெயசீலன் கொழும்பிற்குக் கொண்டு செல்லப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளார். ஏனையவர்கள் இதுவரை விடுவிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

# இலங்கைக்கு கடத்த இருந்த 23 கோடி ரூபா போதைப் பொருள் மீட்பு


(22.08.04)

இலங்கைக்கு கடத்துவதற்காக பதுக்கி வைத்திருந்த 23 கோடி ரூபா மதிப்புள்ள பிரவுண் சுகரை தமிழகத்தின் கிருஷ்ணகிரியில் பொலிசார் கைப்பற்றியதுடன் 3 பேரையும் கைது செய்துள்ளனர். கிருஷ்ணகிரியில் உள்ள ஒரு விடுதியில் இலங்கைக்கு கடத்துவதற்காக 23 கோடி ரூபா மதிப்புள்ள போதைப் பொருள் மத்திய பிரதேசத்தில் இருந்து கடத்தி வரப்பட்டுள்ளதாகவும், அது தொடர்பாக 3 நபர்கள் தங்கி இருப்பதாகவும், தென்மண்டல போதைப்பொருள் கடத்தல் தடுப்புப் பிரிவுக்கு இரகசிய தகவல் கிடைத்தது.

இந்தத் தகவலின் அடிப்படையில் போதைப்பொருள் கடத்தல் தடுப்புப் பிரிவு கடந்த புதன்கிழமை சம்பந்தப்பட்ட விடுதியை முற்றுகையிட்டு கடத்தல் கும்பல் தங்கியிருந்த அறைக்குள் நுழைந்து அவர்களிடம் இருந்த பறிமுதல் செய்தனர்.

(தொடர்ச்சி 29ம் பக்கம்)





சூரிச் மாநகரில் ஓர் அழகு நகைமாடம்

N.S.Jewellery

(பழைய தமிழரசி நகைமாடம் அமைந்திருந்த இடம்)

உங்கள் நகைத் தேவைகள் எதுவாயினும்
உங்கள் விருப்புக்கேற்றவாறான பல வண்ணத் தெரிவு
22 கரட் தரம் குறையாத தங்க ஆபரணங்கள்
ஏராளமான, பல புதிய டிசைன்களில் இப்போது
இறக்குமதி செய்துள்ளோம்.

சம்பிரதாய முறைப்படி பொன் உருக்கி தாலி செய்து தரப்படும்.

N.S.Jewellery
Neugasse 58
8005 Zürich

Telefon: 01 440 60 50
01 440 60 51
Natel: 079 230 80 04

ஈழமுரசு
POOBALAM WEEKLY

# தமிழீழ தாயகத்தைப் பிரிக்க நடக்கும் சதி

இலங்கையில் மீண்டும் சமாதான வாழ்வை ஏற்படுத்தும் முயற்சி வெறும் கானல் நீராகக் கரைந்துகொண்டிருக்கிறது.

சமாதானப் பேச்சு என்று வாயளவில் பேசும் சிங்கள ஆதிக்க சக்திகள் வலுச்சண்டைக்குப் புலிகளை இழுத்துவிடுவதில்தான் குறியாக இருக்கின்றன.

பேச்சுவார்த்தை நடத்தி ஒரு முடிவு காண்பதைவிட விடுதலைப் புலிகளை எப்படிப் பலவீனப்படுத்துவது என்பதிலேயே சந்திரிகா அம்மையாரும் படைத்தரப்பினரும் நாட்டம் கொண்டிருக்கின்றனர். சிங்கள ஆதிக்க சக்திகளின் ஆசை இதுவேதான்.

போரில் புலிகளைப் பலவீனப்படுத்த எடுத்த வியூகங்களெல்லாம் அவர்களையே சுற்றிவளைத்துப் பலவீனப்படுத்திவிட்டன.

`தேசப்பற்றோடு' படையில் சேர்ந்தவர்கள் ஆயுதங்களுடன் ஓட்டம் பிடித்து நாட்டில் கொலை கொள்ளைகளில் அதிக வருமானம் பெறுகிறார்கள்.

சட்ட விரோத ஆயுதங்களைக் கையளிக்குமாறு எத்தனை கோரிக்கைகள், அறிவுறுத்தல்கள், எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டபோதும் பயனில்லை.

ஆயுதங்களுடன் ஓடிப்போனவர்களைக் கண்டு பிடிக்க முடியவில்லை, ஆயுதங்களை மீட்டெடுக்கவும் வழி தெரியவில்லை. ஆனால் இன்றைக்கு ஆயுதங்களைக் குவிக்கிறார்கள்.

இந்த ஆயுதங்களும் அவற்றைக் கொண்டோடியவர்களும் `பாதாளக் கோஷ்டி' என்ற புதிய கட்டுக்கடங்காத சட்டவிரோதக் கும்பலாகப் பரிணாமம் பெற்று வளர்ந்திருக்கிறது.

இதுபோன்ற கும்பல்கள்தான் முன்பு இனக் கலகங்களில் முன்னிலை வகித்து தமிழ் இன அழிப்பில் ஈடுபட்டன. இன்று புலிகளின் ஆயுதம் இதற்குத் தடையாக இருக்கிறது.

இதை அடக்க வழியில்லை, அரசியல்வாதிகளின் ஆதரவும் ஆட்சி பீடத்திலுள்ள சிலரின் ஆட்சியும் இதற்கு இருக்கிறது.

தமிழர் தாயகம் என்ற அடையாளமே இருக்கக்கூடாது என்பது சிங்கள பேரினவாத ஆதிக்க சக்திகளின் ஒரே இலட்சியம்!

முதல் பிரதமர் டி.எஸ். சேனநாயகா, உணவில் தன்னிறைவு என்று சொல்லி கிழக்கு மாகாணத்தில் சிங்களவரைத் திட்டமிட்டுக் குடியேற்றி தமிழ் நிலத்தை அபகரித்தார்.

பெரிய சேனநாயகாவைத் தொடர்ந்து இன்றுவரை கிழக்கில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் தொடர்ந்து தமிழ் மண் அபகரிக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறது.

முஸ்லிம்களின் நிலம் அம்பாறையிலும் மற்றும் கிழக்கின் பல பகுதிகளிலும் அபகரிக்கப்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்டத்தில் `திகவாபி' புனித பௌத்த பிரதேசமானது, முஸ்லிம்கள் காணி இழந்தனர். திருமலையில் `சேருவாவில் புனித பௌத்த பிரதேசமாகி பௌத்த சிங்களப் பகுதியாகிவிட்டது.'

பண்டார நாயகா காலத்தில் 1956 -1958 களில் தமிழர்களுக்கெதிராகத் தொடங்கப்பட்ட இனக் கலகங்கள் ஜே.ஆர் வரை 1977 -1983 வரை காலத்துக்குக் காலம் இனக் கலகங்கள் தூண்டிவிடப்பட்டு தமிழ் மக்கள் கிழக்கிலிருந்து விரட்டப்பட்டு அவர்களது பூமி அபகரிக்கப்பட்டது. இன்றும் இந்த அபகரிப்பும் ஆக்கிரமிப்பும் நீடிக்கிறது.

விடுதலைப்புலிகள் தலையெடுத்து சிங்களப்பேரினவாதத்துக்குப் பதில் கொடுக்கத் தொடங்கியபின் அபகரிப்பும் ஆக்கிரமிப்பும் தடைப்பட்டிருக்கின்றன.

ஆனாலும் கிழக்கை வடக்கிலிருந்து பிரித்து உடைக்கும் இனவாதச் செயல்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிழக்கில் தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்குமிடையில் குரோதத்தையும் மோதலையும் ஏற்ப்டுத்தி வகுப்புவாதத்தினைப் பரப்பி அதில் சிங்களவர் குளிர்காய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை விடுதலைப்புலிகள் விவேகத்துடன் சமாளித்தனர்.

தமிழர்களும் முஸ்லிம்களும், ஒன்றுபட்டுத் தமிழீழம் இலட்சியத்தில் வெற்றியீட்டிவிடுவார்களென்ற அச்சமும் ஐயமும் சிங்கள ஆதிக்க சக்திகளுக்கு ஏற்பட்டது.

முஸ்லிம் தலைமைத்துவத்தில் குழப்பத்தை ஏற்படுத்துவதில் சிங்களப் பேரினவாதம் ஓரளவு வெற்றிகண்டது.

தமிழ் மக்களையும் முஸ்லிம்களையும் பிரித்துவைக்க எடுத்த முயற்சிகள் நிறைவேறவில்லை.

இதனால் தமிழ் மக்களின் விடுதலைக்குத் தலைமைதாங்கி வழிகாட்டிடும் தமிழீழ விடுதலைப் புலிகளைப் பிளவுபடுத்தி சீர்குலைத்து விடலாமெனக் கனவுகண்ட சிங்களப் பேரினவாதிகளும் ஆதிக்க சக்திகளும் கருணா என்ற ஒரு கோடரிக்காம்பைத் தேடிப் பிடித்துப் பிரதேசவாதத்தைப் பரப்பி வெற்றி பெறமுனைந்தன.

வடக்கும், கிழக்கும் பெரும் மோதலுக்குள்ளாகி, தமிழினம் செத்துமடியும் என்று கற்பனை செய்தவர்களுக்குப் படுதோல்வியே ஏற்பட்டது.

இன்று அதே சக்திகள் தேடிப்பிடித்து மகுடி ஊதி வளர்க்கப்பார்த்த கருணா என்ற நச்சுப்பாம்பு, முகவரியே இல்லாமல் பல்லுப்பிடுங்கிய பெட்டிப்பாம்பாக முந்தானைக்குள் முடங்கிப் பதுங்கிப் பயந்து ஒளிந்து கிடக்கிறது.

ஆனாலும் இந்தக் கோடரிக்காம்பின் பின்னால் இன்னமும் அடிவருடிகள் இருப்பதாகவும் கிழக்கில் இன்னமும் குழப்பமிருப்பதாகவும் காட்டிக்கொள்ள சந்திரிகா அரசும் அதன் எடுபிடிகளும் படைத்தரப்பும் நாடகமாடுகின்றன.

இதன் ஒரு அங்கமே காயாங்கேணியில் இரு போராளிகள் கிளைமோர் தாக்குதலில் கொல்லப்பட்ட சம்பவம்.

`புலிகளுக்கிடையில் மோதல் தொடர்ந்தால் அவர்களின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் படையை நகர்த்துவதைத் தவிர வேறு வழியில்லை' என்று சந்திரிகா அம்மையார் கூறியிருப்பது சிந்தனைக்குரியது.

கருணா கும்பல் மோதுமென்று எதிர்பார்த்துத் தயாரித்த உரையை, காலந்தெரியாமல் அம்மையார் இப்பொழுது நிகழ்த்தியிருக்கிறார்.

நாடு குட்டிச்சுவராய்ப்போனாலும் அந்நியர் வந்து ஆக்கிரமித்தாலும்கூடப் பறவாயில்லை தமிழர்கள் தமது தாயக பூமியில் உரிமையுடன் வாழக்கூடாது என்பதில் சிங்கள ஆதிக்க சக்திகள் அடம்பிடித்து நிற்கின்றன.


திருக்கோணமலைத்துறைமுகத்துக்கு ஆபத்து என்று கதிர்காமர் முதல் படைத்தளபதிகளும், ஆதிக்க சக்திகளும் கூச்சலிடுவது அந்நியர் வந்தாவது தமிழர் தாயகத்தை ஆக்கிரமிக்கட்டும் அல்லது வடக்கையும் கிழக்கையும் பிரித்துவைக்கட்டும் என்பதற்காகவேயாகும்.

சிங்களப்பேரினவாதத்தின் இந்த சதித்திட்டங்களுக்கு, தமிழரென நாமம் கொண்டு; முன்பு தமிழீழத்துக்கும் போராட முன்வந்தவர்கள் இன்று சதிகாரர்களுக்கு சாமரம் வீசிக்கொண்டிருப்பதுதான் தமிழ் மக்களால் புரிந்துகொள்ளமுடியவில்லை.

விடுதலைப் புலிகள்தான் போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறினார்கள் என்ற பழியைச் சுமத்துவதற்கு சதிகாரர்கள் பல்வேறு வேடங்கள் புனைந்து ஆடுகிறார்கள்!

நீதியே வெல்லும் என்ற நம்பிக்கையுடன் உலகில் பரந்துவாழும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் பின்னால் அஞ்சாது நிற்க வேண்டும்.

தமிழீழம் விரைவில் மலரும் என்பது உறுதி!



# கனடாவில் பொங்குதமிழ் எழுச்சியுடன் நிகழ ஏற்பாடுகள்

கனடாவில் பொங்குதமிழ் நிகழ்வுகள் எழுச்சியுடன் நடைபெற மாணவர் அமைப்புக்களால் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக கனடா தமிழ் மாணவர் அமைப்புத் தெரிவித்துள்ளது. புலம்பெயர்ந்த நாடுகளில் இடம்பெற்றது போன்றே கனடியத் தமிழர்களின் இருப்பை அடையாளப்படுத்தவும், தாயகத் தமிழர்களுடனான தமது உறவுப் பேணலை வெளிப்படுத்தவும் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக விழா ஒருங்கிணைப்பாளர்கள் தெரிவித்தார்கள்.

இலங்கைத் தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் அதிகளவு தமிழர்கள் வாழும் நாடு கனடா என்பதும், கனடியத் தமிழர்கள் தமது அடையாளத்தை நிரூபிக்க வேண்டிய காலகட்டத்தில் தற்போது இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. கனடா பல்வேறு நாடுகளிலிருந்தும் புலம்பெயர்ந்து வந்த மக்களை அங்கமாகக் கொண்டதொரு நாடு என்பதும், இவ் இனங்கள் தமது தொப்புள் கொடியுறவுகளைத் தொடர்ந்தும் பேணி தமது இன அடையாளத்தை இழக்காமல் வாழ்ந்து வருகின்றன என்பதும் அதன் சிறப்பம்சங்களாகும்.

அந்தவகையில் கனடிய நீரோட்டத்தில் இணைந்த தமிழர்கள் தங்களை ‘கனேடியத் தமிழர்கள்’ என்ற அடைமொழியின் கீழே அடையாளப்படுத்தி வருகின்றனர். தற்போது சுமார் 300,000 பேரைக் கொண்ட கனடியத் தமிழர்கள் தங்களது இருப்பை அடையாளப்படுத்தும் செயற்பாடுகளில் ஒன்றாகவே இந்த பொங்குதமிழ் நிகழ்வை சகல தமிழர் அமைப்புக்கள், தமிழ் ஊடகங்கள் ஆகியவற்றின் ஒருமித்த ஆதரவுடன் முன்னெடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு செய்வதன் மூலம் காத்திரமான ஒரு சமுதாயமாக ஒரே தலைமையின் கீழ்த் தம்மைப் பிரகடனப்படுத்துவதுடன், தமக்கும் தாயகத்திற்குமிடையேயான தொடர்பைப் பேணி வலுப்படுத்தி, தற்போது சர்வதேச ஆதரவுடன் முன்னெடுக்கப்படும் பேச்சுவார்த்தைகளில் காத்திரமான பங்கு வழங்க வேண்டிய கடப்பாடு கனடாவிற்கு உண்டு என்பதைத் தெளிவுபடுத்தவும் இந்நிகழ்வு பெருமளவில் உதவும் என்பதோடு, தமிழர் தேசியம், தமிழர் தலைமை, தமிழர் தாயகம், சுயநிர்ணயம் போன்ற பொங்குதமிழின் அடிப்படைகளை மீண்டுமொருமுறை உறுப்படுத்தும் நிகழ்வாகவும் இது அமையும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# இலங்கை திரும்ப முயன்ற 22 அகதிகள் விசாரணையின் பின் விடுவிப்பு

(22.08.04)

தமிழ்நாட்டிலிருந்து இலங்கை திரும்ப முயன்ற 22 தமிழ் அகதிகள் இராமேஸ்வரத்தில் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர். கடந்த வியாழகிழமை தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்குத் திரும்ப முயன்றபோதே இவர்கள் 22 பேரும் இராமேஸ்வரத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டதாக தமிழகப் பொலிசார் தெரிவித்துள்ளனர். தமிழ்நாட்டில் சேலம், திண்டுக்கல், நாமக்கல் மாவட்ட அகதி முகாம்களில் தங்கியிருந்த அகதிகளே இராமேஸ்வரத்திலிருந்து இவ்வாறு இலங்கை திரும்ப முயற்சித்துள்ளனர். இவர்களில் 10 பேர் பெண்கள். இலங்கைக்கு வருவதற்கு ஒருவருக்கு தலா 6000 இந்திய ரூபா வீதம் முகவருக்குப் பணம் செலுத்தியதாகவும் இவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 15ம் திகதி ஞாயிற்றுக் கிழமை இலங்கைக்கு வருவதற்காக இராமேஸ்வரம் வந்த இவர்கள் மணல் திட்டுகளில் ஒளிந்திருந்ததாகவும் உணவுக்காக பிஸ்கட் மட்டுமே வழங்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளனர். இவர்கள் தொடர்பாக இராமேஸ்வரம் பொலிசாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் பின்னர் மண்டபம் முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு விசாரணைகளுக்குப் பின்னர், விடுவிக்கப்பட்டதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளார்.

## ஜப்பான் தூதர் மட்டக்களப்பு விஜயம்

(23.08.04)

சிறீலங்காவிற்கான ஜப்பானியத் தூதுவர் ஒட்சுவா இன்று திங்கட் கிழமை மட்டக்களப்புக்கு விஜயம் செய்துள்ளார். மட்டக்களப்புக்கு செல்லும் ஜப்பானியத் தூதுவர் மாவட்டப் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சிறீலங்கா அரச உயரதிகாரிகள், படை உயரதிகாரிகள் ஆகியோரை சந்தித்துத் தற்போதைய நிலைவரங்கள் தொடர்பாக ஆராயவுள்ளார். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பராஜசிங்கம் தலைமையில் அவரது இல்லத்தில் ஜப்பானியத் தூதுவருடன் சந்திப்பொன்றும் நடைபெறவுள்ளது.

# போராளிகளினதும் பொதுமக்களினதும் குருதியினால் உருவாக்கப்பட்டது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு



தமிழ்மக்களின் நீண்டகாலப் பிரச்சினைகளையும் விடுதலைப் புலிகளின் தமிழ்த்தேசிய விடுதலைக்கான போராட்டங்கள் பற்றியும் உள்நாட்டிலும் சர்வதேச சமூகத்திற்கும் எடுத்துக்கூறுவதற்காகவே நான்கு தமிழ்க் கட்சிகள் அடங்கிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. ஆனால் அந்தக்கடமையில் இருந்து கூட்டமைப்பு தவறிச்செல்கின்றதா அல்லது தத்தமது தனிப்பட்ட தேவைகளில் கவனம் செலுத்துகின்றார்களா? என்ற கேள்வியும் சந்தேகங்களும் எழுகின்றன. பொதுத்தேர்தல் முடிவடைந்து மூன்று மாதங்கள் கடந்துவிட்டநிலையில் வெறுமனே நாடாளுமன்ற உறுப்பினர்களாக மாத்திரமே கூட்டமைப்பு உறுப்பினர்கள் செயல்படுகின்றனர். கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் இரா.சம்பந்தன் ஏனைய 21 நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடி சில முடிவுகளை எடுப்பதாகத் தெரியவில்லை.

தமிழ்த்தேசியப் போராட்டம் தொடர்பாக சிறீலங்காவின் சிங்களத் தலைவர்களுடனும் கொழும்பிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளுடனும் வேறொரு விதமாக இரா.சம்பந்தன் பேசிவருவதாகவும் ஆனால் தமிழ்மக்கள் மத்தியிலும் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர்களை சந்திக்கும் போதும் அவர்களுக்கு சார்பாக பேசுவதாகவும் கூட்டமைப்பில் உள்ள சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். நாடாளுமன்ற உறுப்பினர்களாகி மூன்று மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும் இதுவரை கூட்டமைப்பின் நாடாளுமன்றக்குழுக் கூட்டமோ அல்லது கூட்டமைப்பின் நிறைவேற்றுக்குழுக் கூட்டமோ ஒழுங்கான முறையில் நடைபெறவில்லை என்றும், அவ்வப்போது நடைபெற்ற சில கூட்டங்களில் எடுக்கப்பட்ட சில முடிவுகளைக் கூட உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை எனவும் சில உறுப்பினர்கள் கவலை தெரிவித்தனர்.

நீலன் திருச்செல்வம் இருந்த காலத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி எவ்வாறு செயற்பட்டதோ அதேபோன்ற சில நடைமுறைகளையே இரா.சம்பந்தன் கூட்டமைப்புக்குள் செயற்படுத்த முனைவதாகவும் சில உறுப்பினர்கள் குற்றம் சாட்டுகின்றனர். ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை வன்னியில் கடந்த வாரம் சந்தித்தனர். அதன் பின்னர் அவர்கள் வெளியிட்ட அறிக்கையில், விடுதலைப் புலிகளை காரசாரமான முறையில் கண்டித்திருந்தனர். முக்கியமாக கிழக்கு மாகாணத்திலும் கொழும்பிலும் இடம்பெறுகின்ற துப்பாக்கிச் சூடுகள், வன்முறைகள் ஆகியவற்றுக்கு புலிகளே பொறுப்பு என்றும், சமாதானப் பேச்சுவார்த்தையை ஜனாதிபதி சந்திரிகா ஆரம்பிக்க விரும்புவதாகவும், அதனால் புலிகள் உடனடியாக பேச்சுவார்த்தை மேசைக்கு திரும்பவேண்டும் எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அத்துடன் விடுதலைப் புலிகள் சிறுவர்களை படைக்குச் சேர்ப்பதாகவும் போருக்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படுமாக இருந்தால் வடக்கு கிழக்கு அபிவிருத்திக்கான நிதியுதவிகள் கிடைக்காது என்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் அந்த அறிக்கையில் எடுத்துக்கூறப்பட்டிருந்தது.

**அந்த அறிக்கையை கையொப்பமிட்டு இரா.சம்பந்தன் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகளுக்கு அனுப்பியிருந்தால் அதன் பிரதிபலன்களை உடனடியாக கண்டிருக்கமுடியும். உதாரணமாக ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிக்கையின் பின்னரே அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் றிச்சாட் ஆர்மிரேஜ் அமெரிக்காவில் இருந்து புலிகளைக் கண்டித்து அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தார்.**

ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்த அறிக்கை தொடர்பாக வன்மையான கண்டன அறிக்கையொன்றை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உடனடியாக வெளியிட வேண்டும் என கூட்டமைப்பின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இரா.சம்பந்தனிடம் கேட்டிருந்தார். ஏனைய உறுப்பினர்களினதும் கருத்துக்களுடன் அடங்கிய கண்டன அறிக்கை ஒன்றை கஜேந்திரகுமார் ஆங்கிலத்தில் தயார்படுத்தி நாடாளுமன்ற குழுத்தலைவர் என்ற முறையில் இரா.சம்பந்தனிடம் காண்பித்தார். இந்த அறிக்கையில் இரா.சம்பந்தன் கையொப்பம் ஒன்றை பெற்று ஐரோப்பிய ஒன்றியத்திற்கு உடனடியாக அனுப்பிவைப்பதற்கான ஏற்பாடுகளையும் கஜேந்திரகுமார் செய்திருந்தார். ஆனால் அந்த அறிக்கையை வாசித்த இரா.சம்பந்தன், இதில் கையொப்பமிட முடியாது எனவும், மிகவும் கடுமையாக ஐரோப்பிய ஒன்றியத்தை தாக்கி எழுதியிருப்பதாகவும், கஜேந்திரகுமாரிடம் தெரிவித்திருக்கின்றார். அதற்குப் பதிலளித்த கஜேந்திரகுமார், அப்படியானால் நீங்கள் ஒரு அறிக்கையை தயாரியுங்கள் என்று கூறியிருக்கின்றார்.

தான் அறிக்கையை தயாரிப்பதாக கூறிய இரா.சம்பந்தன் இது வரையும் அறிக்கையை தயாரிக்கவில்லை. அதேவேளை ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிக்கைக்கு எதிரான கூட்டமைப்பு அறிக்கையை தமிழ்ப்பத்திரிகையாளர்கள் தினமும் தொலைபேசி மூலம் கேட்டுவந்தனர். இரா.சம்பந்தனை தொலைபேசியில் தொடர்புகொள்ள முடியாதநிலையே ஏற்பட்டிருந்தது. கஜேந்திரகுமாரிடம் தொடர்பு கொண்ட போது தான், அறிக்கையை தயாரிப்பதாக கூறிய சம்பந்தன் பின்னர் தனக்கு சுகயீனமாக இருப்பதாகவும் பிறிதொரு நாளில் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகளை நேரில் சந்தித்து தெளிவுபடுத்துவோம் என சம்பந்தன் கூறியதாகவும் கஜேந்திரகுமார் பத்திரிகையாளரிடம் தெரிவித்துள்ளார். அத்துடன் சம்பந்தன் எம்.பியின் இத்தகைய செயலை கஜேந்திரகுமார் கண்டித்தும் இருந்தார்.

கஜேந்திரகுமார் தயாரித்த அந்த அறிக்கையை கையொப்பமிட்டு இரா.சம்பந்தன் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகளுக்கு அனுப்பியிருந்தால் அதன் பிரதிபலன்களை உடனடியாக கண்டிருக்கமுடியும். உதாரணமாக ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிக்கையின் பின்னரே அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் றிச்சாட் ஆர்மிரேஜ் அமெரிக்காவில் இருந்து புலிகளைக் கண்டித்து அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தார். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஏற்கனவே அந்த கண்டன அறிக்கையை அனுப்பியிருந்தால், றிச்சாட் ஆர்மிரேஜ்ஜின் அந்த அறிக்கையில் புலிகளை மாத்திரம் கண்டித்திருப்பதை தவிர்த்திருக்கமுடியும். ஆகவே மிகப்பாரிய தமிழ்த்தேசியக்கடமை ஒன்றில் இருந்து இரா.சம்பந்தன் தவறிவிட்டார். அல்லது வேண்டும் என்றே செய்திருக்கின்றார் என்றே கருதவேண்டியுள்ளது. சமீபத்தில் அமெரிக்காவிற்கு விஜயம் செய்த இரா.சம்பந்தன் வெளியுறவு இராஜாங்க அமைச்சர் கிறிஸ்ரினா றொக்காவை சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கியும், சந்திக்காமலே தவிர்த்திருக்கின்றார்.

## அதனை உணர்ந்து அவர்கள் செயற்பட வேண்டும்

இத்தகைய நடவடிக்கைகளை நோக்கும் போதும் இரா.சம்பந்தன் போன்ற பழைய தலைவர்கள் இன்னமும் தங்கள் முன்னைய குணாதிசயங்கள் மற்றும் நசிந்துகொடுத்து செயற்படும் தன்மைகள் அல்லது விட்டுக்கொடுத்து போகும் இயல்புகளைக் கொண்டவர்களாகவே இருக்கின்றார்கள். கடந்த ஐம்பது ஆண்டுகாலமாக தமிழ் இனம் எவ்வாறு ஏமாற்றப்பட்டதோ அவ்வாறான ஏமாற்றங்களுக்கும் அடிமைத்தனங்களுக்கும் ஒத்திசைவாகவே இரா.சம்பந்தன் போன்றவர்கள் செயற்படுகின்றார்கள். இடைக்கால நிர்வாக யோசனை தொடர்பாக அரசாங்கமும் யோசனை ஒன்றை முன்வைப்பதற்கு அனுமதிக்கக்கூடாது என கூட்டமைப்பு உறுப்பினர் ஒருவர் இரா.சம்பந்தனிடம் தெரிவித்த போது, அதனை மறுத்ததுடன் அந்த யோசனையில் சந்திரிக்கா என்ன முன்வைக்கின்றார் என்பதை பார்த்தால் நல்லதுதானே என சம்பந்தன் அப்போது கூறியிருக்கின்றார். எனவே அரசாங்கம் என்ன கொடுத்தாலும் அதனைப் பெற்றுக்கொள்வதற்கு தயாராக இருப்பது போலவே சம்பந்தனின் நடவடிக்கைகள் கோடி காட்டுகின்றன.

எனவே தான் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு புனரமைக்கப்பட வேண்டும். சம்பந்தன் போன்ற பழமைவாதிகள் விலக்கப்பட்டு தமிழ்த்தேசிய உணர்வுள்ள இளம் சமுதாயம் உள்வாங்கப்பட வேண்டும். தற்போது கூட்டமைப்பில் உள்ள சில இளம் உறுப்பினர்களுக்கும் சம்பந்தன், மாவை சேனாதிராஜா போன்ற மூத்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற நடவடிக்கைகள் பற்றியும் வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்துவது குறித்தும் எதனையும் சொல்லிக்கொடுப்பதாக தெரியவில்லை. ஈழவேந்தன் போன்றவர்கள் அக்காலத்தில் தமிழ்த்தேசிய எழுச்சிக்கு பாடுபட்டிருந்தாலும் தற்போது தங்கள் சுயவிளம்பரத்திற்காகவும் அதேவேளை கோமாளித்தனமாகவும் நாடாளுமன்றத்தில் நடந்துகொள்கின்றனர். கூட்டமைப்பு உறுப்பினர்கள், ஒவ்வொருவரைப் பற்றியும் இப்பத்தியில் விமர்சிக்க முடியாது. பல்லாயிரக்கணக்கான போராளிகளினதும் பொதுமக்களினதும் குருதியினால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது என்பதையும், அது தமிழ்மக்களின் ஒட்டு மொத்த இறைமை என்பதையும் உணர்ந்து கூட்டமைப்பு உறுப்பினர்களை செயற்படவைக்க வேண்டும்.

– கொழும்பிலிருந்து **ஊரோடி**

**IVRY SUR SEINE (94) இல் 5 வருட காலமாக திறமையான ஊழியர்களைக் கொண்டு வெற்றிகரமாக இயங்கிவருகிறது!**

**SIVAS PROPRETE S.A.S**

SIVAS PROPRETE S.A.S
BP-04 / 53 RUE MOLIERE
94201 IVRY SUR SEINE CEDEX
TEL: 01 46 70 15 08 / Fax: 01 46 70 15 88

-வீட்டின் அனைத்து திருத்த வேலைகள் - மின்சாரவேலைகள்-புல்வெட்டுதல்-பூச்சிக்கு மருந்துவைத்தல்-
மற்றும் வீட்டின் தளபாடங்கள் ஏற்றி இறக்குவதற்கும் உள்ளூர் வெளியூர் பயணங்களுக்கும் நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய வாகனங்கள் சாரதியுடன் வாடகைக்கு உண்டு

E-Mail: Sivas.proprete@wanadoo.fr - site:www.sivas-proprete.com



# இராணுவத் தளபதிகள் மாற்றம் : போருக்கான ஆயத்தப்படுத்தலே...

**– சுபத்ரா –**

**இதன் விளைவு இராணுவப் புலனாய்வுத் துறையையே பெரும் நெருக்கடிக்கு தள்ளிவிட்டது. புளொட் மோகன் போன்ற சிரேஷ்ட புலனாய்வாளர்கள் பலரையும் இழந்து, இராணுவப் புலனாய்வுத்துறை நெருக்கடிக்குள் சிக்கியிருக்கிறது.**

இலங்கையில் இராணுவக் கட்டளைப் பீடத்தில் கடந்த 15ம் திகதி முக்கியமான மாற்றல்கள் செய்யப்பட்டிருக்கின்றன. குறிப்பாக வடக்கு கிழக்குப் பகுதிகளில் நிலைகொண்டிருக்கும் படைகளுக்கான கட்டளைப் பீடங்களை மையமாகக் கொண்டே இந்த மாற்றங்கள் இடம் பெற்றிருக்கின்றன. வடக்கு – கிழக்கு போர் முனையில் யாழ்ப்பாணம், வன்னி, கிழக்கு என மூன்று முக்கிய பிரிவுகள் இருக்கின்றன. இந்த மூன்று இராணுவப் பிரிவுகளையும் உள்ளடக்கிய வடக்கு – கிழக்கு போர் அரங்கில் தான் இராணுவத்தின் பெரும்பாலான படைப்பிரிவுகள் நிலைகொண்டிருக்கின்றன. யாழ் குடாநாட்டில் போர் அரங்கில் உள்ள பிரதான கட்டளைப் பீடத்தின் கட்டுப்பாட்டில் தான் பெருமளவு படைகள் உள்ளன. யாழ் கட்டளைப் பீடத்தின் 51வது, 52வது, 55வது என மொத்தம் நான்கு டிவின்சன்கள் இருக்கின்றன.

வன்னிக் கட்டளைப்பீடத்தின் கட்டுப்பாட்டில் 21வது, 56வது டிவிசன்களும், கிழக்கு பிராந்திய கட்டளை அமைப்பில் மின்னேரியாவைத் தலைமையகமாகக் கொண்ட 23வது டிவிசனும், திருகோணமலையை மையமாகக் கொண்ட 22வது டிவிசனும் உள்ளடங்கியிருக்கின்றன. இவையே விடுதலைப் புலிகளுக்கு என சமர்முனைகளில் முக்கிய பங்கேற்கும் துருப்புக்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இந்த கட்டளைப் பீடங்களில் தான் முக்கியமான மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த மாற்றங்கள் மின்னேரியாவைத் தலைமையகமாகக் கொண்ட 23வது டிவிசனைத் தவிர ஏனைய படைப்பிரிவுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த மாற்றங்கள் கடந்த யூலை மாதம் முதல் திகதி புதிய இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் சாந்த கொப்பேகொட பதவியேற்ற பின்னர் இடம் பெற்ற முதலாவதும் பாரியதுமான கட்டளைப்பீட மாற்றமாகும்.

இராணுவத்தின் செயற்பாடுகளை ஒழுங்கமைக்கும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்த மாற்றங்கள் இராணுவத்தின் புலனாய்வுப் போர் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தும் நோக்கத்திலும் திட்டமிடப்பட்டிருந்ததாகவே கருதப்படுகின்றது. யாழ். படைகளின் கட்டளைத் தலைமையகத்துக்கு மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் நியமிக்கப்பட்டிருப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. ஏற்கனவே யாழ் படைகளின் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால, தொண்டர் படைகளின் தளபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

யாழ் படைகளின் தளபதியாக பொறுப்பேற்று ஒரு வருடம் ஆகாத நிலையில் தான் மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால இங்கிருந்து மாற்றப்பட்டிருக்கிறார். தொண்டர் படைகளின் தளபதியாக இருந்த ஒபன் ஓய்வு பெற்றுச் சென்றால், அப்பதவிக்கு இவரை நியமிப்பதற்காக, இந்த மாற்றத்தைச் செய்தால் இதில் உள்ளடங்கிய விடயம் எதுவுமில்லை எனக் கருதலாம். ஆனால் எற்கனவே தொண்டர் படைகளின் தளபதியாகவும், இராணுவ பிரதி தலைமை அதிகாரியாகவும் மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா இருக்கும் போது ஏற்கனவே இதே இரண்டு பொறுப்புக்களையும் கவனித்துக் கொண்டிருந்த நிலையில் கூட இந்த மாற்றம் நிகழ்த்தப்பட்டிருக்கிறது. இதிலிருந்து ஒன்றுமட்டும் புரிந்து கொள்ளப்பட்டிருக்கின்றது. மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலவைத் தொண்டர் படைத்தளபதியாக நியமிப்பதற்குக் காரணமே யாழ் படைகளின் தளபதியாக மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோனை நியமிப்பதற்காகத்தான் என்பதே அது.

ஏன் இந்த நியமனத்திற்கு படைத்தலைமை முக்கியத்துவம் கொடுத்தது.? மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் ஒரு மூத்த இராணுவப் புலனாய்வு அதிகாரி அடிப்படையில் பீரங்கி படைப்பிரிவு அதிகாரியாக இராணுவத்தில் சேர்ந்த மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் தன்னை இராணுவத்தில் நிலைநிறுத்திக் கொண்டது. இராணுவப் புலனாய்வுத்துறை அதிகாரியாகத் தான்.

இராணுவத்தின் உளவியல் நடவடிக்கைப் பணிப்பாளராக, இராணுவப் பேச்சாளராக என்று இவரது நடவடிக்கைகள் இராணுவத்திற்கு சிறப்பான பெயரைத் தேடிக் கொடுத்திருந்தது. மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் திருகோணமலை 22வது டிவிசன் தளபதியாக இருந்த போதும் இக்காலப்பகுதியில் அவரால் சிறப்பாக செயற்பட முடியாதிருந்தது உண்மை. இப்போது திருமலை முகாம் புலிகளின் முற்றுகைக்குள் இந்தியா மீதான குற்றச்சாட்டை மொழிந்திருக்கிறது. இந்தக் குற்றச்சாட்டின் பொறுப்பாளியாக ஒரு வகையில் இராணுவ தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் கருதப்படுவார். ஆனால் அவர் மீது அப்படியொரு குற்றச்சாட்டு சுமத்தப்படாமலேயே, யாழ் குடாநாட்டுக்கு மாற்றப்பட்டிருக்கிறார்.

குடாநாட்டுக்கு மாற்றப்பட்டிருக்கும் இவர் ஒரு டிவிசனுக்கு கட்டளைத் தளபதியாக பதவி வகித்தார். இப்போது நான்கு டிவிசன்கள் அவரது கட்டளையின் கீழ் வந்திருக்கின்றன. முற்றிலும் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள யாழ்ப்பாணத்துக்கு சுனில் தென்னக்கோன் நியமித்தது அங்கு புலிகளுக்கு எதிரான உளவியல், புலனாய்வு போரைத் தீவிரப்படுத்துவதற்காகவே என்பதில் சந்தேகமில்லை.

இன்னொரு போரை மேற்கொள்வதற்கான தயார் படுத்தலுக்காகவே இந்த மாற்றம் இடம்பெற்றிருக்கிறது.

யாழ். படைகளின் பிரதிக் கட்டளை 22வது டிவிசன் தளபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். இதேபோன்று வன்னிப் படைகளின் கட்டளைத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் லிகித விஜயசூரிய இராணுவத் தலைமை



அதிகாரிகளுக்கான பொதுக்கட்டளை அதிகாரியாக மாற்றப்பட்டிருக்கிறார். வன்னிக்கட்டளை அதிகாரியாக, மேஜர் ஜெனரல் பரமி குலதுங்க நியமிக்கப்பட்டிருக்கிறார். 52வது டிவிசனின் கட்டளை அதிகரியாக பிரிகேடியர் நிமால் ஜெயசூரிய நியமிக்கப்பட்டிருக்கிறார். மொத்தத்தில் பத்துக்கும் மேற்பட்ட பிரிகேடியர்கள் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்த மாற்றங்கள் ஒட்டுமொத்தமாக படைகளைப் பயன்படுத்தி போர் நிலையில் வைத்திருக்கும் நோக்குடனேயே மேற்கொள்ளப்பட்டதேயன்றி இயல்பானதொரு மாற்றமாகக் கருதப்படவில்லை. இதனிடையே இந்த மாற்றங்கள் இடம் பெற்று வரும் சூழலில், இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவு படைப்பாளராக இருக்கும் பிரிகேடியர் கயில ஹெறந்த முன் கூட்டியே ஓய்வுபெற்றுச் செல்ல விண்ணப்பித்திருக்கிறார்.

கருணாவுக்கு உதவிய விவகாரத்தில் சர்ச்சைகளுக்குரிய நபராக கருதப்பட்ட இவர், தனது பதவி விலகலுக்கு பதவி உயர்வில் பாரபட்சம் காட்டப்பட்டதே காரணம் எனக் கூறியிருக்கிறார்.

ஆனால் கருணா விவகாரமே இவரது பதவி விலகலுக்கு காரணம். கருணாவுக்கு உதவி இவருக்கு ஏனைய உளவாளிகளுடன் தொடர்பை ஏற்படுத்தி புலிகளுக்கு எதிராக அழிவு வேலைகளை மேற்கொள்ள பிரிகேடியர் கபில ஹெறந்தவுக்கு வழி சமைத்தது. இதன் விளைவு இராணுவப் புலனாய்வுத் துறையையே பெரும் நெருக்கடிக்கு தள்ளிவிட்டது. புளொட் மோகன் போன்ற சிரேஷ்ட புலனாய்வாளர்கள் பலரையும் இழந்து, இராணுவப் புலனாய்வுத்துறை நெருக்கடிக்குள் சிக்கியிருக்கிறது.

இனிமேலும் இராணுவப் புலனாய்வுத்துறையை வெற்றிகரமாக செயற்படுத்த முடியாதென்ற நிலையில் தான், இவர் பதவி விலக முற்பட்டிருக்கிறார் என்பதே உண்மை. இந்த சமாதான காலத்துள் கூட இராணுவச் செயற்பாடுகள் பாதுகாப்புக்குள்ளாகும் நிலை. இராணுவத்தின் நிலை இதைவிட மோசமாக போயிருக்கும் என்பதே உண்மை. ஆனாலும் இராணுவம் அப்படிப்பட்டதொரு நிலையை நோக்கியே, தன்னைத் தள்ளிக்கொண்டிருக்கிறது.

சுஜி ஜுவல்லரி SUJI JEWELLERY

**சுஜி ஜுவல்லரியின் தங்கநகை சேமிப்புத் திட்டம் 2004**

தங்கநகை உற்பத்தியில் அனைவர் மனங்களிலும் இடம்பிடித்த சுஜி ஜுவல்லரி 2004ம் ஆண்டில் தங்கநகை சேமிப்புத் திட்டம் ஒன்றினையும் உங்களுக்கு அறிமுகப் படுத்துகிறது. எம்முடன் தொடர்புகொண்டு அங்கத்தவர்களாக சேர்ந்து கொள்ளலாம். இந்த தங்க நகை சேமிப்புத் திட்டத்திற்கு ஒவ்வொரு மாதமும் நீங்கள் செலுத்த வேண்டியது 150Sfr மட்டுமே. அதேபோல் ஒவ்வொரு மாதமும் குலுக்கல் முறையில் அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுபவர் 1800Sfr பெறுமதியான நகைகளைப் பெற்றுக்கொள்வதோடு அவர் தொடர்ந்து பணம் செலுத்தத் தேவையில்லை. மாதமொருவர் அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படும் அதேவேளை தொடர்ந்து சந்தாதாரராக இருப்போர் விசேட சலுகைகளோடு வருட இறுதியில் 1800Sfr பெறுமதியான தங்க நகைகளைப் பெற்றுக்கொள்ளலாம். அதிஷ்டசாலியாக தெரிவுசெய்யப்படுவோரின் விபரம் IBC தமிழிலும் மற்றும் ஈழமுரசு பத்திரிகையிலும் வெளியிடப்படும்.

**Neuengass - Passage 3, 3011 Bern** **Telefon 031 311 20 49 / Mobile 079 241 59 02**

# "தமிழைப் பாதுகாக்க ஒன்றுசேர்ந்து போராடுவோம்"

## -ராமதாஸ் - திருமாவளவன் கூட்டாக அறிவிப்பு-

தமிழ் மொழியையும் இனத்தையும் பிற மொழிப் பண்பாட்டுப் படையெடுப்பில் இருந்து காப்பதற்காக இணைந்து போராடுவோம் என்று பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ், விடுதலைச் சிறுத்தைகள் பொதுச் செயலாளர் தொல். திருமாவளவன் ஆகியோர் கூட்டாக அறிவித்தனர். உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ.நெடுமாறன் தலைமையில் சென்னை சேர் பிட்டி தியாகராயர் அரங்கில் கடந்த புதன்கிழமை நடந்த 'அன்னைத் தமிழைக் காப்போம்' என்ற கருத்தரங்கில் இருவரும் கலந்து கொண்டு மேற்கண்ட பரபரப்பான அறிவிப்பை வெளியிட்டனர்.

இவ் விழாவில் ராமதாஸ் பேசியதாவது, மதுரையை மையப் படுத்தி பணியாற்றி வந்த திருமாவளவனை, வட தமிழகத்துக்கு வாருங்கள் என்று அழைத்ததே நான்தான். அவரைத் தம்பி என்று அழைப்பதை பலர் ஆச்சரியத்துடன் பார்க்கின்றனர். அன்றும் இன்றும் என்றும் அவர் என் தம்பிதான். எம் இருவரையும் இனி எக்காலத்திலும், எந்த சக்தியாலும் பிரிக்க முடியாது. திருமாவளவனைப் பற்றி ஒருபோதும் நான் தவறாக விமர்சனம் செய்தது இல்லை. அவராவது என்னை விமர்சித்திருக்கிறார். தம்பி தானே விமர்சிக்கிறார் என்று நான் கோபப் பட்டதில்லை.

வெவ்வேறு தளங்களில் நின்று பல பிரச்சினைகளில் போராடினாலும், ஒட்டுமொத்தமாக தமிழ் மக்களுக்காக, மண்ணுக்காக, மொழிக்காகப் பாடு பட்டு வருகிறோம் என்பதை நாங்கள் மறந்தது இல்லை. ஏதோ சில சூழ் நிலைகள் எங்களைச் சேர விடாமல் செய்தன. அதில் அரசியலும் ஒன்று. அரசியலை ஒதுக்கி வைத்து விட்டுத்தான் இந்த நிகழ்ச்சிக்கு வந்துள்ளேன். சில நேரங்களில் அரசியல் முகமூடி தேவைப்படுகிறது.

இனி இரு இயக்கங்களும் சேர்ந்து தமிழைக் காப்பாற்ற களத்தில் நின்று போராடும். தமிழ்த் திரைப் படங்களுக்கு ஆங்கிலப் பெயர் சூட்டக்கூடாது என்று திரையுலகிற்கு நாங்கள் விடுக்கும் இறுதி வேண்டுகோள் இது. அடுத்த கட்டமாக மாபெரும் போராட்டம் நடத்தி இறுதி எச்சரிக்கை விடுப்போம். இறுதியாக, நேரடியாகப் போராட்டம் நடக்கும் என்றார்.

விடுதலைச் சிறுத்தைகள் பொதுச் செயலர் தொல். திருமாவளவன் உரையாற்றுகையில், அரசியல் வேறு, மொழி வேறு. தமிழரின் ஒற்றுமைக்கும் மேம்பாட்டிற்கும் குறுக்காக அமைவது சாதியே. எனவே இச் சாதியை ஒழிக்க அனைவரும் ஒன்று திரள வேண்டும் என்றார். அரசியலில் எதிரெதிர் முகாம்களாக இருந்து வந்த பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுனர் டாக்டர் ராமதாஸ் மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் பொதுச் செயலாளர் திருமாவளவன் ஆகிய இருவரும் இக்கருத்தரங்கில் ஒன்றாகக் கலந்து கொண்டமை தமிழக அரசியலில் திருப்பம் எனத் தெரிவிக்கப்படுகிறது. அங்கு பேசிய ராமதாஸ் அரசியலை ஒதுக்கி வைத்துவிட்டு தமிழுக்காக இவ்விழாவிற்கு வந்துள்ளேன். அரசியல் என்னையும் திருமாவளவனையும் பிரித்திருக்கலாம். நாம் தமிழன்னையின் புதல்வர்கள். எம்மை இனி எவரும் பிரிக்க முடியாது என்றார்.

தமிழ் மக்களின் நம்பிக்கைக்குரிய தலைவர் ராமதாஸ். மழைத்துளி மண்ணில் தனித்தனியே விழுந்தாலும் வெள்ளமாய் திரண்டு, நதியாக ஓடுகிறது. ஒரு திசையை நோக்கி ஓடும் நதி, இன்னொரு நதியைச் சந்தித்தே தீரும், அதுபோல, நானும் ராமதாசும் தமிழ்த் தாயைப் பாதுகாக்கும் களத்தில் ஒன்று சேர்ந்துள்ளோம்.

சாதிக் கொடுமை தலைவிரித்தாடியபோது, துணிச்சலாக முன் வந்தவர் ராமதாஸ். நூற்றுக்கும் மேற்பட்ட அம்பேத்கர் சிலைகளை அவர் திறந்ததும், ஆதிதிராவிடர் வன்னியர் ஒற்றுமை மாநாடுகளை நடத்தியதும் எனக்குள் சிலிர்ப்பை ஏற்படுத்திய சம்பவங்கள். தமிழர் ஒற்றுமையை நெஞ்சில் ஏந்தி இருப்பதால் அப்போதே 'தமிழ்குடி தாங்கி' என்று அவரைப் பாராட்டி மகிழ்ந்தேன்.

எங்களுக்கு நெருக்கடி வந்த போது நேசக்கரம் நீட்டியவர் அவர். நாங்கள் இருவரும் ஒன்று சேர்ந்திருப்பதைப் பார்த்து தமிழினம் பூரிப் படையும், இந்த ஒற்றுமை நீடித்திருக்குமா என்று சிலர் ஐயப்படுகின்றனர். முரண்பாடுகள் இல்லாமல் மனித வாழ்க்கை இல்லை. கருத்து ஒருமிக்கிற போது களத்தில் ஒற்றுமை வந்தே தீரும். இந்த மண்ணுக்காக, மக்களுக்காக, தாய்மொழிக்காக நானும் ராமதாசும் கைகோர்க்கத் தயார். அவர் மீது காழ்ப்புணர்ச்சி கிடையாது. அவர் அழைக்கும் இடத்தில் போராட்டத்துக்கு வரத் தயார். அரசியல் ரீதியாக ராமதாஸ் எடுக்கிற முடிவு எதுவாக இருந்தாலும், தாய்மொழி காக்கும் போராட்டத்தில் ராமதாசின் கரத்தைப் பற்றி இருப்



பேன். ராமதாசுக்கும் எனக்கும் உள்ள உறவு தொப்புள் கொடி உறவு. பங்காளிச் சண்டையால்தான் நாம் வீழ்ந்தோம்.

தென்னிந்திய நடிகர் சங்கம் என்பதை, தமிழ்நாடு நடிகர் சங்கம் என்று பெயர் மாற்ற முன்வராதவர்கள், அடுத்த முதல்வராக வர ஆசைப்படுகிறார்கள். தமிழினத்தை, மண்ணை, மொழியைப் பாதுகாக்க நாம் சாதியைத் தியாகம் செய்ய வேண்டும். தமிழர் ஒற்றுமைக்காக தான் சிக்கல், ஜாதிக்காக அரிவாள் ஏந்துகிற நிலை மாறி, இனத்துக்காகவும் நாட்டுக்காகவும் இளைஞர்கள் பாடுபடும் நிலை உருவாக வேண்டும். அரசியல் ஆதாயத்துக்காக நாங்கள் ஒன்று சேரவில்லை என்றவர், உலகத் தமிழினத்தின் நன்மைக்காகப் போராடி வரும் மாபெரும் தலைவனே விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் என்றும் குறிப்பிட்டார்.




நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்த பழ. நெடுமாறன், உயர் நீதிமன்றத் தடையை மதித்து தாம்பேசவில்லை என்றும், வரலாற்றுச் சிறப்பு மிகுந்த இந்த நிகழ்ச்சியில் எல்லோரது உணர்வோடும் ஒன்றுகிறேன் என்றும் கூறினார்.திரைப்பட இயக்குநர்கள் வி.சி.குகநாதன், தங்கர்பச்சான், சீமான் ஆகியோர் பேசினர். படத்தின் பெயரில் தமிழ் இருந்தால் மட்டும் போதாது, படைப்பாளிகளாகவும் தமிழர்கள் இருக்க வேண்டும் என்றார் பச்சான். இடைவிடாத கரவொலி, விழா நடைபெற்ற சேர் பிட்டி தியாகராயர் அரங்கம் நிரம்பி வழிந்தது. தமிழ் அறிஞர்கள், பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த இளைஞர்கள் திரண்டிருந்தனர். அரங்குக்குள் ராமதாஸ் வந்தபோது, திருமாவளவன் அவரை எழுந்து நின்று வரவேற்றார். அவரது கையைப் பற்றி மேடைக்கு அழைத்து வந்தார் ராமதாஸ். அப்போது அரங்கில் பலத்த கரவொலி எழுந்தது. இருவரும் பரஸ்பரம் பொன்னாடை அணிவித்தபோதும், ஒருவரையொருவர் பாராட்டிப் பேசும் போதும் அரங்கம் அதிர கைதட்டல் ஓசை எழுந்தது.

நெடுமாறன், ராமதாஸ், திருமாவளவன் ஆகியோர் இணைந்து போராடினால் தமிழகத்தில் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியும், இந்த ஒற்றுமை ஏற்படாவிடில் தமிழ்ச் சமூகம் மன்னிக்காது என்றார் ஓவியர் வீர.சந்தானம். ராமதாஸ், திருமாவளவன் ஆகியோரிடையே பாலமாக இருந்து செயல் பட்டதற்காக மூவேந்தர் முன்னணிக் கழக நிறுவனர் டாக்டர் சேதுராமன், கவிஞர் அறிவுமதி, சந்தானம் ஆகியோர் பாராட்டப்பட்டனர்.

# ஈராக்கியர் மசூதியைக் கைப்பற்ற அமெரிக்கப் படைகள் கடும் சண்டை

அமெரிக்கப் படைகளால் கடந்த சில தினங்களாக கடும் முற்றுகைத் தாக்குதலுக்கு இலக்காகியிருக்கும்

நஷாபின் இமாம் அலி பள்ளி வாசல் இப்போதும் மொக்ததா அல் சதர் ஆதரவு போராளிகளின் கட்டுப் பாட்டிலேயே இருந்துவருவதாக அங்கு சென்று திரும்பியுள்ள ஊடக வியலாளர்கள் தெரிவிக்கின்றினர். அமெரிக்கப் படைகளின் விமானங்களும் டாங்கிகளும் இப்பிரதேசத்தை நோக்கி கடுமையான தாக்குதலை மேற்கொண்டுள்ளன. இதேவேளை,



மசூதியும் மற்றும் அதைச் சுற்றிய வளாகத்தின் கட்டுப்பாடும் தமது படைகள் வசம் வந்து விட்டதாக ஈராக்கிய இடைக்கால அரசு அறிவித்திருந்தாலும் உண்மையில் அவை இன்னமும் ஷியா கிளாச்சி மதகுரு மெக்ததா-அல்-சதரின் ஆட்களின் கட்டுப் பாட்டில்தான் முழுமையாக உள்ளதாக தெரிய வருகின்றது.



அமெரிக்கப் படைகளின் டாங்கிகளும், ஆயுதம் தாங்கிய வண்டிகளும் அவர்களைச் சுற்றி முற்றுகையிட்டுள்ளன. மெக்ததா-அல்-சதருக்கு ஆதரவான படைகள் தாங்கள் நிலை கொண்டுள்ள இடங்களைப் பாதுகாக்கப் போரிடும் துப்பாக்கி வேட்டுகள் நஷாபின் வீதிகளில் ஆங்காங்கே அவ்வப்போது கேட்கின்றன. இமாம் அலி தர்க்காவில் ஆயுதம் தரிகாகாத சுமார் 1000 பேர் உள்ளதாக அங்கு சென்றுள்ள ஊடகவியலாளர் கூறுகின்றார்.

இதேவேளை, ஈராக்கின் பிற இடங்களிலும் ஈராக்கிய போராளிகள் நடாத்திய தாக்குதல்களில் பலர் கொல்லப்பட்டுள்ளனர். ஹ்றல்லா என்ற ஊரில் இராணுவ வாகனத் தொடர்ணி மீது, மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் போலந்துச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார். ஆறு போலந்துப் படையினர் காயமடைந்ததாகவும், அதில் ஒருவர் படுகாயத்துக்கு ஆளானதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அருகில் கார் ஒன்றை நிறுத்திவைத்து அதனை வெடிக்க வைத்து இத்தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. இதேவேளை, பாக்தாத்திற்கு மேற்கில் சுனி முஸ்லிம்கள் பிரதானமாக வாழும் ரமாதி நகரில் ஈராக்கிய போலிசார் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இனந்தெரியாத துப்பாக்கிதாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். கொல்லப்பட்டவர் குற்ற எதிர்ப்புப் பிரிவிற்கு தலைமையேற்றிருந்தவர் என்று கூறப்படுகிறது.

இதுஇவ்வாறிருக்க, மசூதி தமது கட்டுப்பாட்டில் இருக்கிறது என்று கூறியதை ஈராக்கிய அரசினர் தற்போது வாபஸ் பெற்றுள்ளனர் எனத்தெரிய வருகின்றது. ஷியா இசுலாமிய மதப் பிரிவின் தோற்றுநர் அடக்கம் செய்யப் பட்டுள்ள இந்த மசூதிக்குள், இப்போது அனுமதிக்கப்பட்ட செய்தியாளர்கள் சிலர் மட்டுமே அனுமதிக்கப்படுகின்றனர். இவர்கள், மொக்ததா-அல் -சதரின் ஆதரவாளர்களது கட்டுப் பாட்டிலேயே அது இப்போதும் இருந்துவருவதாக கூறுகின்றனர்.

# வங்கதேச எதிர்க்கட்சிகள் கூட்டத்தில் குண்டுகள் வெடிப்பு



வங்கதேசத்தில் நடந்த எதிர் கட்சிகளின் பெரும் கூட்டத்தில் வெடித்த பல குண்டுகளால் 14 பேர் வரை பலியாகி நூற்றுக்கணக்கான வர்கள் காயங்களுக்கு உள்ளாகி யுள்ளனர். காயமடைந்தவர்களில் சிலரது நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் செய்திகள் தெரிவிக் கின்றன.

தலைநகர் தாக்காவில் கடந்த 21ம் திகதி சனிக்கிழமை, நாட்டின் முக்கிய எதிர்கட்சிப் பிரமுகரும் முன் னாள் பிரதமருமான அவாமி லீக் கட்சித் தலைவி ஷேக் ஹஸீனா தனது கட்சித் தலைமை அலுவலகத் தின் முன்பு உரையாற்றிய சிறிது நேரத்திலேயே இக்குண்டுகள் வெடித் துள்ளன. ஷேக் ஹஸீனா காயமின்றித் தப்பியுள்ளார். தான் உரையாற்றிய மேடையை நோக்கி கையெறி குண்டு கள் வீசப்பட்டதாகவும் கட்சித் தொண் டர்கள் ஒரு கவசமாக நின்று மறைத்து தன்னைக் காப்பாற்றினார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இந்த குண்டுவெடிப்பின் எதிரொலி யாக தாக்காவிலும் நாட்டின் மற்ற பெரிய நகரங்களிலும் வன்முறை மிக்க ஆர்ப்பாட்டங்கள் வெடித் துள்ளன. ஆர்ப்பாட்டக்காரர்களால் வீதிகள் தோறும் வாகனங்கள் தீயிட்டு கொளுத்தப்பட்டுள்ளன. வன்முறைகளை அடக்கும் நடவடிக் கையில் பொலிசார் தீவிரமாக ஈடுபட் டுள்ளனர்.

# தீவிரவாதிகள் பிடியில் பிரெஞ்சு நிருபர் ``என் காதலரை விட்டு விடுங்கள்'' பிரெஞ்சு நிருபரின் காதலி கோரிக்கை

(21.08.04)

ஈராக்கில் ஷியா முஸ்லிம்களின் புனித நகரான நஜப்பில் இருந்து அமெரிக்க இராணுவம் வெளியே றாவிட்டால், பணயக் கைதியாக பிடித்து வைத்து இருக்கும் பிரெ ஞ்சு நிருபரை கொன்று விடுவோம் என்று தீவிரவாதிகள் மிரட்டி உள் ளனர். நியூயார்க்கில் உள்ள ``போர் கார்னர்ஸ் மீடியா'' என்ற செய்தி நிறுவனத்துக்காக வேலை செய்து வந்த 36 வயதான நிருபர் மிகா கரேன் அவரது ஈராக்கிய மொழி பெயர்ப்பாளருடன் நசிரியா நகரில், கடந்த வெள்ளிக்கிழமை தீவிரவாதி களால் கடத்தப்பட்டார். தொல் பொருள் குறித்து ஆவணப்படம் எடுத்துவரும் கரேன், ஈராக்கில் கலைப் பொருட்கள் கொள்ளை அடிக்கப்படுவது குறித்து விசா ரணை மேற்கொண்டபோதுதான் கடத்தப்பட்டார்.

அல்ஜசீரா தொலைக்காட்சி, இவர் கடத்தப்பட்டிருப்பதை ஒளிபரப்பி யது. அதில் முகமூடி அணிந்த ஆயு தம் தாங்கிய 5 தீவிரவாதிகள் முன் னால், பிரெஞ்சு நிருபர் உட்கார் ந்து இருந்தார். தீவிரவாதிகள், தாங்கள் தியாகப் படையை (மார் ட்டியர்ஸ் பிரி கேட்) சேர்ந்தவர்கள் என்றும், 48 மணி நேரத்துக்குள் நஜப் நகரில் இருந்து அமெரிக்க இராணுவம் வெளியேற வேண்டும். இல்லாவிட்டால், பணயக் கைதியை கொன்று விடுவோம் என்று எச்சரித் திருந்தனர். நஜப் நகரில் தீவிரவா திகளுக்கும், அமெரிக்க இராணு வத்துக்கும் இடையே கடுமையான சண்டை நடந்து வருகிறது.

இதேவேளை, நிருபர் மிகா கரேன் கடந்த வெள்ளிக்கிழமை தீவிர வாதிகளால் கடத்தப்பட்ட பிறகு அவரைப்பற்றி எந்தத் தகவலும் தெரியவில்லை. இந்த நிலையில் அவரது காதலியும் அவரை திரு மணம் செய்து கொள்ள இருப்ப வருமான மேரி ஹெலன் கார்லேட் டன், தன் காதலர் கடமையை நிறைவேற்றுவதற்காகத்தான் ஈராக் சென்றார். பத்திரிகையாளர் என்ற முறையில், ஈராக்கில் சமீபத்தில் நடந்த நிகழ்ச்சிகளின் விளைவுகள் குறித்து சுயேச்சையாக செய்தி சேகரிக்கும் வேலையை அவர் செய் தார். ஈராக்கின் பண்பாட்டு வரலாறு குறித்து ஒரு செய்திப் படத்தை உருவாக்கினோம். தொல்பொருள் சிறப்பு வாய்ந்த மையங்கள் எல் லாம் போர் நடக்கும் யுத்த பூமி யில் உள்ளன. எனவே அவை பாது காக்கப்பட வேண்டும். இதற்காகவே அவர் ஈராக் சென்றார். எனவே அவரை விடுவிக்கும்படி கடத்தல் காரர்களை கேட்டுக்கொள்கிறேன் என்று வேண்டுகோள் விடுத்து இருக் கிறார்.

# முரசொலிமாறன் தபால் தலை வெளியீட்டு விழா

## - ஜெயலலிதா கண்டனம் -





முரசொலி மாறன் அஞ்சல் தலை வெளியீட்டு விழா தி.மு.க.வால் நடத்தப்படும் குடும்ப நிகழ்ச்சியாக மாற்றப்பட்டு விட்டது என்று முதல மைச்சர் ஜெயலலிதா கண்டனம் கூறியுள்ளார். இதுகுறித்து ஜெயல லிதா வெளியிட்டுள்ள அறிக்கையில், அனைத்து மத்திய அரசு விழாக் களையும் தனது குடும்ப விழாக்களாக அல்லது தி.மு.க. விழாக்களாக மாற்றுவதன் மூலம், தி.மு.க். தலைவர் கருணாநிதி, தான் இன் னமும் தமிழ்நாட்டின் ஆட்சி அதிகா ரத்தில் இருப்பதைப் போன்ற ஒரு தோற்றத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்.


மத்திய அரசின் தரைவழிப் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் கப்பற்போக்குவரத்துத் துறை அமைச்சரான டி.ஆர். பாலுவின் விருப்பத்தின் பேரில், அண்மை யில், சென்னைத்துறை முகத்தில் ஒரு பெரிய அரசு விழாவுக்கு ஏற் பாடு செய்யப்பட்டது. இந்த விழாவின் முக்கிய விருந்தினர் யார் தெரியுமா? வேறு யார்? தி.மு.க. தலைவர் கரு ணாநிதி தான்! சென்னைத் துறை முகத்திலோ, மத்திய அமைச்சரவை யிலோ எந்த பதவியிலும் இல்லாத போதும் அவர் இத்தகைய வாய்ப் புகளைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி கொள்வார்.

கருணாநிதி துறைமுகத்தில் தூர் வாரும் இயந்திரம் மற்றும் சுமைதூக்குப் பொறி ஆகியவற் றைத் துவக்கி வைத்த காட்சியை நாம் காண நேர்ந்தது. இந்த ஒட்டு மொத்த அரசு நிகழ்ச்சியுமே ஒரு அரசியல் நிகழ்ச்சியாகவும், குடும்ப நிகழ்ச்சியாகவும் மாற்றப்பட்டு விட்டது. கருணாநிதி எந்தத் தகுதி யின் அடிப்படையில் சென்னைத் துறைமுகத்தில் தூர் வாரும் இயந் திரம் மற்றும் சுமை தூக்குப் பொறி ஆகியவற்றைத் துவக்கி வைத்தார் என்பது அனைவருக்கும் ஒரு புரி யாத புதிராகவும், வியப்பாகவும், இருந்தது.

இந்த வரிசையில், மறைந்த முரசொலி மாறனை கவுரவிக்கும் வகையில், 17.8.2004 அன்று அவரது அஞ்சல் தலை வெளியிடப்பட்டது. இந்திய அரசின் தபால் துறையின் அஞ்சல் தலை வெளியீட்டு நிகழ்ச் சிக்குக் குடும்ப அழைப்பிதழ் பெரு மளவில் அச்சிட்டு வழங்கப்பட்டு ள்ளது. தற்போது தயாநிதி மாறனின் கட்டுப்பாட்டில் உள்ள அஞ்சல் துறை யின் வரலாற்றிலேயே முதன் முறை யாக, கருணாநிதியும், தயாநிதி மாறனும் மத்தியில் தங்களுக்குள்ள செல்வாக்கை தவறாக பயன்படுத்தி முரசொலி மாறனின் அஞ்சல் தலை வெளியீட்டு விழா நிகழ்ச்சிக்கான அஞ்சல் தலை ஒட்டப்படாத அழைப் பிதழ்களை ஒரு இலட்சம் தி.மு.க. உறுப்பினர்களுக்கு விநியோகிக் கும்படி அஞ்சல்துறை ஊழியர்களைக் கட்டாயப்படுத்தி உள்ளார்கள் என்று பத்திரிகைச் செய்திகளில் இருந்து தெரிய வருகிறது.

# சேலத்தில் தி.மு.க. சிறப்பு மாநாடு





தி.மு.க.வின் சிறப்பு மாநாடு சேலத்தில் நடைபெற்றுள்ளது. கடந்த 21ம், 22ம் திகதிகளில் இம்மாநாடு பாரியளவில் நடத்தப்பட்டுள்ளது. தி.மு.க. தலைவர் கருணாநிதியின் எண்பதாவது பிறந்த நாளையும், அண்மைய நாடா ளுமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணி அடைந்த பெரு வெற்றியையும் கொண்டாடும் விதமாக இம்மாநாடு நடத்தப்பட்டுள்ளது.

# இங்கிலாந்து இராணுவ வீரரின் தாயார் வெளிநடப்பு

ஈராக்கில் பணிபுரிந்த இங்கிலாந்து இராணுவ வீரர் 19 வயது கோர்டன் பஸ்ராவில் தீவிரவாதிகள் தாக்குத லுக்கு பலியானார். அவரது தாயார் ரோஸ் ஜெண்டில், தங்கை மேக்சின் ஆகியோர் பிரதமர் டோனிபிளேரைச் சந்திக்கச் சென்றனர். அவர் விடுமுறையில் இருப்பதால், துணைப் பிரதமர் ஜான்பிரஸ்காட்டைச் சந்தித் தனர்.

இச்சந்திப்பின்போது, துணைப் பிரதமர் அளித்த பதில்களால் கோபம் கொண்ட ரோஸ், அந்த சந்திப் பில் இருந்து வெளிநடப்புச் செய்தார். வெளியே வந்த அவர் நிருபர்களிடம், கோர்டான் போன்ற இளைஞர்களை ஏன் போர் முனைக்கு அனுப்ப வேண்டும் என்ற என் கேள்விக்கு பிளேர் பதில் அளிக்க வேண்டும். இது நமது போர் இல்லை. இது அமெரிக்காவின் யுத்தம், எனவே ஈராக்கை விட்டு இங்கிலாந்து இரா ணுவ வீரர்கள் வெளியேற வேண்டும் என்றவர், துணைப் பிரதமர் முட்டாள் தனமாகப் பேசியதால் தான் வெளி நடப்புச் செய்தததாகக் கூறினார்.

# உங்கள் தலைமுடி உதிர்கின்றதா?

## தலைமுடி தொடர்பான வேறேதும் பிரச்சினைகளா ?

## இன்றே உபயோகியுங்கள் NATURINA®

**இது ஓர் புதுமையான, இயற்கை மூலிகைகளைக்கொண்ட ஓர் துரித நிவாரணி!**

* Naturina வின் புதிய தயாரிப்புக்கள். முன்னரைவிட உயர்ந்த தரத்தில் தற்போது உருவாக்கப்பட்டுள்ளன.
* தலைமுடிகளைப் பராமரிப்பதில் கடந்த 5 வருடங்களாக ஐரோப்பாவின் முதல்தர தயாரிப்பாக விளங்குவது Naturina தயாரிப்புக்களே!
* தலைமுடி உதிர்வு, முடி மெல்லியதாக மாறுதல், முடியில் ஏற்படும் அழுக்கு, பொடுகு போன்றவை அறவே நீக்கி தலைமுடியை நன்றாக வளரச்செய்கிறது.
* முற்றிலும் இயற்கையானது!
* பக்கவிளைவுகளற்றது.
* வேறுபட்ட வடிவங்களில் - மாறாத தரத்தில் உங்கள் தலைமுடிகளை பராமரிக்கச் சிறந்த ஓர் நிவாரணி - Naturina




**Naturina vital & beautiful**

* *Naturina வின் புத்தம்புதிய அறிமுகம்!*
* *உங்களது முகத்தில் அல்லது தோலில் கரும்புள்ளிகள் ஏதும் காணப்படுகின்றனவா?*
* *இன்றே Naturina pigment Bleachinng emulsion ஐ உபயோகியுங்கள்!*
* *இயற்கையான மூலிகைகளைக் கொண்டது, பக்க விளைவுகள் அற்றது!*
* கரும்புள்ளிகள், சுருக்கங்கள் என்பவற்றை இல்லாமற் செய்து முகத்தை அழகுறச் செய்ய ஓர் சிறந்த நிவாரணி.




**குறிப்பு:** *ஐரோப்பாவில் வாழும் யாவரும் Naturina தயாரிப்புக்களை விற்பனை செய்ய முடியும். நீங்கள் Naturina தயாரிப்புக்களை விற்க விரும்பினால் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:*

**Intercare Handels GmbH**

**In der Fuchshoehle 4, 59069- Hamm- Germany**
**Tel: 0049 1805 915910 + 0049 2385 92080**
**Fax: 0049 1805 915920 + 0049 2385 920821**
**UK Order line 08 703501707**
**Internet: www.naturina.de**

**தற்போது!**
**விசேட கழிவுகளும், பரிசில்களும் வழங்கப்படுகின்றன!!**


---

# அனைத்து நூல்களும் மலிவு விலையில்!

## அரிய சந்தர்ப்பத்தை நழுவவிடாதீர்கள்.

5 ஈரோ


தமிழீழ விடுதலைப் புலிகள் பிரெஞ்சுக் கிளையின் அனுசரனையுடன், ஈழத்தமிழர் உதைபந்தாட்டச் சம்மேளனம் (பிரான்ஸ்) தனது 10வது, ஆண்டு நிறைவையொட்டி நடாத்தும் லெப்.கேணல் விக்ரர் (ஒஸ்கா) ஞாபகார்த்த சுற்றுக்கிண்ணத்திற்கான, சர்வதேச அளவிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி நடைபெறும் மைதானத்தில், பூபாளம் பொத்தகசாலை நடாத்தும் சிறப்பு மலிவு விற்பனை




~~23ஈரோ~~

~~10ஈரோ~~

5ஈரோ
மட்டுமே!
















**தமிழ் மக்களின் அறிவுக்களஞ்சியமாய்...**

# பூபாளம் பொத்தகசாலை

**22, Rue Perdonnet, 75010 Paris, France - Tél: 01 40 05 95 15**

**காலம்:- 29.08.2004**
**நேரம்:- காலை 09:00 மணி**
**மைதானம்:-**
**STADE JULES LADOUMEQUE**
**Place de la Porte de Pantin,**
**75019 Paris**

# சந்திரிகாவின் புதிய யாப்பு தமிழருக்கு என்ன பயன் தரும்?

எந்தப் பிரச்சனைகள் எப்படியிருந்தாலும் முதலில் அரசியல் அமைப்பில் திருத்தம் கொண்டுவரவேண்டும். இல்லையேல் புதிய அரசியல் அமைப்பை உருவாக்கவேண்டும்.

சந்திரிகா அம்மையாரின் ஒரே நோக்கம் இன்று இதுதான். அம்மா காட்டிய வழியில் மகள் திட்டமிடுகிறார்.

1970–ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் சந்திரிகாவின் அம்மா சிறிமா பண்டார நாயகா இலங்கையை ஒரு சோஷலிசக் குடியரசாக்குவதற்கு மக்களிடம் ஆணைகேட்டார்.

இத் தேர்தலில் வெற்றிபெற்று நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகும் பிரதிநிதிகள் அரசியல் நிர்ணயசபை உறுப்பினர்களாகவும் செயல்பட்டு இலங்கையை ஒரு சோஷலிசக் குடியரசாகப் பிரகடனப்படுத்தும் புதிய அரசியல் யாப்பை உருவாக்குவதற்கு சிறிமா அம்மையார் மக்களிடம் ஆணை கேட்டார்.

சிறிமா தலைமையில் இடதுசாரிகளும் சேர்ந்து போட்டியிட்ட ஐக்கிய முன்னணிக்கு மக்கள் புதிய அரசியல் யாப்பை உருவாக்க ஆணைவழங்கினர்.

லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர்களில் ஒருவரான டொக்ரர் கொல்வின் ஆர்டி. சில்வா, அரசியல் யாப்புக்குப் பொறுப்பான அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

அரசியல் நிர்ணய சபையின் முதல் கூட்டம் கொழும்பு நவரங்ககல மண்டபத்தில் கோலாகலமாக தொடக்கி வைக்கப்பட்டது.

புதிய அரசியல் அமைப்பில் இணைத்துக்கொள்வதற்காக அரசியல் கட்சிகளிடமிருந்து அடிப்படைப். பிரேரணைகளைச் சமர்ப்பிக்குமாறு அமைச்சர் கொல்வின் ஊடகங்கள் மூலமும் அறிவித்திருந்தார்.

புதிய அரசியல் யாப்பினால் தமிழ் மக்களுக்கும் பயன்கிடைக்குமா, அரசியல் நிர்ணய சபைக்கூட்டத்தில் கலந்துகொள்வதில் அர்த்தமுண்டா என்பதுபற்றியெல்லாம் தந்தை செல்வா தலைமையிலான இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிப் பிரதிநிதிகள் கூடி ஆராய்ந்தனர். கட்சியின் செயற்குழுவும் பொதுக்குழுவும் கூட இதுபற்றி நீண்ட நாட்கள் பரிசீலனை செய்தன.

இதேசமயம் தமிழ் அரசியல் கட்சியினரை வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவராக இருந்த திரு.ஞானமூர்த்தி தமது இல்லத்திற்கு அழைத்து தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட்டுச் செயற்படவேண்டிய அவசியத்தை விளக்கி, ஒற்றுமைப்படுத்த நடவடிக்கை எடுத்தார்.

இதன்படி தமிழ் மக்களின் கோரிக்கைகள் அடங்கிய ஆறு அம்சத்திட்டமொன்று இக் கூட்டத்தில் தயாரிக்கப்பட்டது.

இந்த ஆறு அம்சத்திட்டத்தை அப்பொழுது யாழ். நகர மேயராக இருந்த திரு. சி. நாகராஜா பிரதமர் சிறிமாவுக்கு அனுப்பிவைத்தார். இதுபற்றி மேலும் நேரில் விளக்கம் தருவதற்கு தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் காத்திருப்பதாகவும் ஆறம்சத் திட்டத்துடன் அனுப்பிய கடிதத்தில் நாகராஜா குறிப்பிட்டிருந்தார்.

இந்த ஆறம்சத்திட்டமோ, கடிதமோ கிடைத்ததென்று கூட பல மாதங்களாக பிரதமரிடமிருந்து ஒரு பதில் வந்ததில்லை.

இருந்தாலும், புதிய அரசியல் யாப்பில் இணைத்துக்கொள்வதற்காக தமிழ் மக்கள் சார்பில் சில பிரேரணைகளைத் தயாரித்து, தமிழரசுக் கட்சி எம்.பிக்களின் பெயரில் தனித்தனியாக அரசியல் யாப்பு அமைச்சருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

அரசியல் நிர்ணயசபைக் கூட்டத்திலும் பங்கெடுத்துப் பார்ப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

அடிப்படைப் பிரேரணைகள் பரிசீலனைக்கு எடுக்கத் தொடங்கியதும் தமிழரசுக் கட்சிப்பிரதிநிதிகளும் கலந்துகொள்ளச் சென்றனர். வட்டுக்கோட்டை தியாகராஜாவும், நல்லூரர் அருளம்பலமும் ஆரம்பம் முதல் கடைசிவரை இக் கூட்டங்களில் கலந்துகொண்டனர்.

தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகள் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட அடிப்படைப் பிரேரணைகள் யாவும் தமிழ் மக்களின் உரிமைகளையும் தமிழர் தாயகத்தில் சுயாட்சி அமைக்கக்கூடியனவாகவுமே இருந்தன.

இந்தப் பிரேரணைகள் ஒவ்வொன்றையும் சபையில் படித்த அமைச்சர் கொல்வின், தமது விளக்கத்தைத் தெரிவித்து, சபையில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளாமலே நிராகரித்தார். இதன் பின்னரும் அரசியல் நிர்ணயசபைக் கூட்டத்தில் கலந்துகொண்டு, புதிய அரசியல் யாப்பை உருவாக்குவதில் உடந்தையாக இருப்பதில் அர்த்தமில்லையென்பதை, அரசியல் நிர்ணய சபைக் கூட்டத்திலேயே தந்தை செல்வா அறிவித்தார். அதன் பின்னர் தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகள் அக்கூட்டங்களில் கலந்துகொள்ளவில்லை.

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின்படி, தமிழ் மக்கள் தமது தாயகத்தில் அமைக்கவிருக்கும் அரசுக்குப் புதிய அரசியல் யாப்பைத் தயாரிப்பதற்காக 'அவர்கள் தமது அரசியல் நிர்ணய சபையை வேண்டுமானால், கூட்ட வேண்டியே இருக்கும்.'

இனப்பிரச்சனைக்கு சுமுகமானமுறையில் நிரந்தரத் தீர்வை சுலபமான முறையில் காண்பதற்குக் கிடைத்த சந்தர்ப்பத்தினையும், சிறிமாவின் ஐக்கிய முன்னணி அரசு தவறவிட்டது.

72ஆம் ஆண்டில் தியாகராஜா, அருளம்பலம் ஆகிய இரண்டு தமிழ்ப் பிரதிநிதிகளும் தமிழர் சார்பில் கையெழுத்திட்ட, இலங்கையை ஒரு ஜனநாயக பௌத்த சோஷலிசக் குடியரசாக்கும் புதிய அரசியல் யாப்பு நிறைவேற்றப்பட்டது.

இந்தப் புதிய அரசியல்யாப்பை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லையென்பதை சிறிமா அரசுக்கு சவால்விட்டு, தமது காங்கேசன்துறைத்தொகுதி உறுப்பினர் பதவியைத் துறந்து மீண்டும் உபதேர்தலில் போட்டியிட்டு அமோகவெற்றியீட்ட தந்தை செல்வா நிருபித்தார்.

இதன் பின் 1978–ஆம் ஆண்டில் ஜே.ஆர். ஜெயவர்த்தனா கொண்டுவந்து நிறைவேற்றிய நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி ஆட்சியைக் கொண்ட அரசியல் யாப்பையும் தமிழ்ப் பிரதிநிதிகளும், அவர்கள் மூலம் தமிழ் மக்களும் ஏற்றுக்கொள்ளவில்லை.

இதன்பின் ஆட்சிக்கு வந்த சந்திரிகா பண்டாரநாயகா –குமாரதுங்க நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்கப் போவதாக வாக்குறுதியளித்தபோதிலும் பத்துவருடங்கள் ஆட்சியிலிருந்தபின், பத்தாவது வருடத்தின் இறுதியில்தான் நாடாளுமன்றத்துக்கு



அதிகாரங்களை வழங்கும் புதிய அரசியல் யாப்பை உருவாக்கப்போகிறாராம்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறை இருந்தாலென்ன, நாடாளுமன்றத்துக்கே சகல அதிகாரங்களும் உள்ள ஆட்சிமுறை இருந்தாலென்ன? இவற்றினால் தமிழ்மக்களுக்கு என்னபிரயோசனம். இரண்டு ஆட்சிமுறைகளிலும் தமிழ் மக்கள் தமது உரிமைகளையும் உடமைகளையும் இழந்ததுதான் கண்ட பலன்.

இப்பொழுது ஜனாதிபதி சந்திரிகாவின் யோசனைப்படி நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக்கொண்டு செயல்படவிருக்கும் அரசியல் நிர்ணயசபை நாடாளுமன்றத்துக்கே சகல அதிகாரங்களையும் வழங்கும் புதிய அரசியலமைப்பை உருவாக்கவேண்டும்.

நாடாளுமன்றத்துக்கு சகல அதிகாரங்கள் வழங்கப்பட்டாலும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை தொடர்ந்திருந்தாலும் தமிழ் மக்களுக்கு எந்த அதிகாரமும் கிடைக்கப் போவதில்லை.

இதுவரை ஆட்சிபீடத்திலமர்ந்த எந்த அரசாங்கத்துக்கும் ஒத்துழைப்பு வழங்கிய தமிழ்ப் பிரதிநிதிகள் தமிழ் மக்களுக்கு எந்த உரிமையையும் பெற்றுக்கொடுத்ததில்லை. 1965 முதல் 1970 ஆம் ஆண்டுவரை ஆட்சி செய்த டட்லி சேனநாயகாவின் தேசிய அரசுக்கு தந்தை செல்வாவின் தமிழரசுக்கட்சி ஆதரவும் ஒத்துழைப்பும் கொடுத்தும் கூட இரகசிய ஒப்பந்தத்தில் டட்லி கொடுத்த வாக்குறுதிகூட காற்றில் கரைந்தது.

1977–ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் இழந்த தமிழரசை மீண்டும் அமைப்பதற்குத் தமிழ்மக்கள் அளித்த ஆணையை சிங்களப் பெரும்பான்மை மதிக்கவே இல்லை. கடந்த பொதுத் தேர்தலில் தமிழர் தாயகத்தில் இடைக்காலத் தன்னாதிக்க அதிகார சபை அமைப்பதற்கு தமிழ் மக்கள் ஆணைவழங்கியிருக்கின்றனர். புதிய அரசியல் யாப்புக்கு ஆணை வழங்கவில்லை. எனவே புதிய அரசியல் யாப்பை உருவாக்கவிருக்கும் அரசியல் நிர்ணய சபையில் தமிழ்ப் பிரதிநிதிகள் கலந்துகொள்ளவேண்டிய தேவையுமில்லை.


வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின்படி, தமிழ் மக்கள் தமது தாயகத்தில் அமைக்கவிருக்கும் அரசுக்குப் புதிய அரசியல் யாப்பைத் தயாரிப்பதற்காக 'அவர்கள் தமது அரசியல் நிர்ணய சபையை வேண்டுமானால், கூட்ட வேண்டியே இருக்கும்.'

**எஸ்.எம்.ஜி**

# 2ம் ஆண்டு நினைவஞ்சலி

**தோற்றம்**

31 * 08 * 1968



**மறைவு**

23 * 08 * 2002


திதி - 30.08.2004

## சுந்தரமூர்த்தி இராசவேல் (கக்கன்)

(வல்வெட்டித்துறை)

ஈழத்து வல்வைத் தமிழ் பெற்றெடுத்த இளையவனே!
இசைபாடும் கடலோரம் கதைபேசி வளர்ந்தவனே!!
இனிய உறவுகள், இளைய நண்பர்கள் வல்வையின் வசந்தகாலம் அன்று
காலத்தின் கட்டாயம் ஊர்விட்டு உறவுவிட்டு நாடுவிட்டு தேசம்விட்டு வந்தாய்
வந்தாரை வரவேற்கும் பிரான்ஸ் மண்ணில் தஞ்சமானாய்
தங்க இடம் தந்து வேலை தந்த நாட்டுக்கு நன்றியுடையவன் ஆனாய்
உன் கடமை உனக்காக மட்டுமல்ல ஊருக்காய் உறவுக்காயென வாழ்ந்தாய்
பாசம் நேசம் கொண்டு உன் உறவுக்காய் மட்டுமல்ல ஊர் உறவும் வாழ உழைத்தாய்
உன் அன்பால் இனிய நண்பர்களைத் தேர்ந்தெடுத்தாய்
உனக்காய் உன் நண்பர்கள் அவர்களுக்காய் நீயென வாழ்ந்தாய்
வசந்தகால வாழ்விலே இனிய துணைதனைத் தேடிக்கொண்டாய்
இரண்டு மூன்றானது, ஆம் அழகு மகன் வந்தான்
வசந்தகாலம் அது இனிய காலம்
குடும்பத்துக்காய் உன் பணி தொடர்ந்தாலும் ஏழை இளைஞர்களுக்கு வழிகாட்டி ஆனாய்
உன்னால் வந்து வாழ்வோர் எத்தனை?
இன்று அத்தனை பேர் மனங்களிலும் ஆறாத வேதனை
ஆம் கக்கனே! இன்று நீ இவ்வுலகில் இல்லை
விடியலைத் தேடிப் புறப்பட்டாய் விடியாமலே இருளோடு இருளானாய் கக்கனே
கார் பவனி செய்வதில் நீயோ வல்லவன்
காலனோ உன்னை மீறி உன் உயிர் பறித்ததில் வல்லவனானான்
நினைக்க மறந்தான் காலன் உன்னை நம்பி எத்தனை பேர் வாழ்கிறார் என்று
விம்முகின்றது நெஞ்சம் விடைகிடைக்க முடியாது தவிக்கின்றது உள்ளம்
கக்கனே காலத்தின் கோலம் தென்னிந்தியாவில் உனை இழந்தோம்
காண்போமா இனி?

தகவல் - குடும்பத்தினர்.



# சாத்திரியாரும் குருப்பெயர்ச்சியும்

`சும்மா இருந்த சங்கை ஊதிக்கெடுத்தானாம் ஆண்டி' என்ற பழிமொழியை மாற்றி `சும்மா இருந்த சுந்தரியைச் சொல்லிக் கெடுத்தானாம் பேய்க்குட்டி' என்று சொல்லிப் புலம்பவேண்டும்போலிருந்தது அரியகுட்டியருக்கு. பின்னே இருக்காதா என்ன? அவர் எவ்வளவு தூரம் பொத்தி மறைத்து வைத்திருந்த சங்கதியை பேய்க்குட்டி பொசுக்கென மாருதப்புரவீகசுந்தரியிடம் போட்டுடைத்ததை அவரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

இந்தியாவிலிருந்து வந்து கிச்சான் நகைமாளிகை மாடியில் தங்கியிருந்து சாத்திரம் சொல்லும் ஜகற்குரு ஜெகஜால ஜம்புலிங்க சாத்திரியார் குருப்பெயர்ச்சியை முன்னிட்டு தனது கட்டணத்தை ஐம்பது வீதமாகக் குறைத்திருக்கின்றார் என்பதையும் இது ஒரு அரிய சந்தர்ப்பம் என்பதையும் பேய்க்குட்டி சொல்லி வைத்ததன் பின்னர் மாருதப்புரவீகசுந்தரியாவது பொறுமையாக இருப்பதாவது. இதைப் புழுகு மணியம் சொல்லிவைத்திருந்தாலாவது அதை அவனின் புழுகு எனச் சொல்லிச் சமாளித்திருக்கலாம். ஆனால் சொன்னவனோ சந்திரிகாவின் நம்பிக்கைக்குப் பாத்திரமான கதிர்காமர் போன்ற மாருதப்புரவீகசுந்தரியின் விடுப்புப் புடுங்கல்களுக்குப் பாத்திரமான பேய்க்குட்டியல்லவா. தனக்குக் கொஞ்சம் குரல்வளம் இருந்தாலாவது `சொன்னது நீதானா சொல்....சொல் என் பேய்க்குட்டியே என்றாவது பாடி' துக்கத்தைக் கொஞ்சம் குறைத்திருக்கலாம் என்றுகூடத் தோன்றியது அரியகுட்டியருக்கு. ஆனால் என்ன செய்வது அந்தப் பாக்கியம்தான் தனக்கில்லையே என அலுத்துக்கொள்வதைத் தவிர அவரால் ஒன்றும் சொல்ல இயலவில்லை.

ஜகற்குரு ஜெகஜால ஜம்புலிங்க சாத்திரியார் ஜெயலலிதாவிற்கும் சாத்திரம் சொன்னவராம். உள்ளங் கையைப் பார்த்தா உள்ளதெல்லாம் சொல்லுவாராம். சாதகத்தைப் பார்த்தா சரித்திரத்தையே சொல்லுவாராம் என ராஜேந்தர் பாணியில் பேய்க்குட்டி சேட்டிவிக்கற் தந்தபிறகும் சும்மா இருக்க சுந்தரியால் முடியவில்லை. எப்படியும் ஜகற்குரு ஜெகஜால ஜம்புலிங்க சாத்திரியாரிடம் குருப்பெயர்ச்சிக்கான பலனைக் கேட்டேயாகவேண்டுமென ஜே.வி.பி பாணியில் முரண்டுபிடிக்கவேறு ஆரம்பித்துவிட்டாள்.

அரியகுட்டியர் உண்மையிலேயே கவலைப்பட ஆரம்பித்துவிட்டார். மாருதப்புரவீகசுந்தரியை சாத்திரம் கேட்கக் கூட்டிக்கொண்டு போவது ஒன்றும் அவருக்குப் பெரிய வேலையில்லை. ஆனால் ஜகற்குரு ஜெகஜால ஜம்புலிங்க சாத்திரியார் ஜெயலலிதாவிற்கும் சாத்திரம் சொன்னவராம் என்பதுதான் அவருக்கு கழுதை உதை உதைத்தது. ஜெயலலிதாவிற்கு தோஷ பரிகாரமாக யானைக்குட்டி ஒன்றை கோயிலுக்குத் தானமாகக் கொடுக்கச்சொல்லிச் சொன்ன இந்தச் சாத்திரியார் பருமனில் ஜெயலலிதாவிற்குச் சளைக்காத உருவத்தையுடைய தன் மனைவியைக் கண்டால் எங்கே அதே தோஷ பரிகாரத்தைச் சொல்லித் துலைத்துவிட்டால் என்னாவது என்பதுதான் அவர் கவலை. அப்படித்தான் யானையைத் தானமாகக் கொடுக்க முன்வந்தாலும் இங்கு எந்தக் கோயிலாவது அதைப் பெற்றுக்கொள்ள முன்வருமா என்பதும் அவரது உபரிக் கவலை. செருப்புக்கள் வைக்கவே இடமில்லாத நிலையில் எல்லாச் சாமிகளுக்கும் பொதுவாக 40 சதுரமீற்றர் பரப்பளவைக் கொண்டிருக்கும் இந்தக் கோவில்களில் யானையைக் கட்டிவைக்க எங்கே இருக்கிறது இடம் என்பது அரியகுட்டியரின் நியாயனமான கவலையில் ஒன்றல்லவா.

ஆனால் இந்தக் கவலைகள் நியாயங்கள் எல்லாம் அவரது மனதுக்குள் மட்டும்தான். ஆனால் அதை வெளிக் காட்ட முடியாதபடி தன் பேச்சுரிமை சுமார் 25 வருடங்களுக்கு முன்னர் ஒரு சுப நேரத்திலிருந்து மட்டுப் படுத்தப்பட்டு விட்டதையும் அவர் எண்ணி இலேசான துக்கமடைந்தார்.



–பிறேம்–

உச்சி வெய்யில் மண்டையைப் பதம் பார்க்க மனைவியில் இரட்டை நாடிச் சரீரம் மேல்மூச்சுக் கீழ்மூச்சு வாங்க அரியகுட்டியர் கிச்சான் நகைமாளிகை தேடிக்கொண்டிருந்தார். ஒருவாறு கிச்சான் நகைமாளிகை கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது. சிங்களத் தலைவர்கள் வடக்கு, கிழக்கு மலையகம், முஸ்லீம்கள் எனத் திண்டாடி வைத்திருந்ததைப்போல உள்ளே சலூன், வீடியோ, ரெலிக்காட் எனக் குட்டிக் கடைகளாகப் பிரியுண்டு காணப்பட்டது கிச்சான் நகைமாளிகை. அரியகுட்டி தம்பதிகளைக் கண்டதும் பல்லெல்லாம் வாயாக அட சீ வாயெல்லாம் பல்லாக வரவேற்றார் கல்லாவில் இருந்த கிச்சான் உரிமையாளர் பிச்சா மூர்த்தி. சாத்திரம் கேட்பவர்கள் சாத்திரியார் சொல்லும் அதிர்ஸ்ட கற்களின்படி நகையேதும் செய்ய முற்பட்டால் தனக்கும் கொஞ்சம் தேறும் என்பதே அவர் புன்னகைக்குள் ஒளிந்திருக்கும் பொன்னகை இரகசியம். நகை செய்யாவிடினும் தன் சலூனுக்கோ அல்லது வீடியோக் கடைக்கோ வாடிக்கையாளரைத் தேடிக்கொள்ளலாம் என்பது அவர் நப்பாசை.

தட்டுமுட்டுச் சாமான்கள் போடுமிடம் சாத்திரியாருக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. தன்னைப் போலவே பலரும் சோடிகளாக வருகை தந்து பலன் கேட்பதற்காக தூங்கிக்கொண்டிருப்பதைக் கண்ட அரியகுட்டியருக்கு ஒருவித ஆத்மசுகம் ஏற்பட்டது. அகதி அந்தஸ்திற்காக, விசாவிற்காக, அலுக்கேசன் பமிலிக்காகக் காத்?திருந்த வரிசையில் கிச்சான் நகைமாளிகைக் காத்திருப்பும் இணைந்துகொள்ள இவர்களின் முறை வந்தது. மூக்குக் கண்ணாடி மூக்கு நுனியைத் தாண்ட சாத்திரியார் மேற்பார்வை கீழ்பார்வை மூலம் தங்களை எடைபோடுவதைக் கண்ட அரியகுட்டியருக்கு இந்தச் சாத்திரியார் முக்காலமும் அறிந்த விண்ணனோ என்றுகூட ஒருவித பயம் எழுந்தது. மாருதப் புரவீகசுந்தரி பவ்வியமாகக் கொடுத்த சாதகக் குறிப்புகளைத் தட்டிப்பார்த்த சாத்திரியார் உதட்டைப் பிதுக்கப் பிதுக்க சுந்தரியின் கண்களும் பிதுங்கின. குருப்பெயர்ச்சிப் பலன்களை அவர் பிய்த்துப் பிய்த்து வைக்கத் தொடங்கினார். சாத்திரியார் வாயில் சனியன் குடிகொண்டிருந்ததோ என்னவோ சாதகமாக எந்தவொரு சொல்லும் வந்துவிழவில்லை. அரியகுட்டியருக்குக் கலக்கம் தொட்டாலும் சாத்திரியார் விடவில்லை. ரணில் விக்கிரமசிங்கபோல அவர் டபிள்கேம் விளையாடத் தொடங்கினார். எதற்கும் மேலதிக பலன்களை அறிய ஒருமுறை காண்டம் வாசித்துப் பார்த்தால் நல்லது என அவர் சொன்னதையும் மாருதப்புரவீக சுந்தரி உடனடியாகவே தலையாட்டி ஆமோதித்தாள். குரு ராசி பெயர்ந்ததோ இல்லையோ, தன் பேசிலிருந்து ஈரோத் தாள்கள் பெயரப்போவது நிச்சயமென அரியகுட்டியருக்கு விளங்கிவிட்டது. காண்டம் பார்ப்பதற்கென மனைவியிடமும் தன்னிடமும் சாத்திரியார் பெருவிரல் அடையாளம் கேட்பது கண்டு உசாரான அரியகுட்?டியர் மனைவியின் பெருவிரல் அடையாளத்தை மட்டும் கொடுத்துக்கொண்டு தான் தப்பித்துக்கொள்ளவே முனைந்தார். அதற்கும் காரணம் இல்லாமலில்லை. எங்கே காண்டம் பார்க்கும்பொழுது தான் எட்டாம் வகுப்பில் படித்தபோது பவளமணியிடம் கொண்ட காதலைப்பற்றிச் சாத்திரியார் சொல்லித் தொலைத்துவிட்டால் மனைவியிடம் மாட்டிக்கொள்ள நேரிடுமே என்ற பயம்தான் அவரது இந்த முன்னெச்சரிக்கைக் காரணம். எதற்கும் மனைவிக்கே முதலில் காண்டம் பார்ப்பது நல்லது எனச் சிபார்சு செய்து சாத்திரியாருக்கு 150 ஈரோக்களைத் தாரைவார்த்தார். அகத்தியர் அருளிச்செய்த காண்ட ஏட்?டுச் சுவடுகளைப் புரட்டிப்பார்த்து நாளைக்குப் பலன் சொல்வதாகச்சொல்லி அரியகுட்டி தம்பதியினரை வழியனுப்பினார் ஜகற்குரு ஜெகஜால ஜம்புலிங்க சாத்திரியார். தனக்கான குருப்பெயர்ச்சிப் பலனில் பொறுப்புச் சுமக்கவேண்டுமென சாத்திரியார் சொல்லிவைத்தது 10 நிமிடங்களிலேயே பலித்துவிடுமென அரியகுட்டியர் நினைத்திருக்கவில்லை. 10 கிலோ வெங்காய மூட்டையையும், 5 கிலோ ஆட்டாமா பைக்கெற்றையும் மனைவியின் உத்தரவுப்படி வாங்கி சுமந்து நொந்து நூலாகி வீடுவந்து சேர்ந்தார்.

மறுநாள் `சுந்தரியோடு சுந்தரன் யானும்....' பாடாத குறையாக மீண்டும் கிச்சான் நகைமாளிகை நோக்கிய பயணம் ஆரம்பமானது. அங்கு சென்ற அரியகுட்டியர் தம்பதியினரை பூட்டப்பட்ட கடையே வரவேற்றது. கடைக் கதவில் பிரெஞ்சு மொழியில் ஏதோ எழுதியிருந்தாலும் வழமைபோல அதை அவரால் வாசித்துக்கொள்ள முடியவில்லை. அங்கும் இங்கும் விசாரித்துப் பார்த்ததில் ஜகற்குரு ஜெகஜால ஜம்புலிங்க சாத்திரியாரை அன்று காலைதான் பொலிஸ் அள்ளிக்கொண்டு போனதான தகவல்தான் கிடைத்தது. காரணம் ஒன்றுமில்லை. ஐரோப்பிய ரீதியில் இதற்கு முன்னரும் பல நாடுகளில் பலரிடம் காண்டம் சொல்வதாக காசைக் கறந்துகொண்டு அவர்களுக்கு டிமிக்கி குடுத்ததுதான் அவர் செய்த குற்றமாம்.


தமிழீழ விடுதலைப் புலிகள் பிரெஞ்சுப் பணியகத்தின் அனுசரணையுடன்
ஈழத்தமிழர் உதைபந்தாட்டச் சம்மேளனம் பிரான்ஸ்
தனது பத்தாவது ஆண்டு நிறைவையொட்டி
அனைத்துலக ரீதியில் நடாத்தும்
தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்
லெப்.கேணல் விக்ரர் (ஒஸ்கா) நினைவுக்கிண்ண
உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

காலம்:
29.08.2004 (ஞாயிறு)
காலை 9.00 மணி
இடம்:
STADE JULES LADOUMEQUE
Place de la Porte de Pantin, 75019 Paris.
Métro: Porte de Pantin
தாயகத்தில் இருந்து தமிழீழ உதைபந்தாட்ட அணியும் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இருந்தும் உதைபந்தாட்ட அணிகள் கலந்து கொள்கின்றன.
மேலதிக தொடர்புகட்கு : 01 43 58 11 42

# அமைதி குலைந்த நாட்கள் - புதுசு கவிதைகள்

# உண்மையின் சாட்சியம்

- அ.இரவி-

ஒரு விடியற்புறத்தில் எழுந்து கோபம் கொப்புளிக்க இதனை நான் எழுதிக்கொண்டிருக்கின்றேன். ஆனால், இது எழுதுகின்ற விடயமேயல்ல. வாயாலோ, வார்த்தைகளாலோ இதற்குப் பதிலளிக்கக்கூடாது. முஷ்டியில் பலத்தைச் சேரித்து, முகத்தில் ஓங்கி ஒரு குத்துவிடவேண்டும். அதனைத்தான் செய்யவேண்டும். அதனை விட்டு விட்டு எழுதிக் கொண்டிருக்கிறேன்.

விடயம் இதுதான். புதுசு பதினொரு இதழ்களிலும் வெளிவந்த கவிதைகளை அமைதி குலைந்த நாட்கள் என்கின்ற தலைப்பில், சபேசன் என்கின்ற நபர் தொகுத்து வெளியிட்டிருக்கிறார். புதுசுவில் வெளிவந்த கவிதைகளை யாரும் தொகுத்து வெளியிடலாம். ஆனால், இந்த நபர் புதுசுகளே அதனைத் தொகுத்தது என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

ஏற்கனவே நிகழ்ந்த சில விடயங்களை இப்பொழுது நான் குறிப்பிடவேண்டும். 1980 ஆம் ஆண்டு ஜூன் மாதம்? நாங்கள் புதுசு சஞ்சிகையினை வெளியிடுகின்றோம். 1987 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை பதினொரு இதழ்கள் வெளியாகின. அ.இரவி ஆகிய நான் கவிஞர் என அறியப்பட்ட இளவாலை விஜயேந்திரன், பாலசூரியன், சபேசன் ஆகிய நால்வருமே புதுசு ஆசிரியர் குழுவாக இருந்த புதுசுகள். அதன்பின்பு வந்த 1983 , 1984, 1985 ஆம் ஆண்டுகளில் வெளிநாடு செல்வதற்காக ஒவ்வொருவராக புதுசுவை விட்டு வெளியேறுகின்றனர். ஆயினும், 1987 ஆம் ஆண்டு மார்ச் வரை புதுசுவை தனித்து நடாத்துகின்றேன்.

மூவரும் இருந்த காலங்களிலும்கூட, புதுசு வெளிவருவதனை உறுதிப்படுத்துவதற்கு பெரும் பங்கினை நான் ஏற்றிருந்தேன். அது இந்த மூவருக்கும் மாத்திரமல்ல, வெளியில் புதுசுவில் அக்கறை கொண்டிருந்த பலருக்கும் தெரியும்.

அதிலும் இந்த சபேசன் என்கின்ற நபர் - புதுசு வெளிவந்த உடன் எனது வீட்டுக்கு வந்து, வெளிவந்த புதுசுவின் இருபத்தைந்து பிரதிகளை எடுத்துக்கொண்டு, பேராசிரியர்கள், கலாநிதிகள், இன்னும் தன் பெயர்சொல்லத்தக்க பெரிய மனிதர்கள் இவர்களிடம் புதுசுவைக் கொடுத்து, தான் தான் புதுசுவை வெளியிட்டேன் என்கின்ற ஒரு படிமத்தையும் (image) கொடுக்கத் தவறமாட்டார். ஆனால், இந்தச் சின்னத்தனங்களையெல்லாம் நாம் பெரிதும் கவனத்தில் கொள்ளவில்லை.

ஆனால், நாம் பெரிதும் கவனத்தில் எடுக்கவேண்டிய ஒரு காரியத்தை சபேசன் என்கின்ற இந்த நபர் செய்தார். 1985 ஆம் ஆண்டு "மண் சுமந்த மேனியர்" நாடகம் குடாநாடெங்கும் பெரும் வரவேற்புடன் ஆற்றுகை செய்யப்பட்டுக் கொண்டிருந்தது. நலிவடைந்த புதுசுவின் பொருளாதாரத்தை ஓரளவு சீர்செய்வதற்கு - மண் சுமந்த மேனியர் நாடகத்தை புதுசுவின் நிதிக்காக, புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியில் அரங்காற்றுகை செய்வதற்கு ஒழுங்குபடுத்தியிருந்தோம். நான் அந்த நாடகத்தில் நடிப்பதனால், சபேசன் என்கின்ற இந்த நபர் - மேடையேற்றுவதற்கான ஒழுங்குகளைச் செய்திருந்தார்.

நாடகம் ஆற்றுகை செய்யப்பட முன்னர் நான் ஒப்பனை செய்துகொண்டிருந்தேன். அப்போது ஒரு துண்டுப் பிரசுரம் என் கைக்குக் கிட்டியது. அந்தத் துண்டுப் பிரசுரத்தில் - "மண் சுமந்த மேனியர்" குட்டிப்பூர்சுவாக் கருத்துக்களைக் கொண்டுள்ள நாடகம். அது பிற்போக்குத் தனமான கருத்துக்களையே விதைக்கின்றது. ஆயினும், எமது நிதித் தேவைக்காக இந்த நாடகத்தை நாம் மேடையேற்றுகின்றோம்! என்ற கருத்துப்பட அந்தப் பிரசுரத்தில் எழுதப்பட்டிருந்தது. அந்தப் பிரசுரத்தை வெளியிட்டது "புதுசுகள்" என்று குறிப்பு இருந்தது.

யாரும் இவ்வாறு கருத்துக் கூறியிருந்தால், அது கருத்துச் சுதந்திரம், ஜனநாயகம். ஆனால், புதுசுவின் நிதிக்காக மேடையேற்றுகின்ற நாடகம் மோசமானது என்று புதுசுகளே கூறுகின்றனர் என்றால், இது அராஜகம் அல்லவா? அதுவும் புதுசுகளில் ஒருவனாக நான் நாடகத்தில் நடிக்கின்றேன். எனக்குத் தெரியாமலேயே புதுசுவின் பெயரில் பிரசுரம் வருகின்றது. இது அப்பட்டமான ஜனநாயகமீறல். இந்த நபர் ஜனநாயகம் பற்றிப் பேசுவதற்கு எந்தளவு உரித்துடையவர்.

இந்தப் பிரசுரத்தைக் கண்டவுடன், புதுசு நிதிக்காக நாடகத்தை மேடையேற்றுவது அர்த்தமற்றது என்ற கருத்தும் எழுப்பப்பட்டது. அதில் பங்கேற்ற கலைஞர்களின் விவாதத்தின் பிறகு, எனது முகத்துக்காகவும், பல்லாயிரக்கணக்கான இரசிகர்களின் காத்திருப்புக்காகவும் நாடகத்தை மேடையேற்றுவது எனத் தீர்மானிக்கப்பட்டது. எனது சக கலைஞர்களின் பெருந்தன்மையால் நான் மீண்டேன் என்றாலும், சபேசன் என்கின்ற இந்த நபரினால் நான் அவமானத்துக்குள்ளானேன். இந்த நபரை நான் நேரடியாகக் கண்டித்தேன் என்பதுபோக, அடுத்து வந்த புதுசு இதழிலும், அந்தப் பிரசுரத்துக்கும் புதுசுவிற்கும் சம்பந்தமில்லை. அது தான்தோன்றித்தனமான ஒருவரின் கருத்து. இதனால், மனம் நொந்திருக்கும் கலைஞர்களுக்கு வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்? என்று புதுசுகள் கருத்துத் தெரிவித்திருந்தனர். அத்துடன்.

சபேசன் என்கின்ற இந்த நபரை புதுசுகளிலிருந்து நீக்கி விட்டோம். இந்த நபர் - மண் சுமந்த மேனியர் நாடகத்தின் மூலம் புதுசுவிற்காக சேகரித்த நிதியினையும், எந்தக் கணக்கும் காட்டாமல், இங்கிலாந்துக்குக் கொண்டு ஓடிவிட்டார். அதன் பின்பு அவருடனான உறவையும், தொடர்பையும் முற்றாக நிறுத்திவிட்டோம்.

இவர் அந்தப் பிரசும் வெளியிட்டமைக்கான காரணம் தெரியாமலில்லை. சொந்தக் கருத்தில்லாதவர் இவர். புதுசுகளில் இவரையிட்டு உயர்ந்த அபிப்பிராயம் இல்லை. இன்னும் சொன்னால், இவரை "பியோன்" என்றே அழைத்துக் கொள்வோம். அதற்காக பியோன் என்ற தொழிலைக் குறைத்து மதிப்பிடுவதல்ல அதன் நோக்கம். பியோன் வேலை பார்ப்பவரிடம் சுய ஆளுமை இருக்கும். ஆனால், வேலை என்று வந்தவுடன் அவர் பிறரின் பொருளையோ, கருத்தையோ காவிக்கொண்டு வந்து, இன்னொருவரிடம் சேர்ப்பிப்பார்.

அவ்வாறு தான் இந்த நபரும் தனக்கென சொந்தக் கருத்தினைக் கொண்டிராமல், பிறரின் கருத்தினைத் தனது கருத்தாகக் காவிக்கொண்டு திரிவார்.


அந்தவகையில், இவர் ஆதரவாளராகச் சார்ந்து நின்ற தமிழீழத் தேசிய விடுதலை முன்னணியின் (NLFT) கருத்தினையே புதுசுகளின் கருத்தென்று பிரசுரமாக வெளியிட்டிருந்தார். அந்தப் பிரசுரத்தினை எழுதியவரையும் நான் அறிவேன். இந்த நபரது வேலை - அந்தப் பிரசுரத்தைக் காவிக்கொண்டு, அச்சகத்தில் அச்சேற்றி, அதை விநியோகிப்பதுதான். இனித்தான் இப்போதைய என் கோபத்துக்கான விடயத்துக்கு வருகின்றேன்.

மிகச் சமீபத்தில் சபேசன் என்கின்ற இந்த நபர் - புதுசு பதினொரு இதழ்களிலும் வந்த கவிதைகளைத் தொகுத்து, "அமைதி குலைந்த நாட்கள்" என்று தலைப்பிட்டு வெளியிட்டிருந்தார். அது குறித்து யாரிடமும் அவர் அனுமதி பெறவில்லை. "தான் தான் புதுசு" என்று எல்லா இடங்களிலும் பிரகடனப்படுத்தவேண்டும் என்ற அடங்காத ஆவலாதி தான் அதற்குக் காரணம். தான் தான் புதுசு நடத்தியதாக சபேசன் சொல்லித்திரிவதாக, நான் லண்டன் சென்றிருந்தவேளை பலர் சொல்லக் கேள்விப்பட்டேன். நான் மனதினுள்ளும், கொடுப்பிற்குள்ளும் சிரித்தேன். அதனை உறுதிப்படுத்துவதற்காக இந்தத் தொகுப்பினை அவர் வெளியிட்டிருந்தார். சபேசன் என்கின்ற பெயரில் அதனை அவர் தொகுத்திருந்தால், அது பற்றிப் பெரிதும் ஒன்றும் பேசப்போவதில்லை. புதுசுகள் அதனைத் தொகுத்ததாக, இந்த நபர் குறிப்பிட்டிருக்கின்றார். அந்தத் தொகுப்புக்கும் எங்களுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லாதபோதும் எங்களை அதில் சம்பந்தப்படுத்தியிருப்பது வன்மையாகக் கண்டிக்கப்படவேண்டியது. எந்தக் கேட்டுக் கேள்வியுமில்லாமல், புதுசுகள் என்கின்ற பெயரில், தனது இணையத்தள முகவரியையும், தனது வீட்டு விலாசத்தையும் கொடுத்துள்ளார். இதுவும் கடும் கோபத்துக்குரியது. இந்தத் தொகுப்பில் இந்த நபர் - புதுசுகளின் பெயரில், புதுசுவில் கவிதை எழுதிய கவிஞர்கள் பற்றிக் குறிப்புக்களை எழுதியுள்ளார். மிகத் தவறுகள் அதில் இடம்பெற்றுள்ளன.

உதாரணமாக - எஸ்.வி.பரமேஸ்வரன் என்கின்ற கவிஞர் கிழக்கிலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். எந்தவித பொறுப்புத் தனமும் அற்று இந்தக் கவிஞரை வன்னியில் பிறந்தவர் என்று குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு இன்னும் நிறையத் தவறுகள் நிகழ்ந்துள்ளன.

மேலும் கவிஞர்கள் பற்றிய குறிப்புகளில் மிகப் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளது. தனக்குப் பிடித்த, தனக்குத் தெரிந்த கவிஞர்கள் என்றால், அவரது தாய், தந்தை, பிறந்த இடம், வளர்ந்த இடம், பிறந்த திகதி, படித்த பாடசாலை, பாடசாலைக்குப் போன பஸ், வகிக்கும் உத்தியோகம், உத்தியோகத்தில் கிடைக்கும் சம்பளம், பயணம் செய்த ஊர் உலகம் என்றெல்லா விபரங்களும் எழுதப்பட்டிருக்கும். ஆனால், இவருக்குப் பிடிக்காத, தெரியாத கவிஞர் என்றால் - அவர் அனாதை. அவ்வளவும் தான். இவை கடும் கண்டனத்துக்குரியது. ஏனென்றால், இந்தத் தவறுகளுக்கு புதுசுகளைப் பொறுப்பேற்க விட்டுள்ளார் இந்த நபர். புதுசுகளுக்கும் இந்தக் குறிப்புகளுக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது. இந்தக் கவிஞர் பற்றிய குறிப்புகளில் ஒருவர் பற்றிய குறிப்பே எம்மை ஆகலும் திகிலூட்டியது. அதனை வாசித்தவுடன் நாம் அலமலந்து போனோம். மீரா என்கின்ற பெயரில் கடற்கவிதைகள் என்று மூன்று கவிதைகள் எழுதிய செல்வகுமாரன் பற்றிய குறிப்பு. அவரது பெயர் செல்வகுமாரன். இந்த நபர் செல்வகுமார் என்று எழுதியுள்ளார். செல்வகுமாரன் பிறந்த இடம் பொலிகண்டி. ஆனால், இந்த நபர் செல்வகுமாரன் பிறந்த இடமாக வல்வெட்டித்துறையைக் குறிப்பிட்டுள்ளார். யாவற்றுக்கும் மேலாக செல்வகுமாரன் பற்றிய குறிப்பு இவ்வாறு வருகின்றது ரமணி என்று பரவலாக அறியப்பட்ட மருத்துவபீட மாணவரான இவர் - தமிழீழத் தேசிய விடுதலை முன்னணியின் (NLFT) மத்தியகுழு உறுப்பினர் என்கின்ற காரணத்துக்காக தமிழீழ விடுதலைப் புலிகளால் 1989 ஆம் ஆண்ட கடத்திச் செல்லப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளார்?

(தொடர்ச்சி 21ம் பக்கம்...)



சிங்கப்பூரில் உங்கள் இல்லம்

01-22 Belilios lane, off serangoon road, 219962 Singapore

கட்டணங்கள் s$40ல் இருந்து. குளிரூட்டப்பட்ட சகல அறைகளிலும் தொலைக்காட்சி, தொலைபேசி, சிறிய குளிர்காப்புப்பெட்டி, இணைந்துள்ள குளியல் அறை வசதிகள் உள்ளன.
கடைகளுக்கும் போக்குவரத்துக்கும் சுலபமாகச் செல்லும் வழி
திருமணச் சேவைகள், சுற்றுலா ஒழுங்கு செய்தல். விமான நிலையத்திலிருந்து ஏற்றிச்செல்லல். உங்கள் வேண்டுகோளுக்கிணங்க ஒழுங்கு செய்யப்படும்.
முன்கூட்டியே தொலைபேசியூடாகப் பதிவுசெய்வதற்கு: 65 : 63 96 55 00
அல்லது Email: newkinn@singnet.com.sg

CEYLON INN

'தமிழில் பேசுவோம் தாய் மொழியை வளர்ப்போம்'




# சொர்க்கத்தில் திருமணம்

**கி.பி. 2025.**

தமிழ் உலக தொலைகாட்சியில் செய்திகள். மேக்கப் இல்லாமலே ஒரு அழகான 3D பெண் உருவம் பேசத் தொடங்கியது

"நேயர்களுக்கு வணக்கம். இது தான் மனித இனத்தின் கடைசி நாள் என்று கூறப்படுகிறது. பூமியின் சுற்றுப்பாதையில் வந்துள்ள "டெர்மினேட்டர் 1" என்று அழைக்கப்படும் எரி கல்லானது இன்னும் 10 நிமிடங்களில் பூமியின் மீது மோதி, மனித இனம் வாழக்கூடிய இந்த பூமியை பல கோடி துகள்களாக சிதறடித்து, நம் அனைவரையும், முடிவற்ற பால்வெளி மண்டலத்தில் ஒன்றாய் கலக்க வைக்கப்போகிறது. எந்த விஞ்ஞானமும் இந்த அழிவில் இருந்து யாரையும் காப்பாற்ற முடியாமல் கை கட்டி நிற்கிறது. கடைசியாக செய்யப்பட்ட முயற்சியும் தோல்வியுற்றது. மக்கள் அனைவரும், தங்களின், கடைசி ஆசை, பிரார்த்தனைகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றனர். கடவுளின் அருள் இருந்தால் மீண்டும் உங்கள் முன் தோன்றுவேன். வணக்கம்"

என்று சொல்லிவிட்டு அந்த பெண் மறைந்தாள்.

செய்தியைப் பார்த்துக் கொண்டிருந்த எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. சில மாதங்களாகவே எதிர்பார்த்துக் கொண்டிருந்தது தான் இது. ஆனால் விஞ்ஞானம் தோற்று விடும் என்று எதிர்பார்க்கவில்லை. அவ்வளவு தான். எல்லாம் முடிந்து விட்டது. இதோ இன்னும் 10 நிமிடம் தான். பிறகு .... வெறும் புகை அல்லது நெருப்பு தான் இருக்கும், நான் இருக்க மாட்டேன். அப்படியே அமைதியாய் உட்கார்ந்தேன். என்ன செய்வது என்று யோசித்தேன்? என் கடைசி ஆசை என்ன என்று யோசித்தேன். ஒன்றும் தோணவில்லை.

எனக்கிருக்கும் ஒரே ஆசை என் கூட காலேஜ் படிக்கும் மீராவை கல்யாணம் செய்து கொள்வது மட்டும் தான். அதற்கும் இப்போது வழி இல்லை. நான் அவளை காதலிப்பது கூட அவளுக்கு இன்னும் தெரியாது. நல்ல நண்பனாய் நினைத்து பழகுகிறாள், காதலை சொன்னால் ஏற்பாளோ மாட்டாளோ என்று தான் மௌனம் சாதித்து வருகிறேன். இப்போது போய் சொல்லிப் பார்க்கலாமா? "ம்" என்றால் சொர்க்கத்திலாவது கல்யாணம் செய்து கொள்ளலாம், "இல்லை" என்றால், சும்மா செத்து போய்விடலாம். முடிவு செய்து விட்டேன். மீராவை போய் பார்க்க வேண்டியது தான்.

சுறுசுறுப்பாய் எழுந்தேன், இன்னும் முழுதாய் 6 நிமிடங்கள் இருந்தது. பைக் எடுத்தால் 2 நிமிடத்தில் அவள் வீடு. 1 நிமிடம் போதும் காதலை சொல்ல. மீதி 3 நிமிடம் ரொமான்ஸ் செய்யலாம். இல்லை கடைசி பிரார்த்தனை செய்யலாம். சே இந்த வண்டி சாவி எங்கே வைத்தேன்? கட்டில்.. மேஜை.. டிவி.. டைனிங் டேபிள், சோபா.. ஐய்யோ எங்கேயும் இல்லை.. இனியும் தாமதிக்க கூடாது.. விறுவிறுவென்று வாசலுக்கு வந்தேன்.

வானம் சிவப்பாய் தெரிந்தது, பக்கத்தில் ஒரு பெரிய நெருப்பு பந்து சிறிது சிறிதாய் பெரிதாகிக் கொண்டே வந்தது. இதை பார்த்துக் கொண்டிருந்தால் நேரம் போய்விடும், காரியம் தான் முக்கியம். பைக்கின் ரிமோட்கண்ட்ரோல் லாக்கின் வயர்களை பிடுங்கினேன். அபாய மணி ஒலிக்கத் துவங்கியது. அதையும் பிடுங்கி வீசிவிட்டு, காலால் உதைத்து கிளப்பினேன். எஞ்சின் உறுமிவிட்டு தூங்கியது. சனியனே, இப்போது காலை வாரி விடாதே.. தயவு செய்து கிளம்பு... மீண்டும் உதைத்தேன்.. உறுமல் பின் தூக்கம்... எனக்கு இயலாமையில் கோபம் மட்டும் தான் வந்தது.

என் காதலையும் சொல்ல விடாமல் செய்யும் கெட்ட மனம் கொண்ட என் வாகனமே எழுந்திரு... என்று திட்டிக் கொண்டே மீண்டும் உதைத்தேன்... ரோஷம் கொண்டு சீறியது அது.. வேகம் பொங்க அதை திருப்பினேன். கை கடிகாரத்தைப் பார்த்தேன் இன்னும் 3 நிமிடம் தான் பாக்கி.... அப்போது.... திடீரென என் தலையை இரு கைகள் பிடித்து திருப்பின, அதன் மென்மையில் என் கண்கள் சொக்கியது, தேனில் மட்டுமே 18 வருடங்களாக ஊறிக்கிடந்த, கெட்டி சர்க்கரைப்பாகில் இருந்து எடுத்த செர்ரி பழம் போன்ற இரு உதடுகள், என் உதடுடன் இணைந்தது, அதன் ஈரம், என்னுள் இதமாய் இறங்கியது. பைக் என் பிடியில் இருந்து தானே நழுவி தரையில் விழுந்து மீண்டும் அதன் உறக்கத்தை துவங்கியது.

கண்ணை திறக்காமலே அந்த உதடுகளின் சொந்தக்காரியின் இடையை கட்டிப் பிடித்தேன்.

சத்தியமாய் இது என் மீராவே தான்.



அவள் இடை, என் பைக் ஹேண்டில்பாரை விட சின்னதாயிற்றே, இன்னும் இறுக்கிப்பிடித்து அவள் உதடுகளில் ஒட்டிக் கொண்டேன். நிமிடங்கள் ஓடின.. இல்லை பறந்தது.. இல்லை மின்னலாய் மறைந்தது.. கண் விழித்து பார்த்தேன்.. நெருப்பு துண்டு வெகு பக்கமாய் தெரிந்தது.

விலகிப் போ டெர்மினேட்டரே.. சில விநாடிகள் கழித்தாவது வா என்று சபித்தேன்.. என் முனகலில் அவள் விழித்து தன் உதடுகளை என்னிடம் இருந்து பிரித்து எடுத்து..

"கண்ணா.. ஐ லவ் யூ" என்று சொல்லிவிட்டு, அடுத்த மைக்ரோ விநாடியில் மீண்டும் என் உதட்டில் ஒட்டிக் கொண்டாள்.

கண் சிமிட்ட நேரம் இல்லை, டெர்மினேட்டர் தன் மொத்த எடையையும், பூமியின் மீது இறக்கியது. பூமியே பெரிய அடுப்பாய் மாறி தகிக்க ஆரம்பித்தது. நானும் என் மீராவும் கட்டி அணைத்தப்படி சாம்பலாகி விட்டோம்.

மேலுலகம்.

சித்திர குப்தன் அலுவலக வாசல்:

நம்ம ஊர் அரசு அலுவலகம் போய், கச கசவென்று இருந்தது.. பின்னே எல்லாரும் ஒட்டு மொத்தமா வந்தா இப்படி தான் இருக்கும். நானும் மீராவும் கை கோர்த்துக் கொண்டு தான் நின்றிருந்தோம். முன்னேறி போய்க் கொண்டிருந்தது. எங்கள் முறை வந்தது. வயசான சித்திர குப்தன் இருந்தார். 2004ம் வருச மாடல் கம்ப்யூட்டர் ஒன்றை வைத்து இருந்தார். ஸ்கிரீனை பார்த்தேன். அது ஆரக்கிள் 10ஜி டேட்டா பேஸ்.

"உன் பேரு மீராவா" என்றார்.

"ம் " என்றேன் நான்.

என்னை பார்த்து விட்டு, "உன்னிடம் கேட்கவில்லை.. நீ பேசாதே" என்று சொல்லிவிட்டு அவள் பக்கம் திரும்பினார்.

"உன் கடைசி ஆசை நிறைவேறிச்சா" என்றார்.

அவள் சிறிது வெட்கத்துடன்"ம்" என்றாள்

"நல்லது, நீ அந்தப்பக்கம் போ" என்றார்.

அவளும் சிறிது தள்ளிப் போய் நின்றாள்.

"உன் பேரு கண்ணன் சரியா" என்றார்.

"ம்" என்றேன்.

" உன் கடைசி ஆசை நிறைவேறிச்சா" என்றார்.

"ம் " என்றேன்.

நிமிர்ந்து பார்த்தார்

"பொய்" என்றார் அழுத்தமாய்

"இல்லை, உண்மை தான். நிறைவேறிச்சி" என்றேன்.

"மீண்டும் பொய்.. நீ அந்தப் பெண்ணிடம் உன் காதலை சொல்லப் புறப்பட்டாய், ஆனால் நீ சொல்வதற்க்கு முன் அவள் முந்திக் கொண்டாள். நீ அவளிடம் ஐ லவ் யூ சொல்லும் முன் அவள் சொல்லி உன் உதட்டை கவ்வி பிடித்துக் கொண்டாள், எனவே நீ உன் கடைசி ஆசையான உன் காதலை அவளிடம் சொல்லும் முன், பிரளயத்தில் சிக்குண்டு, சிதறி இறந்து போய் இங்கே வந்திருக்கிறாய்..."

நான் பிரமை பிடித்து நின்றிருந்தேன்

"...நிறைவேறாத ஆசையுடன்" என்று அழுத்தமாய் முடித்தார்.

"எனவே... " தொடர்ந்தார்.

"நீ உன் காதலியுடன் போக முடியாது.. நிறைவேறாத ஆசையுடன் நீ ஆவியாக அலைவாயாக" என்று என்னை.... என்னை... ஓ ஓ ஓ ஓ ஓ ஓ...!

கதை இத்துடன் முடிகிறது... இருந்தாலும் 'நெகடிவ்' முடிவை விரும்பாதவர்களுக்காக, பின் இணைப்பு தொடர்கிறது....


ஓ ஓ ஓ ஓ... என்று ஓலமிட்டு கதறி அழுத என்னைப் பார்த்து சித்திர குப்தன் "சே நிறுத்து.. அழாதே.. என்னை முழுசா பேச விடு... " என்றார். அழுகையை நிறுத்திவிட்டு அவரைப் பார்த்தேன்..அவர் என் முகத்தையும், கலங்கி போய் இருந்த என் கண்மணி மீராவின் முகத்தையும் பார்த்து விட்டு, மெதுவாய்..

"கண்ணா கலங்காதே.. எப்போது நீயும் அவளும் ஒருவருக்கொருவர் மனமுவந்து காதலிக்க ஆரம்பித்தீர்களோ, அன்றே இருவரின் எண்ணங்களும் ஒன்றாகி விட்டது. எண்ணங்கள் ஒன்றானதால் ஆசைகளும் ஒன்றாகி விட்டது. எனவே அவளது ஆசை நிறைவேறியது என்றால், உன் ஆசையும் நிறைவேறியதாகவே அர்த்தம். போ கண்ணா, உன் இனிய காதல் வாழ்க்கையை சொர்க்கத்தில் தொடங்கு" என்று புன்முறுவலுடன் ஆசிர்வதித்தார்...

அப்புறம் நிஜமாகவே எங்கள் கல்யாணம், முப்பது முக்கோடி தேவர்கள் பூச்சொரிய இனிதே நடந்தது.

நிஜமாகவே முற்றும்..

– ஞானதேவன்
(திண்ணை)




# கதை முற்றம்

## தீக்கோழி

ஒரு நகரத்தின் பாதுகாவலன், தான் சகல வல்லமையும் படைத்த ஒரு பெரும்படைத் தளபதி என்று கூறித் திரிந்தான். திடீரென அந்த நகரம் எதிரியினால் சுற்றி வளைக்கப்பட்டது. இதை அறிந்தவுடனே அந்தப் படைத் தளபதி பயத்தில் தொடை நடுங்கினான். அவன் தன்னுடைய சொந்த வீட்டுக்குள்ளேயே பதுங்கியிருந்துகொண்டு வீட்டுக் கதவுகளை எல்லாம் தாழிட்டுப் பூட்டியதுடன் யன்னல்களையும் மூடினான். அவன் தனது படையினருக்கு இடும் கட்டளைகளை எழுதித் தனது வீட்டு யன்னலில் ஒரு சிறு துவாரத்தினூடாக வெளியே அனுப்பிக்கொண்டிருந்தான்.

எதிரியின் படைகள் நகரத்தைச் சுற்றியுள்ள பெரிய அகழிகள் எல்லாவற்றையும் கடந்து நகரத்திற்குள்ளே வந்துவிட்டன. இதை அறிந்த படைத் தளபதியான நகரத்தின் பாதுகாவலன் ஒரு பெரிய மரப்பெட்டிக்குள் ஒளிந்து மறைந்திருந்தான். `நான் இந்தப் பெட்டிக்குள்ளே இருக்கின்றேன். நீங்கள் இந்தப் பெட்டிக்குப் பூட்டொன்றைப் போட்டு நன்றாகப் பூட்டிவிட்டு பெட்டியின் திறப்பை நீங்களே கவனமாக வைத்திருங்கள். எதிரியின் படைத்தளபதி பெட்டியின் திறப்பைக் கேட்டால் நீங்கள் கொடுக்க வேண்டாம்' தனது வேலைக்காரர்களுக்கு அந்த மாவீரன் கட்டளையிட்டான்.

அந்தத் தீக்கோழியின் வீரதீரத்தையெண்ணி அவனுடைய வேலைக்காரர்கள் சிரித்தனர்.

## குறிக்கோள்

ஓர் ஆண் கௌதாரியை ஒரு பாம்பு கடித்துக் கொலைசெய்தது. பெண் கௌதரி ஆறாத் துயரத்துடனும் உள்ளக் குமுறலுடனும் இரவு பகலாக அழுது புலம்பிக்கொண்டிருந்தது. அதனுடைய அவலம் மிக்க சோகமயமான புலம்பல், வசந்தகால காடு முழுவதும் வியாபித்து, பாழ்நிலையை உருவாக்கி, ஒரு கரும் திரையை விரித்தது.

அந்தப் பெண் கௌதாரியின் துயரப் புலம்பல், அவ்வழியே சென்றுகொண்டிருந்த ஒரு இசைக் கலைஞனுடைய உள்ளத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. `உள்ளத்தை உருக்குகின்ற இந்தத் துயரப் புலம்பல் மரண வேதனையைத்தான் எனக்குத் தருகின்றது.' என்று கலைஞன் கூறினான்.

வெந்துயரக் கண்டனத்தை வெளிப்படுத்தி, பழிக்குப் பழி வாங்க ஏங்கித் தவிக்கின்ற ஒரு சோக இசையை அந்த இசைக் கலைஞன் சிருஷ்டித்தமைத்தான். இந்தச் சோக இசையைக் கேட்ட எல்லா மக்களுடைய இதயங்களிலும் கிளர்ச்சி உணர்வு ஏற்பட்டது. இந்தச் சோக இசை குளிர்ந்த அதிகாலை வேளைகளிலும், வெப்ப நாட்களிலும், தனிமை நிறைந்த இரவுகளிலும், மக்களின் இரத்தத்தைக் கொதிப்படையச் செய்து பாம்புகளுக்கெதிரான ஒருவித வெறியை ஊட்டிற்று.

அந்த இசைக் கலைஞனின் துயர இசையினால் உணர்ச்சிக் கொந்தளிப்படைந்த மக்கள் ஆண் கௌதாரியைக் கொலைசெய்த பாம்பைக் கண்டு பிடித்துக் கொன்றார்கள். அது மாத்திரமல்ல, அந்தக் கொலையாளிப் பாம்பின் சகாக்களையும் கண்ட கண்ட இடங்களில் கொன்று குவித்தார்கள்.

# அறிஞர் முற்றம்

இன்றைய உலகில் தொலைபேசி கருவி இல்லாத வீடுகளே இல்லை என்று கூறுமளவுக்கு தொலைபேசி பாவனை அதிகரித்துள்ளது. இதற்கு மேலதிகமாக கையடக்கமான தொலைபேசி கருவியினையும் பலரும் கையில் எடுத்துச் செல்கின்றனர். தொலைபேசி இல்லாத உலகினை இன்று கற்பனை செய்து கூடப்பார்க்க முடியாது. இன்னும் சில ஆண்டுகளில் உலகளாவிய தொலைத்தொடர்பு முறை ஒன்று தோன்றி விடும்.

இது கிரகங்களுக்கூடான ஒரு தொலைத்தொடர்பு வலைப்பின்னல் முறையாக வளர்ச்சியடைந்திருக்கும்.



## அலெக்ஸாண்டர் கிரஹாம்பெல் (கி.பி.1847–1922)

`பல்வேறு முயற்சிகள் மற்றும் நீண்ட ஆராய்ச்சிகளின் பின்னர் ஒலியை நீண்ட தூரம் கடத்திச் சென்று செவிமடுக்க முடியும் எனன்பதனைக் கண்டுபிடித்தார் அலெக்ஸாண்டர் கிரஹாம்பெல்'

இத்தகைய ஒரு உயர்வான தொலைபேசிக் கருவியை 1876ம் ஆண்டு அலெக்ஸாண்டர் கிரஹாம் பெல் என்பவர் கண்டுபிடித்தார். அலெக்ஸாண்டர் 1847ம் ஆண்டு மார்ச் மாதம் 3ம் திகதி ஸ்கொட்லாந்தின் எடின்பர்க் என்ற இடத்தில் பிறந்தார். இவர் தனது இருபதாவது வயதில் குடும்ப அங்கத்தவர்களுடன் இணைந்து கனடாவுக்கு குடிபெயர்ந்து சென்றார். இவரின் குடும்பத்தினர் அனைவருமே தொண்டை மற்றும் குரல் பாதிக்கப்பட்டோருக்கான வைத்தியத்துறையில் ஈடுபட்டிருந்தனர். இவர்களது தொழில், செவிப்புலன் ஊனமுற்றோர் தொடர்பிலும், பல்வேறு குரல் அபிவிருத்தி தொழில்நுட்பங்கள் தொடர்பிலுமான பரிசோதனைகளுடன் தொடர்புற்றிருந்தது. அலெக்ஸாண்டரும் இதில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார்.

அலெக்ஸாண்டர் கிரஹாம் பெல் 1872ம் ஆண்டு அவரது இருபத்தைந்தாம் வயதில் ஐக்கிய அமெரிக்காவின் பொஸ்டன் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக நியமனம் பெற்றார். பல்கலைக்கழகத்தில் இவர் ஒலியை எவ்வாறு நீண்ட தூரம் கடத்திக்கொண்டு செல்லலாம் என்பது தொடர்பான பரிசோதனைகளில் ஈடுபட்டார். இந்தப் பரிசோதனைகள் இவரை ஒலி அலைகள், ஒலியை செவிமடுப்பதற்கான முறைகள், ஒலி அதிர்வுகள், ஒலியைக் கடத்திச் செல்லும் ஊடகம் முதலான பரிசோதனைகளிலும் ஈடுபடத்தூண்டியது.

பல்வேறு முயற்சிகள் மற்றும் நீண்ட ஆராய்ச்சிகளின் பின்னர் ஒலியை நீண்ட தூரம் கடத்திச் சென்று செவி மடுக்க முடியும் என்பதனைக் கண்டுபிடித்தார்.

இவரது ஆராய்ச்சியின் விளைவாக இவரால் கண்டுபிடிக்கப்பட்ட முதலாவது தொலைபேசிக் கருவி ஒரு ஒலிபரப்பினையும், செவிக்குழலையும் கொண்டு அமைந்ததாக இருந்தது. இது மின்காந்தத்தின் உதவியில் இயங்கியது. அதன் பின்னர் 1876ம் ஆண்டு முழு வசனத்தையும் மற்றோர் இடத்திலிருக்கும் இன்னொருவருடன் பேசக் கூடியதாக கருவி ஒன்றைத் தயாரித்தார். அதுவே தொலைபேசிக் கருவியாக வளர்ச்சியடைந்தது. அலெக்ஸாண்டர் மேலும் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு `கிராமபோன்' என்ற கருவியையும் கண்டுபிடித்தார்.

பிற்காலத்தில் அலெக்ஸாண்டர் கண்டுபிடித்த தொலைபேசிக் கருவிக்கு பல மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. எண்களைச் சுழற்றி அழைப்பதற்குப் பதில் பொத்தானை அழுத்தும் முறை வந்தது. பாரிய அமைப்பாக இருந்த தொலைபேசி பரிவர்த்தனை நிலையம் தானியங்கி அழைப்பு தொடர்புபடுத்தல் முறையால் பிரதியீடு செய்யப்பட்டது. எது எப்படி இருந்த போதும் தொலைபேசி தொடர்பான அலெக்ஸாண்டரின் அழைப்பு கோட்பாடு மாறவில்லை. இந்த ஆயிரம் ஆண்டு காலப்பகுதியில் இரண்டு தனிமனிதர்களுக்கிடையிலான மிகச் சிறப்பான தொடர்பு சாதனமான தொலைபேசியே இப்போதும் இருந்து வருகின்றது.

அலெக்ஸாண்டர் கிரஹாம் பெல் 1922ம் ஆண்டுவரை வாழ்ந்திருந்தார். இவரது ஆராய்ச்சியின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட விஞ்ஞானக் கொள்கைக்காக இவருக்கு பின்னர் -டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது. இவரது கண்டுபிடிப்புகளின்போது இவருக்கு உதவியாக, இவரது ஆராய்ச்சியில் பங்கெடுத்துக்கொண்டு செயற்பட்டவர் தோமஸ் வட்சன் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த இருவரும் இணைந்து பிரேசில் நாட்டின் அரசர், இங்கிலாந்தின் விஞ்ஞானிகளில் ஒருவரான சேர். வில்லியம் தொம்சன், அப்போது தொலைபேசி கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த மற்றுமொரு விஞ்ஞானியான எலிசாகிறே ஆகியோர் முன்னிலையில் 1876ம் ஆண்டு மார்ச் மாதம் 10ம் திகதி தமது முதல் தொலைபேசிக்கருவி இயங்கும் விதத்தினைச் செய்துகாட்டி அவர்களை வியப்படையச் செய்தனர்.

# தகவல் முற்றம்

## புறாக்கள் பல. விதம்

புறாக்களில் பல வகைகளும் இனங்?களும் இருக்கின்றன.

புறாக்கள் வெள்ளை, சாம்பல், கறுப்பு, பழுப்பு போன்ற நிறங்களிலும் இவையெல்லாம் சேர்ந்தும்கூட இருக்கும்.

புறாக்களின் எச்சத்தில் அமிலத்தன்மை உண்டு.

புறாவின் எடை சராசரியாக 300-350 கிராம் இருக்கும்.


விதை மற்றும் தானியங்கள்தான் இவற்றின் முக்கிய உணவு,

புறாக்கள் கூடு கட்டிய இடத்திலிருந்து ஒரு மைல் தூரம்வரை எல்லையாக வகுத்துக்கொள்ளும். அதே நேரம், உணவு தேடி பத்து மைல் தாண்டிக்கூடப் பறந்து செல்லும்.

புறாக்களின் வேகம் சராசரியாக ஒரு மணி நேரத்துக்கு 25-35 மைல்கள்.

புறாக்கள் பெரும்பாலும் பொந்துகளிலும் கல் இடுக்குகளிலும்தான் கூடு கட்டி வாழும். ஒரே இடத்தில் நூறு சோடி புறாக்கள் வரை கூடு கட்டிவாழும்.

பெரும்பாலும் புறாக்கள் ஒரு துணையுடன் வாழும். அதே நேரம் துணை இறந்துவிட்டால், இன்னொரு துணையைத் தேடத் தயங்காது.



ஆண் புறா கூடுகட்டுவதற்கான இடத்தைத் தேர்வு செய்தபின், இரண்டு புறாக்களும் கூடு கட்டத் தொடங்கும்.




கூடு கட்டுவதற்கு உயரமான, குறுகலான இடத்தைத் தேர்வு செய்து இலை, தழைகள், புற்களைக் கொண்டு கூட்டைக் கட்டி முடிக்கும்.

சாதாரணமாக, புறாக்கள் இரண்டு முட்டைகள் இடும். முட்டைகளை ஆண், பெண் இரண்டுமேமாற்றி மாற்றி அடைகாக்கும். மற்ற பறவைகள் கூட்டை நெருங்கவும் விடாது. 18-20 நாட்களில் முட்டைகள் பொரிந்து, குஞ்சுகள் வெளிவரும்.

NALLUR TRADERS
நல்லூர் றேடர்ஸ்
CASH & CARRY
இலங்கை - இந்திய - மளிகைப் பொருட்கள்
193, Rue Fbg. St. Denis, 75010 Paris
Tél : 01 46 07 68 17
M° - RER : Gare du Nord / La Chapelle
Bus : 350, 302, 65, 48

# ஏங்குகின்ற கலைஞர்களுக்கு ஆறுதல் தருகிறது புலம்பெயர் மண்!



## சங்கீத பூசணம். கலாபூசணம் எல். திலகநாயகம் போல் அவர்களுடனான ஒரு சந்திப்பு...

ஒரு மொழி- அது பேசுகின்ற இனம். அவற்றின் பாரம்பரியம் தொன்மை, கலை, இலக்கியம் நாகரீகம் போன்ற அனைத்துச் சிறப்புக்களும் தொடர்ந்து பாதுகாக்கப்படவேண்டுமானால் அந்த மொழி ஒரு அரச மொழியாக, அந்த இனம் ஆளுகின்ற இனமாக அதாவது தனக்கென்று ஒருநாட்டை அரசைக் கொண்டிருக்க வேண்டும் என்பது அனைவராலும் ஒத்துக்கொள்ளக்கூடியதொன்றாகும். இதற்கு உதாரணமாக தமிழிசை கர்நாடக இசையாக மாற்றம் பெற்றிருப்பதைக் குறிப்பிடலாம்.

இசை தன்னுள் ஒரு தனித்துவத்தைக் கொண்டிருப்பதாலேயே முத்தமிழில் நடுநாயகமாகத் திகழ்கிறது. ஒவ்வொரு நாட்டிற்கும், ஒவ்வொரு இனத்திற்கும், ஒவ்வொரு மொழிக்கும் தனித்தன்மைகள் கொண்ட இசையும் உண்டென்பர் ஆராய்ச்சியாளர்கள். தமிழிசைக் கலையின் தொன்மை, அதன் பண்பு இன்று பல்வேறு மொழி இசைக் கலைஞர்களின் கவனத்தையும் ஈர்ந்து வருவது, எமது இசையின்பால் நாம் அக்கறை கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது. (1970) எழுபதுகளின் தொடக்கத்தில் ஈழத்திலும் தமிழிசை அதன் தொன்மையின் மேன்மை குன்றாது புதிய பரிமாணம் பெற்று தனக்கென்றொரு பெருமிதத்தோடு எழுச்சி கொண்டு மிளிர்கின்றது.

அதற்கான முன்னோடிகளில் ஒருவரான சங்கீத பூசணம், கலாபூசணம் எல்.திலகநாயகம் போல் அவர்கள் அண்மையில் பரிஸ் மாநகரம் வந்திருந்தார். அவரை ஈழமுரசு வாசகர்கள் சார்பில் சந்தித்து உரையாட முடிந்தது. இனி, அவரோடு..!

**கேள்வி:-** இசைஞர், கலைஞர், கவிஞர், ரசிகர், விமர்சகர், பேச்சாளர், ஆய்வுநர் என ஈழத்தமிழர்களால் அறியப்படுகிற நீங்கள், உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளீர்கள். அந்தவகையில் உங்களது ஐரோப்பிய வருகையிலும் இசைசார்ந்த முயற்சி, ஒரு முன்னெடுப்பு இருக்குமென்றே எனக்கு எண்ணத் தோன்றுகிறது...?

**பதில்:-** உங்கள் எண்ணம் சரியானதுதான். அதற்காக ஜேர்மனியில் செயல்பட்டுவரும் `டோட்முண்ட் தமிழர் கலையகத்தினருக்குத்தான் முதலில் நன்றி சொல்லவேண்டும். கடந்த பன்னிரண்டு வருடங்களாக அவர்கள் ஆற்றிவரும் சேவை பிரமிக்கத்தக்கது. தாய்மண்ணின் வேர் அறுபட்டுப் போகாமல் எமது சிறார்களுக்குத் தாய்மொழிச் சிறப்புக்களை ஊட்டிவிட அவர்கள் எடுக்கும் முயற்சிகள் அளப்பரியவை, பாராட்டுதலுக்குரியவை.'

**கேள்வி:-** தமிழர் கலையகம் தங்களின் இசைப்பணிக்கு உங்களைத் தேர்ந்ததற்குக் காரணங்கள் உண்டா?


**பதில்:-** சென்னை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் இசைப்பிரிவில் என்னுடனான சமகால மாணவர், நண்பர் சங்கீத பூசணம் செல்வச்சீராளன் தற்போது ஜேர்மனியில் வாழ்ந்து வருகிறார். தமிழிசையின் மீது எனக்குள்ள ஆற்றலையும் ஆர்வத்தினையும் தெரிந்தவர். அவர் மூலமாகத்தான் கடந்த ஆண்டு (2003) எனக்கு டோட்முண்ட் தமிழர் கலையகத்திடமிருந்து ஒரு அழைப்பு வந்தது. சங்கீத பூசணம் செல்வச்சீராளனின் `பைந்தமிழ்பாக்கள்' நூல் வெளியீட்டு விழாவுக்கு வருகை தரும்படியாக. மிக மிகழ்ச்சியோடு அதில் கலந்து கொண்டேன். அப்போதுதான் ஒரு பாரிய பொறுப்பும் அவர்களால் என்னிடம் தரப்பட்டது. அதாவது அவர்களால் நடாத்தப்பட்டுவரும் தமிழிசைப் புலமைப் பாட வகுப்புகளுக்காக, தமிழ் கீதங்களை உள்ளடக்கி அதற்கான சுர சுதியோடு இன்னுமோர் இசை நூலை எழுதித்தரும்படியான வேண்டுகோளை தெரிவித்தார்கள்.

**கேள்வி:-** அப்படியானால் இந்த ஓராண்டுக்குள் அப்பணியை முடித்துவிட்டீர்களா?

**பதில்:-** நிறைவாகச் செய்துள்ளேன் என்றே நம்புகின்றேன். `புதிய நோக்கில் செந்தமிழ் செவ்விசைப்பாக்கள்' என்ற தலைப்பினாலான எனது நூலை டோட்முண்ட் தமிழர் கலையகத்தினர் பதிப்பித்து வெளியிட்டுள்ளனர். இசை, நாட்டியம் கற்கும் சிறார்கள் அதனை வாங்கிப்பாடி, ஆடி பயன்பெற வேண்டும் என்பதே எங்களது விருப்பம்.

**கேள்வி:-** புதிய நோக்கில் என்று குறிப்பிடுகிறீர்கள். உங்களுடைய புதிய முயற்சியாக எதைக்குறிப்பிடுகிறீர்கள்?

**பதில்:-** பொதுவாக கீதங்கள் தெய்வங்களைப் பற்றியதாகவோ, அல்லது புராணவரலாற்றுச் சமயம் சார்ந்த கதைகளை உள்ளடக்கியவைகளாகவே இருக்கும். அத்தோடு அவை சமஸ்கிருத வடமொழிச் சொற்களையே கொண்டிருக்கும். ஆகவேதான், இசை உலகில் கால்பதிக்கும் சிறார்களுக்கு புதிய சிந்தனைகளைக் கொண்டவைகளாக, நல்ல தமிழ்ச் சொற்களைக் கொண்டு ஏழு கீதங்களை அமைத்து அவற்றிற்கு சுரக்குறிப்புக்களும் கொடுத்துள்ளேன். அதே நேரம் நான் தெய்வ நம்பிக்கைகளுக்கு விரோதமானவன் அல்ல.



**சந்திப்பு - எம்.அரியநாயகம்**

**கேள்வி:-** உதாரணத்திற்கு ஓரிரு பாடல்கள்...?

**பதில்:-** "கல்வியே எம் பெரும் சொத்து
கற்பதே எம் அரும்பணி
சொற்கள் தாமே பெரும் செல்வம்
கற்பதை கசடறக் கற்போமே..."

இது பண் கிந்தோளம், பாணி நான்கு இரண்டும்.
மற்றுமொரு பாடல் (பாடிக்காட்டுகிறார்)

"நாடு நமக்கு வேண்டும்
நாமே அதை பெறவும் வேண்டும்
நாமே அதை ஆள வேண்டும்
நமது சொந்தம் ஆக வேண்டும்..."

இது பண் கனகப்பிரியா. பாணி நான்கும் ஈரிரண்டும்

நான் புலவனோ கவிஞனோ அல்ல, முடிந்தவரையில் சிறார்களுக்கு மனதில் பதியக்கூடியவகையில் இப்படியாக ஒன்பது கீதங்களை அமைத்துள்ளேன்.

**கேள்வி:-** பாணி என்று நீங்கள் குறிப்பிடுவது...?

**பதில்:-** தாளம்- தமிழில் பாணி என்று சொல்வதே சிறப்பு. அது போல `நவராகமாலிகாவர்ணம்' இதனை அழகாக தமிழில் ஒன்பான்பண்மாலை வர்ணம் என்று குறிப்பிட்டுள்ளேன். தெலுங்கில்தான் ஜம்பைதாள வர்ணங்கள் உள்ளன. அதில் இரண்டு வர்ணங்கள் நல்ல தமிழ் பாடங்களில் அமைத்துள்ளேன். இவைகளையும் புதிய முயற்சிகளாகக் குறிப்பிடலாம். மேலும் தமிழிசையை முன்னெடுக்கவேண்டிய பணி எங்களிடம் வந்து விட்டது என்றும் துணிந்து கூறலாம்.

**கேள்வி:-** தாய்மொழிப் பற்றுடன் செந்தமிழ்பாக்களில் தமிழிசை பொழிய முனையும் முயற்சியில் தங்களைப்போல் ஆர்வம் காட்டுபவர்கள்..?

**பதில்:-** தமிழ்நாட்டில் கலைக் காவேரிப் பணிப்பாளர் முனைவர்... ஆய்வாளர் மாகிறற் பொஸ்றின் மற்றும் விரிவுரையாளர், ஆய்வாளர் ஜோண்பிறிற்றே. ஈழத்தைப் பொறுத்தவரையில் என்னோடு, நண்பர் செல்வச்சீராளன் நால்வரும் தற்போது இந்த முயற்சியில் மிகுந்த அக்கறையோடு செயற்பட்டு வெற்றியும் பெற்று வருகின்றோம்.

**கேள்வி:-** நாட்டியங்களுக்கு உங்கள் தமிழிசையைப் பயன்படுத்தலாம் என்று சொல்லுவீர்களா?

**பதில்:-** கட்டாயமாகப் பயன்படுத்தலாம். இசையும் நாட்டியமும் இரட்டைப் பிறவிகள் என்று சொல்லுவார்கள்.

சிருங்காரத்துக்கு `ஜாவளி'யைப் கையாளுபவர்கள், முருகனையோ, கிருஷ்ணனையோ தலைவனாகக் கொண்ட பாடல்களை இசைத்து நடனங்களை அமைப்பதுண்டு. அதிகமாக தெலுங்கில் உள்ள ஜாவளியைத்தான் நாட்டிய இசைகளுக்குப் பாவிப்பார்கள். அழகாகத் தமிழில் கொண்டு வந்து நாட்டியங்களை அசைத்து ஆடினால் உணர்வோடு கலந்து நாம் நடனங்களை ரசிக்கமுடியும்.

எனது செவ்விசைப்பாக்கள் நூலில் 28ம் பக்கத்தில் ஒரு பாடல் பதம் பண் மத்தியமாவதி பாணி - நான்கும் ஈரிரண்டும் (பாடிக்காட்டுகிறார்)


"தூது சொல்லிடவே நீ சென்றிடுவாய் குயிலே
மாசு படாத புலவன் இளங்கோவிடம் சென்று
சிலப்பதிகாரத்தில் முத்தமிழ் தனைப் பாடிய
கலப்பற்ற தூய தமிழ்பாக்கள் தந்தவரிடம்
ஈழத்தமிழர்கள் பட்டுவந்த தொல்லைகள்
விட்டுவந்த சொத்துக்கள் கட்டுண்ட வேதனைகள்
மாழு நம்பிள்ளைகள் சிந்திய இரத்தங்கள்
தட்டிக் கேட்கவென்று காவியம் ஒன்று பாட..."

**கேள்வி:-** தங்களைப் போன்ற இசைவித்தகர்கள், அதாவது சங்கீத பூசணர்கள் கூட தமிழிசை என்று குறிப்பிடுவதில்லை. கர்நாடக சங்கீதம் என்றுதானே எழுத்திலும் பேச்சிலும் பயன்படுத்துகிறார்கள். சங்கீதம் கூட தமிழ்ச் சொல் அல்லவே. அப்படியானால் தெலுங்குதான் இதற்கு மூலவேரா?

**பதில்:-** முக்கியமான ஒரு கேள்வி. முடிந்தவரை சுருக்கமாகத் தெளிவுபடுத்த முயற்சிக்கிறேன்...

ஒரு மொழி- அது பேசுகின்ற இனம். அவற்றின் பாரம்பரியம் தொன்மை, கலை, இலக்கியம் நாகரீகம் போன்ற அனைத்துச் சிறப்புக்களும் தொடர்ந்து பாதுகாக்கப்படவேண்டுமானால் அந்த மொழி ஒரு அரச மொழியாக, அந்த இனம் ஆளுகின்ற இனமாக அதாவது தனக்கென்று ஒருநாட்டை அரசைக் கொண்டிருக்க வேண்டும் என்பது அனைவராலும் ஒத்துக்கொள்ளக்கூடிய தொன்றாகும். இதற்கு உதாரணமாக தமிழிசை கர்நாடக இசையாக மாற்றம் பெற்றிருப்பதைக் குறிப்பிடலாம்.

*(தொடர்ச்சி 28ம் பக்கம்...)*

மோகன் ஜுவலரி மார்ட்

201 Rue du fg. st. Denis, 75010 Paris.

Tel: 01 42 05 65 26 / Fax: 01 42 05 65 79

Mº: La Chapelle / Gare du Nord

தங்க நகைகளுக்கு தவணை முறையில் செலுத்தும் கடன் வசதியுடன்!



# பலதும் பத்தும்

## அட... அங்குமா..?







சாக்கு ஓட்டம் என்பது தமிழர்களின் விளையாட்டில் ஒரு வேடிக்கையான விளையாட்டு. கயிறிழுத்தலும் அவ்வாறு தான். அதைவிட கிறிஸ் மரம் ஏறுவது... இளைஞர்களை கவர்ந்திழுக்கும் விளையாட்டு. இவையெல்லாம் தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுகள் என்றுதான் எண்ணியிருந்தோம். ஆனால் அதுவே இப்போது கேள்வியாகிவிட்டதே...? இந்தோனேசியாவில் நடைபெற்ற சுதந்திர தின விழாவன்று நடைபெற்ற விளையாட்டுக்கள் இவை. இதில் சாக்கோட்டத்திலும், கயிறிழுத்தலிலும் பங்குபற்றியிருப்பது யார் என்று தெரிகின்றதா..? வேறு யாருமல்ல இந்தோனேசிய சுதந்திரக்கட்சியின் அதிபர் வேட்பாளராக நிற்கின்ற சுசிலோ பங்பாங் யுடோஜோனோ தான். அடுத்த மாதம் அங்கு தேர்தல் நடைபெற இருக்கின்றது. விளையாட்டுக்கு விளையாட்டாகவும் தேர்தல் பிரச்சாரமாகவும் அமைந்துவிட்டது.

## இவரும் ஒரு இசைப்பிரியரோ..!




## உல்லாச உலா..!

ஒரு காலத்தில் இசைத்துறையில் கொடி கட்டிப்பறந்தவர் பிரபல பொப் இசைப்பாடகர் மைக்கேல் ஜக்சன். இப்போது வழக்கு விசாரணைகளில் நாட்களை நகர்த்துகின்றார்... பாலியல் வழக்குகளில் சிக்குண்டிருக்கும் அவர், அமெரிக்காவின் சாண்டா மரியா மாநில நீதிமன்றத்தில் நடைபெறும் பாலியல் பலாத்தகார வழக்கொன்றில் விசாரணைக்காக செல்கின்றார். அவரை கைத்தாங்கலாக அழைத்துச் செல்பவர்கள் வேறு யாருமல்ல. அவரது சகோதரிகளான ஜனட் (வலது), லா டோயா ஆகியோர் தான். என்னதான் நிறத்தை மாற்றினாலும், இரத்த பாசம் அல்லவா..!



## 'முடி' மனிதன்






குரங்கில் இருந்து கூர்ப்படைந்து மனிதன் உருவானதாக விஞ்ஞானம் கூறுகின்றது. ஆனால் இந்த மனிதனைப் பார்த்தாலோ மனிதன் மீண்டும் குரங்காக கூர்ப்படைந்து செல்கின்றானோ என்று எண்ணத் தோன்று கின்றது. சீனாவின் லயோனிங் மாநிலத்தை சேர்ந்த யு சென்குகானின் (26 வயது) உடல் முழுவதும் முடியினால் மூடப்பட்டுள்ளது. இதனால் இவரைத் தெரிந்தவர்கள் எல்லாம் முடி மனிதன் என்றே அழைக்கிறார்கள். இவரது உடலில் 96 வீதமான பகுதி முடியினால் மூடப்பட்டுவிட்டது. இதில் கொடுமை என்னவென்றால், அவரது காதைச் சுற்றியும் காதினுள்ளேயும் வளர்ந்த முடியினால், காது கேட்கும் சக்தியையே இழந்துவிட்டார். இதனால் ஷங்காயிலுள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டது. மருத்துவர்கள் ஐந்துமணி நேரம் போராடி அவரது காதினுள் இருந்த முடிகளை அகற்றி அவருக்கு மீண்டும் கேட்கும் சக்தியை வழங்கியுள்ளனர். இவ்வளவு முடியிருந்தும் இவரால் கின்னஸ் சாதனை நூலில் இடம்பெற முடியவில்லை. ஏனென்றால் இவரை விட அதிகமான முடியுடன் (உடலில் 98 வீதமான பகுதி முடியினால் சூழப்பட்டு) லாரி, டானி என்ற இரு சகோதரர்கள் மெக்சிக்கோ நாட்டில் இருக்கின்றனராம்.

## இதற்கும் கொண்டாட்டமா..?

புலம்பெயர்நாடுகளில் தமிழர்கள் எதற்கு எதற்கெல்லாமோ கொண்டாட்டங்களை நடத்தும்போது, சவுதி அரேபியாவில் பெண் ஒருவர், கணவனிடம் இருந்து விவாகரத்துப்பெற்றதை கோலகலமாகக் கொண்டாடியுள்ளார். சவுதியின் மதீனா நகரைச் சேர்ந்த பெண் ஒருவர் தன்னைச் சித்திரவதை செய்து கொடுமைப்படுத்திய கணவரிடம் இருந்து அண்மையில் விவாகரத்துப் பெற்றுவிட்டார். இந்த மகிழ்ச்சியைக் கொண்டாட அப்பகுதியில் உள்ள பூங்கா ஒன்றுக்கு தனது உறவினர்கள் நண்பர்களை அழைத்து மிகப்பெரிய விருந்து வைத்துள்ளார். இதற்காக அவர் சுமார் 15 ஆயிரம் றியால் (4000 டொலர்களை) செலவு செய்துள்ளார். இதனைப் படித்துவிட்டு, புலம்பெயர்மண்ணில் தமிழர்களால் இதுவரை கொண்டாடப்படாமல் உள்ள இந்த விழாவையும் யாராவது கொண்டாட முனைவார்களோ..?!



# சாந்தப் பொறிக்குள் சந்தானய

2004 மார்ச் இறுதி வாரம் பொலநறுவை மாவட்டத்தில் மூன்று தசாப்தங்களுக்குமுன் உருவாக்கப்பட்ட வெலிக்கந்தை எல்லை நகரத்திற்கான பேருந்து. அதில் பயணிக்கும் ஒருவர் மற்றைய சக பயணியிடம் வெகு தீவிரமாக உரையாடுகின்றார்.

"மடத்தின் (Madame) ஆட்சியில் ஒரு அங்கர் விலைக்கு கிடைத்து. அதன் இப்போதைய விலை என்ன? இந்த விலையேற்றத்தை எப்படித் தாங்குவது?"

இவருடன் பேசிக்கொண்டிருந்தவர் ஒரு அரச ஊழியர். அவரது களைத்துப் போன முகத்தில் முதலானவரின் விமர்சனத்தை ஏற்கும் சாயலே தென்படவில்லை.

"ஒரு மூட்டை உரத்தின் விலை என்ன? இந்த நிலையில் எப்படி வயல் செய்வது? நெல்லைக்கூட விற்க முடியவில்லை!" இது முதலானவரின் ஆக்ரோசம்.

இந்த ஆக்ரோசத்தை உருவாக்கி; விசிறி, நெருப்பாக எரியவிட்டது சந்திரிகா, ஜே.வி.பி கூட்டணி ஆட்சிக்கு வந்தது. சந்தானய என்று சிங்களவர்களால் குறிப்பிடப்படும் இந்தக் கூட்டணி, தனது அரசியல் பிரசவத்தினை இருமுனைகளில் முன்னெடுத்தது. ஒன்று வாழ்க்கைச் செலவு உயர்வு, பொருட்களின் விலையேற்றம். அடுத்தது சமாதான முயற்சிகள் என்ற போர்வையின் ஈழராச்சியத்திற்கான பாதையை ஐ.தே.கட்சி திறந்து விடுகிறது. இந்த இருமுனை உபாயத்தை ஐ.தே.கட்சி அரசாங்கம் சரிவர எதிர்கொள்ளாததாலும், பொதுசன ஐக்கிய முன்னணியினதும் ஜே.வி.யினதும் வாக்குகளின் சேர்க்கை வழங்கிய பெரும்பான்மையினாலும் சந்தானய ஆட்சிக்கு வந்தே விட்டது.

ஆனாலும் கூட அரசியல் நடத்துவது வேறு, அரசாங்கத்தை நடாத்துவது வேறு என்ற அரசியற் பாடத்தினை சந்தானய மனங்கொள்ளாததன் எதிர்விளைவுகளை இப்போது அது எதிர்கொள்ளவேண்டியுள்ளது. யதார்த்தத்தின் கசப்பினை அவர்கள் மெல்ல மெல்ல சுவைபார்க்க நேருடுகிறது. சந்தானயவின் ஆட்சியல் உருவாக்கிய இரு அரசியல் முன்வைப்புகளையுமே தான வாக்குறுதியளித்தபடி கையாள அதனால் முடியாமற் போய்விட்டமை, இவ்வளவு விரைவிலேயே ஏற்படுமென சந்தானய எதிர்பார்த்திருக்காது தான். இருந்தாலும் ஆட்சி புரிவது என்பது அரசியல் மேடைகளில் மணிக்கணக்காக பேசுவது போன்றோ, அறிக்கைகளை குதர்க்கமாக வெளியிடுவது போன்றோ, அன்றி ஓரே இரவில் நாடெங்கும் சுவரொட்டிகளை நிறைத்து விடுவது போன்றோ இலகுவானதல்ல என்பது இப்போது வெளிப்படத் தொடங்கியுள்ளது. இதன் பரிதாபம் என்னவென்றால் இந்த அரசாங்கத்தை அந்த எதிர்பார்ப்புக்களுடன் அரியணையேற்றிய சிங்கள மக்கள், சட்டியுள் இருந்து நெருப்புக்குள் விழுந்த கதிக்கு ஆளானவர்கள் தான். ஏனெனில் அவர்கள் பட்டுவேட்டி பற்றிய கனவிலிருக்கையிலே கட்டியுள்ள கோவணமும் பறிபோகும் அபாயம் உருவாகி வருகிறது.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் எரிபொருட்களுக்கு விலை உயர்ந்தது. அதனை வெறுமனே உயர்வு என்று சொல்வது தவறு. "எகிறியது" என்றால் பொருந்தக்கூடும். லீற்றர் ஒன்றுக்கு 8 ரூபாவால், அதாவது 16 வீதத்தால் பெற்றோலுக்கு விலை உயர்ந்தது. இப்போது மீளவும் (13ம் திகதி நள்ளிரவில் இருந்து) லீற்றருக்கு 3 ரூபா உயர்ந்திருக்கிறது. டீசலுக்கு 4 ரூபா அதிகரிப்பு.

கடந்த தடவை டீசலுக்கு விலை அதிகரிக்கப்படவில்லை. அதனால் போக்குவரத்துக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட மாட்டாது. பெற்றோலில் இயங்கும் முச்சக்கர வண்டிகளுக்கான கட்டளை கூட அதிகரிக்கவில்லை என மார்தட்டியது அரசு. அப்படியாயின் இப்போது என்ன நடக்கப்போகிறது.

அதேவேளை கடந்த வாரத்தில் வீட்டுப்பாவனைக்கான எரிவாயுக்கான விலை ஓரே இரவில் 70 ரூபாவால் அதிகரித்தது. பின்னர் இந்த அதிகரிப்பை மானியம் வழங்குவது மூலம் அரசு கட்டுப்படுத்தும் எனவும் அறிவிக்கப்பட்டது. (ஆனால் இது நடைமுறைக்கிடப்பட்டதாகப் தெரியவில்லை.)

இவை எல்லாவற்றையும் துக்கிச் சாப்பிடுவதுபோல் அறிவிப்பொன்றை சிறீலங்காவின் நிதியமைச்சர் 13ம் திகதி வெளியிட்டுள்ளார். அரசாங்கம் மானியங்கள் வழங்குவதை நிறுத்தவுள்ளது என்ற அந்த அறிவிப்பின் மூலம் அனைத்து விதமான பொருட்களினதும் விலைகள் வேகமாக உயரப்போகின்றது. என்பதை முன்னறிவித்தார். இதன் சிகரமான அவரது ஒரு கூற்றினை அவதானியுங்கள் "மானியங்கள் நிறுத்தப்படுவதன் பிரதிபலிப்பினை நீங்கள் வீட்டுக்குத் திரும்பிப் போகையில், வாகனங்களுக்கு எரிபொருள்

**...சந்தானய தற்போது அரசாங்கம் நடாத்துவது, அரசியல் நடத்துவதனை விடவும் மிகக் கடினமானதென்பதைக் காணமுடிகிறது. பொருளாதாரம், சமாதானம் என்ற இருமுனைப் பொறியுள் அது சிக்கித் தவிக்கிறது. ஆனால் இதில் உள்ள சுவாரஸ்யம் என்னவென்றால், இந்தப் பெறுமதி யானைக்கு வைப்பதற்காக கதிரையும் மணியும் சேர்த்து புலிச்சாயம் பூசித் தயாரித்த சொந்தப் பொறி என்பது தான்...**

**- பு.சத்தியமூர்த்தி -**

நிரப்புகையில் காணக்கூடும் என்றார் அமுருகம. அவரது கூற்றை கேட்டவர்களும் மற்றையவர்களும் அன்று இரவு தூங்கி எழுந்து கேட்ட முதலாவது செய்தி "எரிபொருளுக்கான விலை மீண்டும் அதிகரிக்கப்பட்டுள்ளது" என்பதே.

இதன் பிரதிபலிப்பு 14ம் திகதி நண்பகல் வெளியானது. தனியார் வாகனங்களுக்கான போக்குவரத்து கட்டணம் அதிகரிக்க, போக்குவரத்து உரிமையாளர் சங்கம் அரசாங்கத்தைக் கோரியுள்ளது என்பதாக அரச வானொலியில் சாமானிய மக்களின் அன்றாட வாழ்வின் மீதான தாக்குதல் வந்தது. சீனி, பால்மா, கிழங்கு, வெங்காயம், மிளகாய், கோதுமை மா போன்ற அத்தியாவசிய பொருட்களின் சடுதியான விலை உயர்வு என்ற வெடிகுண்டு இனி எந்த நேரமும் மக்களைத் தாக்கலாம். இதை நீங்கள் வாசிக்கும் போது 'திருவாளர் இலங்கை குடிமகன்' இந்த ஆயுதங்களின் தாக்குதலுக்கிலக்காகி அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டிருக்கவும் கூடும்.

கடந்த பொதுத் தேர்தலின் போது சிங்கள மக்களின் அரசியல் எதிர்பார்க்கை என்பது மிகப் பெரும்பாலம் தமது 'வயிற்றுப் பிழைப்பு' குறித்ததாகவே இருந்ததாக ஆய்வாளர்கள் பலரும் சுட்டிக்காட்டியிருந்தார்கள். அவர்கள் சமாதானத்தின் பயன்கள் குறித்து பெருமளவுக்கு அலட்டிக் கொள்ளவில்லை. சிறுபான்மையாளர் அதிலும் குறிப்பாகத் தமிழ் மக்களே சமாதானம் பற்றிய சிந்தனையுடன் வாக்களித்தனர் என்பதை அவர்கள் விளக்கியிருந்தார்கள்.

இவ்வாறான சிங்கள மக்கள், சந்தானயஅரசிய் தற்போதைய பொருளாதாரத் தாக்குதல்களை எவ்வாறு எதிர்கொள்ளப் போகிறார்கள்.? உண்மையில் ஐ.தே.கட்சி, கடந்த நான்கு மாதங்களாகப் பெரும்பான்மையினைப் பாராளுமன்றத்தில் நிரூபிக்காம சந்தானய அரசினை இன்னமும் கவிழ்க்கப் பிரயத்தனப்படாததன் சூட்சுமம், இங்கேதான இருக்கிறது. ஏனெனில் பலத்த வேலைதிட்டத்துடன் அரியணையேறியுள்ள சந்தானயவை அதன் பாதையில் பயணிக்க விட்டு, அவர்களது ஆட்சியின் ??பயனை?? மக்கள் சுவை பார்த்து அனுபவித்த பின்னர் ஏற்படப்போகும் உணர்வலையினைத் தன்கான தூண்டிலாகப் பாவிக்கவே ஐ.தே.கட்சி காத்திருக்கிறது.

மிகவும் நீண்ட வாய்வீச்சுக்களுடன் ஆட்சிபீடம் ஏறிய சந்தானய இப்பொழுது தான் யதார்த்தத்தின் பிடியுட் சிக்கி விழிபிதுங்கி நிற்கின்றது. ஐ.தே.கட்சி இந்தச் சூழலைத் தனக்கு வாய்ப்பாகப் பயன்படுத்தப் போகிறது. சந்தானய இதே போக்கில் போனால் அதன் திறைசேரிக்கான வரவுகள் குறைவடைந்து அதிகரிக்கும். மறுவளமாக அரசாங்கத்துக்கான செலவீனமோ ஏறுமுகமாகவே இருக்கும்.

30 ஆயிரத்துக்கு மேற்பட்ட பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்பு வழங்கவேண்டியுள்ளது. அரசாங்க ஊழியர்களுக்கு வருட இறுதியில் சம்பள அதிகரிப்பு வழங்கவேண்டியுள்ளது. பாரிய ஆயுத தளபாடக் கொள்வனவு செய்யப்படுகிறது. இந்தப் பின்னணியில் மானியங்கள் நிறுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் அரச செலவீனம் குறைக்கப்படும். இந்தக் குறைவு மேற்சொன்ன புதிய செலவீனங்களுக்கு ஈடுகட்டுவதற்கு எந்த வகையிலும் போதுமானதல்ல. தற்போதைக்கு வெளிநாட்டுதவிகளை எதிர்பார்ப்பது குதிரைக் கொம்பு அப்படியாயின் எஞ்சியிருப்பது இரண்டே வழிகள். ஒன்று தனியார் மயமாக்கல் இரண்டு புதிய வரிகள் விதித்தல்.

இவை இரண்டையுமே கடுமையாக கண்டித்து வந்த சந்தானயவுக்கு வேறு வழியின்றி தாமே அதைக் கைக்கொள்ள நேர்ந்து விட்டது. இதன் அறிவிப்பாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஒரு பகுதியினை இந்தியன் ஒயில் நிறுவனத்திற்கு வழங்குவதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுவிட்டதாக தகவல் வந்துள்ளது. இதற்கெதிராக பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்கள் 14ம் திகதியிலிருந்து வேலை நிறுத்தத்தை அறிவித்து விட்டனர். அரசு இந்த தகவலை மறுத்துள்ள போதும், அண்மையில் கொழும்பில் நடைபெற்ற ஆசியக் கிண்ணக் கிறிக்கெற் போடிகளுக்கு 'இந்தியன் ஒயில்' நிறுவனமே அனுசரணை வழங்கியிருந்தமை இதனுடன் பொருத்திப் பார்க்கும் போது ஊழியர்கள் சொல்வதில் உண்மையிருக்குமென்றே படுகிறது.

அரசு, சந்தானய தற்போது அரசாங்கம் நடாத்துவது அரசியல் நடத்துவதனை விடவும் மிகக் கடினமான தென்பதைக் காணமுடிகிறது. பொருளாதாரம் சமாதானம் என்ற இருமுனைப் பொறியுள் அது சிக்கித் தவிக்கிறது. ஆனால் இதில் உள்ள சுவாரஸ்யம் என்னவென்றால், இந்தப் பெறுமதி யானைக்கு வைப்பதற்காக கதிரையும் மணியும் சேர்த்து புலிச்சாயம் பூசித் தயாரித்த சொந்தப் பொறி என்பது தான்.

# வன்முறை






## கந்தையா நவரேந்திரன்

எங்கு பார்த்தாலும் வன்முறைகள் பல வடிவங்களிலும், பல நிறங்களிலும், பல பின்னணிகளிலும் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. மதங்களும், மதத்தலைவர்களும், அரசியல் தலைவர்களும், ஐக்கிய நாட்டுச் சபையும் வன்முறைகளை இல்லாமல் ஆக்குவதற்குத் தவறிவிட்டன. வன்முறையை வன்முறையால் அடக்குவது என்ற ரீதியிலேயே நாடுகளின் - வல்லரசுகளின் அரசியல் சிந்தனைகளும், சித்தாந்தங்களும், அணுகுமுறைகளும் மாறிவருகின்றன. உலகில் நிலவும் சகல பிரச்சினைகளிலும் வன்முறைக்கே முதன்மை கொடுக்கப் படுகின்றது. தாங்கள் தயாரிக்கும் பயங்கர ஆயுதங்களைச் சந்தைப்படுத்துவதற்காக நேரடியாகவும் மறைமுகமாகவும் சில நாடுகள் வன்முறையை ஊக்குவிக்கின்றன. மற்ற நாடுகளைப் பலவீனப்படுத்தித் தங்களது மேலாதிக்கத்தை அந்த நாடுகளில் நிலைநிறுத்துவதற்காகவும் சில நாடுகள் வன்முறையைத் தூண்டுகின்றன.

பிரச்சினைகளையும் அதன் விளைவாக உருப்பெறும் வன்முறைகளையும் மதங்கள் தீர்க்கத் தவறிவிட்டன. இன்று நடைபெறும் போர்கள் யாவும் வன்முறைகள் யாவும் மதத்தின் பெயரால் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது, மதமானது எப்படி மனிதனை நல்வழிப்படுத்துமென எதிர்பார்க்கமுடியும்?

தாபன ரீதியாக இயங்கிக்கொண்டிருக்கும் எதனாலும் மனிதனுக்கு விடிவு கொடுக்க இயலாது. மனிதப் பிரச்சினைகளுக்குப் புறத்திலிருந்து விடைகாண முனைவது மேலும் மேலும் பிரச்சினைகளைப் பெருக்கவே உதவும். தனி மனிதனுடைய அகத்தில்தான் வன்முறை அவலங்களுக்கான விடைகள் இருக்கின்றன.

தனி மனிதர்களின் கூட்டுத்தான் சமூகம். தனி மரம் தோப்பாகாது. தனி மனிதனை நீக்கிவிட்டு சமூகம் பற்றிச் சிந்திக்க இயலாது. தனி மனிதனுடைய மூளையில் கருக்கொள்ளும் எண்ணங்கள் தான் சமூகம் நோக்கி நகர்வு பெறும்போது கொள்கைகளாகவும், கோட்பாடுகளாகவும், சித்தாந்தங்களாகவும் உருப்பெறுகின்றன. இந்த அடிப்படையை நாம் உணரும்வரை எங்கள் பிரச்சினைகள் பல் திசைகளில் பல்கிப் பெருகிப்போய்க் கொண்டிருப்பதை எம்மால் தடுக்கமுடியாது.

சமூகத்தில் காணப்படும் அவலங்கள் யாவும் தனி நபர்களின் அவலங்களே. சமூக அவலங்கள் எதுவுமே வேறிடத்திலிருந்து முளைத்து வரவில்லை. நிகழ்காலத்தில் உயிர் வாழ்ந்துகொண்டிருக்கும் தனி மனிதனுடைய அகஞ்சார்ந்த பிரச்சினைகளுக்கு இறந்தகாலத்தில் இருப்புக்கொண்டிருக்கும் ஒரு தாபன ரீதியான கருத்தால், கொள்கையால், கோட்பாட்டால் எப்படித் தீர்வு காண இயலும்? எந்தவொரு பிரச்சினையையும் தாபனங்கள் இதுவரை பூரணமாகத் தீர்த்ததாகச் சரித்திரம் இல்லை. பிரச்சினைகள் வேண்டுமானால் மேலோட்டமாகப் பூசி மெழுகப்பட்டிருக்கலாம். இது நாள் வரை எந்தப் பிரச்சினையின் கருவைத்தானும் எந்தத் தாபனமும் எட்டவில்லை. ஏன், அடையாளமே காணவில்லை என்றே சொல்லலாம். எண்ணங்களால் உருவாகிக்கொண்டு இருக்கும் பிரச்சினைகளுக்கு, உறைந்து இறுகிப்போயுள்ள கோட்பாட்டுச் சித்தாந்தங்களால் உருவாக்கப்பட்ட தாபனத்தால் எப்படித் தீர்வு காண இயலும்? மனித `எண்ணம்' தான் பிரச்சினையாக இருக்கும்போது, அதே எண்ணத்தால் விடைகாண விழைவது வேடிக்கையான வீண் முயற்சியன்றோ?

தனி மனிதனுடைய `நான்' என்பது ஒன்று திரண்டு உருவாகிய பிரச்சினையை, நிறுவனமாக்கப்பட்ட எண்ணத் தொகுப்பால் அணுகும் போது மேலும் பிரச்சினை செறிவு பெறுமேயன்றிப் பிரச்சினை ஐதாகாது தீராது.

ஒரு மிகப்பயங்கரமான மிருகத்தைப் பார்த்தமாத் திரத்தே உடனடியாக நாங்கள் செயற்படுகின்றோம். அந்த உடனடிச் செயற்பாட்டில் முழு நினைவாற்றலின் பேணலும் அக்கணத்திலேயே வெளிக்காட்டப்படுகிறது. இந்த வரையறுக்கப்பட்ட நிறைவாற்றலானது எவ்வகையில் வெளிக்காட்டப்பட்டாலும் அங்கே புரிந்துகொள்ளலோ காணுதலோ நிகழவில்லை. வரையறுக்கப்படாத காண்பதிலேயே உண்மையான செயற்பாடு நிகழ்சின்றது.

நான் ஒரு சமயத்தையோ, இனத்தையோ, குலத்தையோ, குழுவையோ சேர்ந்தவனாக இருந்தால், நான் எனது வரையறைகளுக்கு உட்பட்டு, எனது பின்னணியின் வழி நடத்தலின்படியேயே செயற்படுவேன். அந்த வரையறை சில நாட்களின் அல்லது பல நூற்றாண்டுகளின் விளைவாகக்கூட இருக்கலாம். எனவே அச்செயற்பாடு, பேணப்பட்ட கருத்துப்படியே அமையும். எனது கருத்திற்கும் செயற்பாட்டிற்குமிடையே பிரிவு இருக்கும்வரை பிணக்கும் இருந்துகொண்டே இருக்கும். இந்தப் பிணக்கே வன்முறையாகும். வன்முறையின் கட்டமைப்பும் இயல்பும் இந்த முரண்பாடுதான். நான் வன்முறையாளனாக இருந்து கொண்டு அதே வேளையில் என்னுள் இரக்க உணர்வும், மென்பண்பும் இருக்குமேயானால் அது என்னுள் இருக்கும் முரண்பாடாகும். இந்த முரண்பாடு மேலும் பெரிய வன்முறைக்கு வழிவகுக்கின்றது. கருத்து என்பது எப்பொழுதும் பழையது. கருத்துக்கள் யாவும் எப்பொழுதும் எதிர்காலத்திற்குள் செலுத்தப்படும் இறந்தகாலத்தின் விளைவேயாகும். எனவே எல்லாக் கருத்துக்களும் பழையனவே. ஆனால் செயற்பாடுகள் அனைத்தும் எப்பொழுதும் நிகழ்காலத்திலேயே நிகழ்கின்றன.

நினைவு என்பது அறவே இல்லாவிட்டால் நாம் அனைவரும் நினைவு இழந்த மறதி நிலையிலல்லவா இருப்போம்? இந்நிலையில் நாம் எமது பெயரையும் வாழுமிடத்தையும் என்ன செய்கின்றோம் என்பதையும், சுருங்கக் கூறின் எதையுமே அறியாது இருப்போம்.

(தொடர்ச்சி 28ம் பக்கம்...)



# எமது விடிவிற்காகத் தமது உயிர்களை...

## மேஜர் ஆவர்த்தனா



எங்கு பார்த்தாலும் அழகான சோலைகளும் பச்சை பசேல் என்ற வயல் வெளிகளும் நிறைந்து அழகான நந்தவனம் போல் காட்சி தரும் சாவகச்சேரியிலே கச்சாய் என்ற ஊரிலே விநாயகமூர்த்தி - லோகேஸ்வரி தம்பதியினருக்கு மூத்த மகளாக தேவரஜனி பிறந்தாள். இவளுக்கு சகோதர்கள் ஏழு.

தேவரஜனிக்கு பாடசாலை செல்லும் வயது வந்தவுடன், பெற்றோர் அவளை யாழ் சாவகச்சேரி மகாவித்தியாலயத்தில் கல்வி பயில்வதற்காக அனுப்புகிறார்கள். அங்கு கல்வியிலே மிகவும் திறமையாக விளங்கிய தேவரஜனியை பெற்றோர் கிளிநொச்சியில் உள்ள சென். திரேசா பாடசாலையில் கல்வியைத் தொடர சேர்க்கின்றார்கள். அங்கே உயர் தரம் வரை கல்வி பயில்வதற்காக, பெற்றோரைப் பிரிந்து அம்மம்மாவுடன் வாழ்ந்தாள். படிப்பிலும் விளையாட்டிலும் ஆர்வமாக விளங்கி, ஆசிரியர்களின் பாராட்டுக்களைப் பெற்றாள்.

அந்த கால கட்டத்திலே அநியாயக்காரர்களின் அட்டூழியங்களைக்கண்டு மன வேதனைப்பட்டாள். இவர்கள் நாங்கள் தமிழர்கள் என்றதுக்காக எங்களை எவ்வளவு கொடுமைப்படுத்துறாங்கள் இவர்களை இப்படியே விடக்கூடாது அடித்து விரட்ட வேண்டும். நானும் புலியாக மாறினால் தான் என்னாலும் அது முடியுமென்று மனம் பொருமினாள்.

தலைவன் வளர்க்கும் ஆயிரமாயிரம் அக்கினிப் பிழம்புகளில் இவளும் ஒருத்தியாக இணைகிறாள். மகளிர் 25வது பயிற்சிப்பாசறையிலே ஆவர்த்தனா என்ற பெயருடன் பயிற்சிகள் பல திறமையாகப்பெற்று, அமைதியான சுபாவம் கொண்ட இவள், பெரும் புயலாக களங்காணப் புறப்படுகிறாள். தலைவன் வழி நடத்தலில் முதன் முதல் பெயர் சூட்டி நடைபெற்ற ‘ஆகாய கடல் வெளிச்‘சமருக்கு செல்கிறாள். அந்தச்சணடையிலே திறமையாகச்செயட்பட்டு திருப்புகிறாள். பின் இவளை செஞ்சோலையின் நிதிப்பொறுப்பாளராக நியமிக்கின்றனர். அவ்வேளையிலும் இவள் திறமையாக செயற்பட்டாள். அங்கு இருக்கும் சின்னஞ்சிறார்களுடன் அன்பாகவும் அவரவர்க்கு ஏற்ற விதத்திலும் பழகுவாள். நிர்வாகத்திறமையுள்ள இவள் கொடுக்கப்படும் வேலைகளை தானே முன்னின்று திறமையாகச் செய்து முடிப்பாள்.

தானும் களங்களுக்குச்செல்ல வேண்டும் என்று இவள் மிகவும் ஆர்வமாக இருந்ததால், இவளின் ஊக்கம் கண்டு யாழ் செல்லும் படையணிக்கு அனுப்பப்படுகிறாள். கடும் பயிற்சிகள் பெற்று தன்னை முழுமையாக்கியவள், முக்கொம்பனில் தங்களுக்கென முகாம் அமைத்தனர். அதை அமைப்பதற்கான ஒழுங்குகளை ஊண், உறக்கமின்றி செய்கையில் தவறுதலாக விபத்துக்குள்ளாக்கி ஆவர்த்தனா அவசர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டாள். இவள் மீளுவாள் என உறுதியளிக்கப்படவில்லை. ஆனால் மூன்று மாதங்களாய் படுக்கையில் இருந்த இவள் கொஞ்சம் கொஞ்சமாய் நிலைமைக்கு திரும்பிக்கொண்டிருந்தாள். சந்திரிகா வந்து பார்த்து விட்டு தணிகைச்செல்வி அக்காவிடம் ஆவர்த்தனாவைப் பராமரிக்க ஒரு பிள்ளை வேணும் என்று கூறவே தன்னால் எல்லாம் செய்ய முடியுமென எழுந்து நடந்து பழகுவாள். தினமும் வேதனையை அனுபவித்த இவள் நிலையைக்கண்ட பெற்றோர், பல வைத்தியம் செய்தனர். தன்னுடலை முழுமையாகத் தேற்றிக்கொண்ட இவள், பயிற்சிகள் முடித்து பிள்ளைகள் களத்திற்கு அனுப்பப்பட்ட போது தானும் அவாகளுடன் போக வேண்டும் என்று அடம்பிடித்தாள். கடமை நேரத்தில் கண்ணாகவும் பிள்ளைகள் இடத்தில் அன்பாகவும் கண்டிப்புடனும் பழகுவாள்.

ஒரு முறை பிள்ளை ஒன்று சைக்கிளால் விழுந்து கால் வீங்கிவிட்டது. அப்பிள்ளையின் காலுக்கு நோ எண்ணை போட்டு உருவுவாள். ஒரு நேரம் போகாவிட்டால் தன்னுடன் கதைக்க வேண்டாம் என அன்பால் கண்டிப்பாள். அந்தப்பிள்ளை அடுத்ததரமும் மாட்டுடன் அடிபட்டு இரு கால்களும் உளுக்கி விடவே, கண்டவர்கள் போய் சொன்னதும் ஒரு பிள்ளையைக் கூட்டிக்கொண்டு ஓடி வந்து விட்டாள். “உன்னை எத்தனை தரம் சைக்கிள் ஓட வேண்டாம் என்று சொல்லுறது” என அன்பாகக் கண்டித்தாள். உனக்குச் சண்டை என்றால் ஆடு, மாடுடன் தான் என்று சொல்லி சிரிப்பாள். தனக்கென்று வைத்திருந்த நோ எண்ணையை எடுத்து மூன்று நேரமும் தவறாமல் உருவுவாள்.

தலைவரின் நேரடி வழிநடத்தலில் ஓயாத அலைகள்-3 தொடர்ந்து கொண்டிருந்தது. எல்லோரும் சண்டைக்குப்போக ஆயத்தமாகிறார்கள். ஆனால் இவள் போவதற்கு அனுமதி கிடைக்கவில்லை. அடம்பிடித்தாள்... எல்லோரும் என்னை விட்டு போகினம் என்று சாப்பிடாமல் இருந்தாள். பின் சக போராளிகள் ஆறுதல் வார்த்தைகள் சொல்லி சாப்பிட வைத்தார்கள். அன்று இரவு 9 மணி இருக்கும் மனோக்கா முகாமுக்கு வந்தா. அவா அக்காவைப் பார்த்து வெளிக்கிடச் சொன்னதும் ஒருவருக்கும் சொல்லாமல் உடமைகளை எடுத்துக்கொண்டு 17.12.99 அன்று “போட்டு வாரன்..” என்ற கையசைவுடன் ஓயாத அலை-3ற்குப் புறப்பட்டாள். போனவள் போனது தான் திரும்பவில்லை. பரந்தன் - ஆனையிறவு பகுதியில் நிற்பதாய் மட்டும் அறிந்தோம்.


25.12.99 அன்று.... வானொலியை கேட்டுக்கொண்டிருந்தபோது... ஆவர்த்தனா வீரச்சாவென செய்தி போய்க்கொண்டிருந்தது... அந்தவேளை அதிர்சியில் நின்று விட்டேன். ஆனால், அவள் சொன்னது போலவே எந்த மண்ணைப் பிடிக்கப்போனாளோ அந்த மண்ணில் இன்று புலிக்கொடி பறக்கின்றது. அவள் கண்ட கனவு நனவாகி விட்டது.

-போராளி - சொரூபி (தொழில் நுட்பம்)

# ஒலிம்பிக் -2004

23.08.2004 இல் நிலைகள்....

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. சீனா | 22 | 15 | 11 | 48 |
| 2. அமெரிக்கா | 21 | 22 | 15 | 58 |
| 3. ஜப்பான் | 13 | 06 | 07 | 26 |
| 14. அவுஸ்திரேலியா | 12 | 08 | 13 | 33 |
| 5. பிரான்ஸ் | 09 | 07 | 07 | 23 |
| 6. ஜேர்மனி | 08 | 10 | 11 | 29 |
| 7. இத்தாலி | 07 | 06 | 07 | 20 |
| 8. ரஷ்யா | 06 | 14 | 17 | 37 |
| 09. கொரியா | 06 | 10 | 15 | 21 |
| 10. பிரித்தானியா | 06 | 07 | 07 | 20 |
| 11. ரொமேனியா | 06 | 03 | 02 | 11 |
| 12. உக்கிரேன் | 06 | 02 | 05 | 13 |
| 13. கிரீஸ் | 05 | 01 | 02 | 08 |
| 14. நெதர்லாந்து | 03 | 06 | 08 | 17 |
| 15. கங்கேரி | 03 | 04 | 01 | 08 |
| 16. சுவீடன் | 03 | 00 | 01 | 04 |
| 16. துருக்கி | 03 | 00 | 01 | 04 |
| 18. பெலாரஸ் | 02 | 03 | 06 | 11 |
| 19. போலந்து | 02 | 02 | 03 | 07 |
| 20. சுலோவாக்கியா | 02 | 02 | 01 | 05 |
| 21. ஜோர்ஜியா | 02 | 01 | 00 | 03 |
| 22. தாய்லாந்து | 02 | 00 | 02 | 04 |
| 23. சிலி | 02 | 00 | 01 | 03 |
| 24. நியூசிலாந்து | 02 | 00 | 00 | 02 |
| 24. நோர்வே | 02 | 00 | 00 | 02 |
| 26. கனடா | 01 | 02 | 01 | 04 |
| 27. கியூபா | 01 | 01 | 06 | 08 |
| 28. பல்கேரியா | 01 | 01 | 05 | 07 |
| 29. இந்தோனேசியா | 01 | 01 | 02 | 04 |
| 29. தென் ஆபிரிக்கா | 01 | 01 | 02 | 04 |
| 31. சிம்பாவே | 01 | 01 | 01 | 03 |
| 32. எதியோப்பியா | 01 | 01 | 00 | 02 |
| 33. டென்மார்க் | 01 | 00 | 05 | 06 |
| 34. பெல்ஜியம் | 01 | 00 | 02 | 03 |
| 34. பிரேசில் | 01 | 00 | 02 | 03 |
| 36. சுவிற்சர்லாந்து | 01 | 00 | 01 | 02 |
| 37. எமிற்றேஸ் | 01 | 00 | 00 | 01 |
| 38. ஸ்பெயின் | 00 | 06 | 01 | 07 |
| 39. ஒஸ்ரியா | 00 | 04 | 01 | 05 |
| 40. செக்குடியரசு | 00 | 03 | 03 | 06 |
| 41. கொரியா | 00 | 03 | 01 | 04 |
| 42. குரோசியா | 00 | 02 | 02 | 04 |
| 43. போர்த்துக்கல் | 00 | 02 | 00 | 02 |
| 44. சிலோவேனியா | 00 | 01 | 02 | 03 |
| 45. தைமிட்ரி | 00 | 01 | 01 | 02 |
| 45. எஸ்தோனியா | 00 | 01 | 01 | 02 |
| 47. பின்லாந்து | 00 | 01 | 00 | 01 |
| 47. கொங்கொங் | 00 | 01 | 00 | 01 |
| 47. இந்தியா | 00 | 01 | 00 | 01 |
| 47. கஜகஸ்தான் | 00 | 01 | 00 | 01 |
| 47. கென்யா | 00 | 01 | 00 | 01 |
| 47. லித்துஜேனியா | 00 | 01 | 00 | 01 |
| 47. சேர்பியா | 00 | 01 | 00 | 01 |
| 54. ஆஜென்ரீனா | 00 | 00 | 02 | 02 |
| 54. அஜர்பைஜா | 00 | 00 | 02 | 02 |
| 56. கொலம்பியா | 00 | 00 | 01 | 01 |
| 56. எரித்திரியா | 00 | 00 | 01 | 01 |
| 56. இஸ்ரேல் | 00 | 00 | 01 | 01 |
| 56. ஜமேக்கா | 00 | 00 | 01 | 01 |
| 56. மொங்கோலியா | 00 | 00 | 01 | 01 |
| 56. திரிநிடட் | 00 | 00 | 01 | 01 |
| 56. வெனிசுலா | 00 | 00 | 01 | 01 |



போர் ஒரு பககம் நடந்து கொண்டிருந்தாலும் விளையாட்டு ரசிகர்களின் ஆர்வத்திற்கு குறைவில்லைத்தான். கடந்த 21ம் திகதி ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் உதைபந்தாட்டப் போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் அவுஷ்தி ரேலிய அணியும் ஈராக்கிய அணியும் மோதிக்கொண்டன. இந்நிகழ்வின் நேரடி ஒளிபரப்பை தொலைக்காட்சி வழியாகப் பார்த்துக்கொண்டிருக்கும் ஈராக்கிய உதைபந்தாட்ட இரசிகர்கள் உற்சாக மிகுதியில் கைதட்டி ஆர்ப்பரிக்கின்றனர். இப்போட்டியில் ஈராக்கிய அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.


## பரத நாட்டிய அரங்கேற்றம்

திரு.திருமதி. நந்தகுமார் தம்பதிகளின் புதல்வியும், திரு.திருமதி. ஜெயகோபி தம்பதிகளின் புதல்வியும், பரதாஞ்சலி நாட்டியாலய அதிபர், பரதகலாவித்தகர் திருமதி அனுசா சற்குண நாதன் அவர்களின் மாணவிகளுமான செல்வி. ஜெனிசா நந்தகுமார், செல்வி. கீர்த்தனா ஜெயகோபி ஆகியோரின் பரத நாட்டிய அரங்கேற்றம் ஆவணி 12 ம் திகதி [28-08-2004] சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் அனைவரும் வருகைதந்து செல்விகளை ஆகீர்வதித்து, ஏகுமாறு பணிவன்புடன் அழைக்கிறோம்.

-நன்றி-

மேலதிக தொடர்புகட்கு : 07 95 20 15 79 / 07 96 08 23 92

விழா மண்டபம் :

**STADLT HALLE CHUR**

**WEST STR. 5. 7000 CHUR**

அன்புடன் திரு.திருமதி. நந்தகுமார் குடும்பத்தினர்

திரு.திருமதி. ஜெயகோபி குடும்பத்தினர்

081-2846349 081-2848719

Pub


## உண்மையின் சாட்சியம்

[20ம் பக்கத் தொடர்ச்சி]

சபேசன் என்கின்ற இந்த நபர் - தனது பெயரில் தொகுத்த எந்த நூலுக்காவது இவ்வாறு ஒரு குறிப்பு எழுதியிருந்தால், நாங்கள் எந்த ஆட்சேபமும் தெரிவிக்கப் போவதில்லை. ஆனால் எங்களின் பெயரில், அதாவது புதுசுகளின் பெயரில் இவ்வாறு எழுதியதையிட்டு நாம் கடும் கண்டனம் தெரிவிக்கின்றோம் என்கின்ற வார்த்தையுடன் இதனை நாம் விட்டுவிடப் போவதுமில்லை.

இந்த செல்வகுமாரனை நான் 1990 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கண்டிருக்கின்றேன். அதுபோக, தமிழீழத் தேசிய விடுதலை முன்னணியின் மத்தியகுழு உறுப்பினர் என்கின்ற காரணத்துக்காக நாங்கள் செல்வகுமாரனை கடத்திக்கொன்றுள்ளோம் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினர் அறிக்கை விட்டார்களா? அல்லது இவருக்காவது, யாருக்காவது இரகசியமாகச் சொன்னார்களா? சபேசன் என்கின்ற இந்த நபர் - தானே காரணத்தைக் கற்பித்து, அதனைத் தன் பெயரில் அல்லாது புதுசுகளின் பெயரில் பிரசுரிப்பதற்கு என்ன காரணம். சிங்களப் பேரினவாத அரசுடனம், அதன் தலைவர்களுடனும் இவருக்கு இருக்கும் உறவும், நெருக்கமுமே இதற்குக் காரணமாகும். லண்டனிலுள்ள இவரது வீட்டுக்குச் சென்றால், சிங்கள அரசியற் தலைவர்களுடன் இவர் சேர்ந்து எடுத்துக்கொண்ட வண்ணப் புகைப்படங்கள், சட்டம் போட்டு மாட்டப்பட்டிருக்கும். அதிலிருந்து இவரது அரசியலை நாம் புரிந்துகொள்ளலாம். இவரது சொந்தத் தமையனார் சந்திரிகாவுக்காக தேர்தல் வேலைகள் செய்துள்ளார் என்பதிலிருந்தும் யாவற்றையம் நாம் புரிந்து கொள்ளமுடியும். இந்தத் தொகுப்பு நூல் என் கைக்குக் கிட்டியவுடன், இந்த நபருக்கு தொலைபேசி எடுத்து, செல்வகுமாரன் தொடர்பான குறிப்புக்கு என் கடும் ஆத்திரத்தைத் தெரிவித்தேன். "நீ புலிக்கு வக்காலத்து வாங்குகிறாய்" என்றார். உன்னுடைய ஊகத்தை எங்களுடைய உறுதியான முடிவாக நீ எப்படி எழுதலாம்? என்றேன். பதில் சொல்லத் தெரியாது திணறி, தொலைபேசியை அறைந்து வைத்தார் சபேசன் என்கின்ற இந்த நபர்.

நான் உடனடியாக பாலசூரியனுடனும், இளவாலை விஜயேந்திரனுடனும் தொடர்பு கொண்டேன். பாலசூரியன் "எனக்கும் புதுசுவிற்கும் எவ்வித சம்பந்தமுமில்லை? என்று தெரிவித்துக் கொண்டார். இளவாலை விஜயேந்திரன்" நீ என்ன முடிவு எடுக்கின்றாயோ அதற்கு என்னுடைய முழுமையான உடன்பாடும், ஒத்துழைப்பும் கிடைக்கும் என்றார்.

எனவே, இத்தால் புதுசுகள் சார்பில் நான் இவற்றை அறிவிக்கின்றேன். சபேசன் என்கின்ற இந்த நபர் வெளியிட்ட அமைதி குலைந்த நாட்கள் கவிதைத் தொகுப்புக்கும், புதுசுகளுக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது. அந்தத் தொகுப்பில் வெளிவந்த எந்தக் கருத்துக்களும் புதுசுகளின் கருத்துக்கள் அல்ல. சபேசன் என்கின்ற இந்த நபருக்கும், புதுசுவிற்கும் எந்த உறவும், எந்தத் தொடர்பும் கிடையாது. மேலும் புதுசுகளின் பெயரில் வந்திருந்த கருத்துக்களினால் யாரும் மனம் நொந்திருந்தால், அந்த வருத்தத்தை நாம் புரிந்துகொண்டு, எமது செயல்களினூடாக அந்த வருத்தத்தை நாம் துடைத்துவிடுகின்றோம். எமக்கும் அந்தக் கருத்துக்களுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை என்பதைப் புரிந்திருப்பீர்கள் தானே?

இன்னும் எச்சரிக்கை ஒன்று. சபேசன் என்கின்ற இந்தக் கோரமுகமும், பிரமுகர்த்தனமும் யுகம் என்கின்ற பத்திரிகையினூடாக தமிழ்த் தேசியத்தை நசுக்கவும், சிங்களப் பெருந்தேசிய இனவாதத்தை நியாயப்படுத்தவும் வெளிவருகின்றது. அதனை மிகக் கவனமாக இனம் காணுங்கள்.

நன்றி.

# நத்தார் தினத்தை முன்னிட்டு

Anisch

# Financial Consulting Gmbh & Sarah Star Thun



## இணைந்து வழங்கும் சுவிஸ் ஜனரஞ்சகப் பாடல் போட்டி



## B.H அப்துல்கமீத்தின் பாட்டுக்குப் பாட்டு

சிறந்த பாடகர் பாடகிக்கான தெரிவும், சிறந்த பாடகர் பாடகிக்கான நேரடித்தெரிவில் வெற்றிபெறுவோருக்கு பி.ஏச் அப்துல்கமீத்தின் சிறப்புச் சான்றிதழ்களும் வழங்கப்படும். மற்றும் சுவிஸ்



## Magic கரோலின் இசைக்குழுவின் இசைமெட்டுக்களும்

Bern, Zürich ஆகிய மாநிலங்களின் நடைபெறும் இந் நிகழ்ச்சியின் நுழைவாயிற் சீட்டுக்கான அதிர்ஸ்டலாபம் Zürich மாநிலத்தில் குலுக்கப்படும்.

1- வது பரிசு 5 பவுன் நெக்லஸ்
2- வது பரிசு 4 பவுன் நெக்லஸ்
3- வது பரிசு 3 பவுன் நெக்லஸ்
4- வது பரிசு 2 பவுன் சங்கிலி
5- வது பரிசு 1 பவுன் சங்கிலி

மற்றும் 40 வரையான ஆறுதல்பரிசுகள்.....

**சனி + ஞாயிறு ஆகிய 2 நாட்கள்**

இடம்: 25.12.2004 சனி: Hotel National Bern, Bahnhof ற்கு அருகாமையில்( Hrischengraben)
26.12.2004 ஞாயிறு: Salmansaal, Schlieren Zürich

குறிப்பு: B.H அப்துல்கமீத்தின் நேரடித்தெரிவு நடைபெறுவதால் தெரிவில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் 30.10.2004 ற்கு முன் தொடர்பு கொள்ளவும். மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் தொடர்பு கொள்ளலாம்.
அனைத்து விபரங்களுக்கும் தொடர்புகொள்ள வேண்டிய இலக்கம்.

Anisch

Tel: 079.757 74 75
031.911 03 38
078.605 99 41

- எமது நிறுவனத்தால் ஏற்கனவே வாடிக்கையாளர்களாக (Credit) இருப்பவர்களுக்கும், எம்மிடம் வங்கிக்கடன் திட்டத்தில் வாடிக்கையாளர்களாக இணைந்து கொள்வோருக்குமான பரிசுத் திட்டம். 25.12.2004 ல் சுவிஸ் ஜனரஞ்சகப் பாட்டுப் போட்டியில் 25 வாடிக்கையாளர்கள் தெரிவு செய்யப்பட்டு விசேட அன்பளிப்புக்கள் வழங்கப்படும்.

பரிசுகள்: 1ம் பரிசு 5 பவுன் நெக்லஸ் 2ம் பரிசு 4 பவுன் நெக்லஸ் 3ம் பரிசு 3 பவுன் சங்கிலி
4ம் பரிசு 2 பவுன் சங்கிலி 5ம் பரிசு 1 பவுன் சங்கிலி மற்றும் 6 முதல் 15 வரையிலானவர்களுக்கு
DVD Player அன்பளிப்பாக வழங்கப்படும். மற்றும் 16 முதல் 25 வரை சுவிஸ் மணிக்கூடு வழங்கப்படும்.

- இதேபோல் எமது நிறுவனத்தில் மருத்துவக்காப்புறுதி (Krankenkasse)திட்டத்தில் இணைந்து கொண்டவர்களுக்கும் தொடர்ந்தும் இணைந்து கொள்பவர்களுக்கும் பரிசுத்திட்ட முறை:

பரிசுகள்: 1ம் பரிசு 5 பவுன் நெக்லஸ் 2ம் பரிசு 4 பவுன் நெக்லஸ் 3ம் பரிசு 3 பவுன் சங்கிலி
4ம் பரிசு 2 பவுன் சங்கிலி 5ம் பரிசு 1 பவுன் சங்கிலி மற்றும் 6 முதல் 15 வரையிலானவர்களுக்கு
DVD Player அன்பளிப்பாக வழங்கப்படும். மற்றும் 16 முதல் 25 வரை சுவிஸ் மணிக்கூடு வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: K.Anandan (Anisch)
Gantrischstr 11, 3052 Zollikofen
Tel:031.911 03 38 Fax:031.911 58 94
Natel: 079.757 74 75

Solo Movies GmbH
Audio.Video.Kommunikationtechnik
Swiss-London-Srilanka
Tel.032 652 52 45.078 733 30 76
www.solomovies.com
Mail:vasi@solomovies.ch

Ammu Travels

S.K.TRADING GMBH
Quellen str 1,
8005 Zurich
Tel.01/ 272 43 36, 01 272 49 90
01/272 4330. Fax.01/ 273 43 32

Sri Sai Enterprise
Sihlhallen str 19
8004 Zurich
Tel.01/240 05 55,01/431 99 67.
Fax 01/43199 69.

சிகரம்
Schoenegg str.15
8004 Zürich

Zweierstr. 55
8004 Zürich
Tel. 01/949 71 11
Natel. 079 / 678 41 20

Luxary Travels
Badenerstr. 125
8004 Zürich
Tel.043/499 54 54
Fax.043/243 58 47

Mohan Jewellery & Textiles
4051 Basel

Sakthy Jewellery
Elisabethenanlage 11
4051 Basel
Tel.061/383 86 86
Natel.079/669 42 07

Basel SPT
Textile & Jewellery
Elisabethenanlage 9
4051 Basel

Noel Credit

Ravi Jewellery
Knuppenmattstr 2
3414 Oberburg
Tel.034/423 38 46
HP.076/581 77 29

Jasijananth
Travels&Tour GmbH

Suji Jewellery
Neuengasse Passage 3
3001 Bern

AMBAL STORE
அம்பாள் ஸ்ரோர்ஸ்
Schazenburg str 127 ug 3097 Liebefeld
Tel.031/972 89 46 Natel. 079/311 86 16

## அதிசயம் ஆனால் உண்மை

உங்கள் அனைத்துக் கொண்டாட்டங்களுக்கும் தேவையான பேப்பர் பிளேட்ஸ், கப், மேசை விரிப்பு, கரண்டி, பாயாசக்கப், கை துடைக்கும் பேப்பர் மற்றும் உங்களுக்குத் தேவையானவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

**விமல் விநியோக நிலையம்**
**VIMAL DISTRIBUTION**

1 Bis , Rue Chemain Vert
93800 Epiny Sur Saine
Port 0616812200 Ou 0666795689
Tel.et Fax - 01 42 35 24 98

குறிப்பு - மிகுதிப் பொருட்கள் திரும்பப் பெறப்படும்.

## போட்டோ பாலா

மங்கலகரமான உங்கள் விழாக்கள் மற்றும் அனைத்து நிகழ்வு போட்டோ அல்பங்களை பாதுகாப்பான முறையில் Lamination செய்துகொள்ளாம்

உங்கள் அனைத்து தொடர்புகளுக்கும்:

**Photo Bala**
87 Rue de Clignancourt, 75018 Paris
Tel&Fax: 01.42.23.39.15 / 06 18 35 40 77

## சிறிய விளம்பரங்கள் இப்பகுதியில் எதிர்பார்க்கப் படுகின்றன.

## Asha Video Movies

உங்கள் இல்லத்தின் திருமணம், பூப்புனித நீராட்டுவிழா பிறந்தநாள் மற்றும் அனைத்து மங்கலகரமான நிகழ்வுகளைச் சிறந்த முறையில் [Digital - DV Camera] மூலம் வீடியோவில் படம் பிடித்து, நவீன முறையில் கணினி [Computer] மூலம் பதிவுசெய்து தருகின்றோம். அத்துடன் புகைப்படமும் எடுத்துக் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 01 48593429 / 0615737073

Pub-Fr-39

## RESTAURANT ROYAL TANDOURI

உங்கள் வீட்டில் நிகழும் விசேட வைபவங்களுக்கான உணவு வகைகளும் சிற்றுண்டி வகைகளும் குறைந்த விலையில் நிறைந்த சுவையுடன் வாங்கி உண்டு மகிழ்ந்திட நாடுங்கள்

## RESTAURANT ROYALTANDOURI

100 பேருக்குட்பட்ட கொண்டாட்டங்களுக்கு குளிரூட்டப்பட்ட மண்டபம் ஒழுங்கு செய்து தரப்படும்

*Métro: Bellville*

தொடர்புகளுக்கு:
01 43 14 67 49
06 64 00 66 62
06 10 59 37 44

## பற்களின் அழகு சொற்களுக்கு உறுதி! உங்கள் பற்களில் பிரச்சினையா?



புதிய பற்கள் கட்டவேண்டுமா?
ஆலோசனைக்கு எம்மை நாடுங்கள்!
தொடர்புகளுக்கு:
01 48 84 92 67
06 25 89 75 52

என்ற தொலைபேசியில் தொடர்பு கொள்ளுங்கள்.

## EUROCONSULT SARL TRADUCTIONS

**மொழி பெயர்ப்பு நிலையம்**

அனைத்துவித மொழி பெயர்ப்பு, இலவச சட்ட ஆலோசனை, வர்த்தக - கணக்காய்வு - தொழிலாளர் பிரச்சனைகள், நிர்வாகக் கடிதம் போன்ற உங்கள் தேவைகளுக்கு
24, Rue Perdonnet , 75010 Paris
Tel: 0153267010 - Fax: 0153267502

கடல் உணவு வகைகளின் சுரங்கம்

## ஆராழி
## ARALI

உங்களுக்குத் தேவையான அனைத்து கடல் உணவு வகைகளையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள எங்களை நாடுங்கள்

தாயகக் கடலின் சுவையுணவு சுமந்து புலம் பெயர்ந்து வந்ததோ இந்த ஆராழி!


D.K.S.R. Asian Suppermarkt
Lostex Plad 8E
Svendborg
5700 Denmark
004562216773

Tiefkuhl Feinkost
Kanal Str 27
67655 Kaisers lautern
00496313609655
00491776035859
00491797157501

Top Fisch Markt
26.Rue Derdonnet
75010 Paris
0033144720107
Mobil -0033660290550

Asia Trade Center-Gmbh
Sumpf Str 24
6300 2UG (CH)
0041417404830
0041764183553 Aschok

Norwood Mini Market
31.Station Road
South Norwood
London
SE.25.5AH
Tel. 00442087718585
Mobil 00447958529816 -
00447795386837



## வீடு வாடகைக்கு

Métro (ligne 8) Créteil Préfecture மிக அருகில் F3 (74 m2) appartement [ஒரு Hall மற்றும் இருண்டு படுக்கை அறைகள்] உடனே வாடகைக்கு விடப்படும்.

அணுகவும்: மகலி 06 81 22 94 08

## நித்தி வாகன சேவை

உங்கள் வீட்டுத் தளபாடங்களை பெரிய ($20M^3$) வாகனத்தில் பாதுகாப்பாக ஒரே தரத்தில் ஏற்றி இறக்கவும் மற்றும் லூர்த், ஐரோப்பிய நாடுகளுக்குமான வாகன தேவைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.

நித்தி : 01 48050214/06 13342518/06 07348051


## மரியன்னையின் பிறப்புவிழா

05.09.2003 ஞாயிறு
நேரம்: 12.30
திருப்பலி

இடம்: Eglise St.Joseph des Nations
Goncourt 75011 Paris

# மட்டக்களப்பில் மீண்டும் கிளைமோர் தாக்குதல் :

## மூத்தபோராளிகள் இருவர் வீரச்சாவு - சிறீலங்கா இராணுவ முகாமுக்கு அருகில் சம்பவம்



22.08.04)

மட்டக்களப்பு, வாகரைப் பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதல் மற்றும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில், விடுதலைப் புலிகளின் முன்னாள் அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப் பாளரும், தற்போதைய அரசியல்துறையின் நிர்வாகப் பொறுப் பாளருமான பாவாவும், மட்டகளப்பு - அம்பாறை மாவட்ட புனர்வாழ்வுத்துறைப் பொறுப்பாளருமான யோகாவும் உயிரிழந் ததுடன், பெண் போராளியான வேணுகா படுகாயமடைந்து மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவர்களுடன் பயணம் செய்து கொண்டிருந்த அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் காய மெதுவுமின்றி தப்பியுள்ள போதிலும், அவர் பயணம் செய்த மோட்டார் சைக்கிள் சேதமடைந்துள்ளது.

மட்டக்களப்புக்கு வடக்கே சுமார் 36 கிலோமீற்றர் தூரத்தில், மாங்கேணி மற்றும் காயாங்கேணி இராணுவ முகாம்களுக் கிடையே, இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள புல்லாவைச் சந்தியிலேயே வெள்ளியன்று பிற்பகல் 2.15 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வாகரைப் பகுதியில் நடைபெற்ற, 'யுனிசெவ்`வுடனான சந்திப்பில் கலந்து கொண்ட பின்னர், வாழைச்சேனை நோக்கி மோட்டார் சைக்கிள்களில் இவர்கள் திரும்பிக் கொண்டிருக் கையிலேயே இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. மோட்டார் சைக்கிளொன்றில் இவர்கள் இருவரும் வந்து கொண்டிருக் கையில், இவர்கள் அருகே மற்றொரு மோட்டார் சைக்கிளில் பெண் போராளிகள் இருவரும், இன்னொரு மோட்டார் சைக்கிளில் குயிலின்பனும் வந்து கொண்டிருந்தனர். பிற்பகல் 2.15 மணியளவில் காயாங்கேணி சிறீலங்கா இராணுவ முகாமுக்குச் சமீபமாக புல்லாவைச் சந்திக்கு இவர்கள் வந்த போது, வீதியோரத்தில் மரமொன்றில் பொருத்தப்பட்டிருந்த சக்தி மிக்க கிளைமோர் குண்டு வெடிக்கச் செய்யப்பட்ட அதே நேரம், இவர்கள் மீது சரமாரியாக துப்பாக்கிச் சூடும் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல்களில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த யோகாவும், அவரின் பின்புறமிருந்து வந்த பாவாவும் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். இவர்களின் உடல் முழுவதும், கிளைமோர் தாக்குதலாலும், துப்பாக்கிச் சூட்டினாலும் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளன. இதேநேரம், இவர்களுக்கு அருகே வந்த மோட்டார் சைக்கிளின் பின்புறமிருந்த பெண் போராளி படுகாயமடைந்துள்ளார். தாக்குதலுக்கிலக்காகி இவர்களும் அந்த இடத்தில் வீழ்ந்துள்ளனர். தாக்குதலை நடத்திய மூவர் தப்பியோடியதை தான் நேரில் கண்டதாகவும் அவர்களை அடையாளம் காட்டமுடியும் என்றும் குயிலின்பன் தெரிவித் துள்ளார்.


சம்பவம் நடைபெற்ற சந்தியில் தினமும் சிறீலங்கா இராணு வத்தினர் நிற்பது வழமை. இந்தச் சம்பவம் நடைபெற்ற போது, அந்த இடத்திலிருந்து சுமார் 15 மீற்றர் தூரத்தில் இராணுவத்தினர் நின்றிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சம்பவம் பற்றி அறிய வந்ததும் இது தொடர்பாக புலிகள் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு அறிவித்ததுடன், இந்தச் சம்பவத்திற்கு இராணுவத்தினரும் அவர்களுடன் சேர்ந் தியங்கும் தமிழ்க் குழுக்களுமே காரணமெனவும் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறைப் பொறுப் பாளர் கௌசல்யன், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவி னரிடம் கடும் ஆட்சேபம் தெரிவித்ததுடன், இராணுவத்தினரின் துணையுடனேயே இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இந்தச் சம்பவம் நடைபெற்றதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளார். சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு கண்காணிப்புக் குழுவினர் நேரில் சென்று விசாரணை நடத்தியுள்ளனர்.

## புலிகளின் ஆரம்பகால உறுப்பினர் பாவா

விடுதலைப் புலிகளின் ஆரம்பகால உறுப்பினரான பாவா (செல்வராஜா ஜெக தீஸ்வரன் - 42), அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளராக நீண்டகாலம் இருந்துள்ளார். கருணாவின் துரோகத்தனத் திற்கு பின்னர், இவர் அரசியல்துறையின் நிர்வாகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட் டிருந்தார். அம்பாறை மாவட்டத்தில் திருக் கோவில் விநாயகபுரத்தைச் சேர்ந்த இவர், முனைக்காட்டுப் பகுதியில் திருமணம் செய் திருந்தார். வெல்லாவெளியைச் சேர்ந்த யோகாவும் புலிகளின் நீண்டகால உறுப் பினராவார். இவர்கள் மீதான தாக்குதல் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த மாதம் 5ம் திகதி கரும்புலிகள் தினத்தன்று புலிகளின் மட்டக்களப்பு நகர அரசியல் பொறுப்பாளர் சேனாதிராஜா மீதான தாக்குதலையடுத்து, விடுதுலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் மீது மேற் கொள்ளப்பட்ட தாக்குதல் இதுவாகும்.



## "தாக்குதலில் ஈடுபட்டவர்களில் மூவரை தெரியும்"

- குயிலின்பன் -

சிறீலங்கா இராணுவ நிலைகளிலிருந்து கண்ணுக்கெட்டிய தூரத்தில் இத்தாக்குதல் இடம்பெற்றதாகவும் தனக்கு முன்னால் மோட்டார் சைக்கிளில் சென்ற பாவா, யோகா ஆகியோர் கிளைமோர் குண்டு வெடிப்பில் உயிரிழந் ததாகவும் தெரிவித்த அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன், ஏனையோரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் அத்தாக்குதலில் ஈடுபட்ட மூன்று பேரை தனக்குத் தெரியும் எனவும் அவர்கள் மேற் கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் தனது மோட்டார் சைக்கிளும் சேதமடைந்துள்ளதாகவும் இலண்டன் பி.பி.சி. தமிழோசைக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்திருந்தார்.

## பேராளிகளின் உடல்களுக்கு கொக்கட்டிச்சோலையில் அஞ்சலி

வீரச்சாவைத் தழுவிய மாவீரர்களான பாவா, யோகா, ஆகியோரின் வித்துடல்கள் மக்கள் அஞ்சலிக்காக கொக்கட்டிச் சோலையில் உள்ள அரசியல்துறை அலுவலகத்தில் வைக்கப் பட்டன. முன்னதாக, இருவரினதும் மரணவிசாரணைகள் மட்டக்களப்பு நீதிவான் எம்.எச்.எம். அஸ்மீர் முன்னிலையில் நடைபெற்றன. விடுதலைப் புலிகளின் போராளி ஒருவரும், சிறீலங்கா காவற்துறை அதிகாரி ஒருவரும் சாட்சியம் அளித்தனர். அதையடுத்து கொலைகள் என நீதிவான் தீர்ப்பு வழங்கினார். பின்னர் வித்துடல்களை விடுதலைப் புலிகள் பொறுப்பேற்றனர். நண்பகல் அளவில் மண்முனை கொக்கட்டிச் சோலை இறங் குதுறை வழியாக வித்துடல்கள் படகுகள் மூலம் கொக்கட்டிச் சோலைக்கு எடுத்து வரப்பட்டன.

## பெருந்தொகையான முஸ்லீம்கள் பங்கேற்பு

திருக்கோயில், கோமாரி, அக்கரைப்பற்று, காரைதீவு, கல்முனை, நாவிதன்வெளி ஆகிய இடங்களில் வித்துடல் வைக்கப்பட்ட போது பெருந்திரளான மக்கள் கதறி அழுது கண்ணீர் அஞ்சலி செலுத்தினர். கல்முனை, காரைதீவு, அக்கரைப்பற்று பகுதிகளில் பெருந்தொகையான முஸ்லிம் மக்கள் பாவாவின் வித்துடலுக்கு தமது அஞ்சலியை செலுத்தியிருந்தனர். காரைதீவில் வித்துடல் வைக்கப்பட்டிருந்த போது அம்பாறை மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல் சம்மேளன தலைவர் மௌவி ஏ.சி.ஏ.எம். புகாரி, சம்மேளனத்தின் செயலாளர் ஐ.எம்.இப்றாகிம் உட்பட முஸ்லிம் பிரமுகர்கள் பலர் தமது அஞ்சலியைச் செலுத்தினர். காரைதீவில் ரெலோ அமைப்பின் நிர்வாக செயலாளரும், காரைதீவு கிராம அபிவிருத்தி குழு உபதலைவருமான எஸ்.சிறிஸ்கந்தா தலைமையில் இரங்கல் கூட்டமும் இடம்பெற்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்களான பாவா, மற்றும் யோகா ஆகியோர் வீரச்சாவினால் மட்டு. அம்பாறை மாவட்டமெங்கும் ஒரே சோகமயமாகக் காட்சியளித்தது. அரசியல்துறை மூத்த உறுப்பினரான பாவா தமிழ் மக்களிடையே மட்டுமன்றி முஸ்லிம் களிடையேயும் சிறந்த மதிப்புமிக்கவராக விளங்கினார். தமிழ் முஸ்லிம் இன ஐக்கியத்திற்காகப் பாடுபட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## படையினரும் கண்டிக்கின்றனராம் !

பாவாவின் கொலை குறித்து அக்கரைப் பற்றில் நிலைகொண்டுள்ள சிறீலங்காவின் விசேட அதிரடிப்படை யினர் தமது அனுதாபத்தையும், கண் டனத்தையும் வெளியிட்டுள்ளனர். அரசு - புலிகள் இருதரப்பிடையேயும் சமாதானத்தை நிலைநாட்டுவதற்காக, பேச்சுக்களை நடத்திவந்தவர் பாவா என அதிரடிப்படையினர் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர். இக்கொலையைப் படைத்தரப்பின் சார்பில் வன்மையாகக் கண்டிப்பதாகவும் அவ் றிக்கையில் அவர்கள்தெரிவித்துள்ளனர்.


**உங்கள் பிள்ளைகளும் சுவிஸ் நாட்டில் உயர் கல்வி பெற்று நல்ல தரமான தொழில்களை பெறமுடியும்.**

**சுவிஸ் நாட்டின் பிரபல மொழியியல் ஆசிரியர் லிங்கம் அவர்களின் நெறியாள்கையில் பாடசாலை மாணவர்களுக்கான டொச்மொழிக்கல்வி ஆரம்பமாகின்றது.**

ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10 மணிமுதல் 12 மணிவரை
5ம், 6ம் வகுப்பு மாணவர்களுக்கு
இடம்: Breitenreinplatz -27, Bern

புதன்கிழமைகளில் மாலை 6 மணிமுதல் 8 மணி வரை
3ம், 4ம் வகுப்பு பாடசாலை மாணவர்களுக்கு
இடம்: Eigerplatz, Bern

தொடர்புகளுக்கு: Lingam master - 062 79741 64 / 079 334 47 33

# பாக்குநீரிணையில் வங்கப் பெண் சாதனை

## தலை மன்னாரில் இருந்து தனுஷ்கோடியை நீந்திக் கடந்தார்

தலைமன்னார் - தனுஷ்கோடிக்கும் இடையிலான பாக்குநீரிணையை 14 மணி நேரத்தில் நீந்திக் கடந்து மேற்கு வங்க தேசத்தை சேர்ந்த பூலா சவுத்ரி என்ற பெண் ஒருவர் சாதனை படைத்திருக்கின்றார். இலங்கையின் தலைமன்னாருக்கும் - இந்தியாவின் தென்கோடி பகுதியான தனுஷ்கோடிக்கும் இடையே 14 கடல் மைல் பகுதியை இவர் நீந்திக் கடந்துள்ளார். ஆழம் குறைவான பகுதியாக இருந்தாலும் அபாயகரமான பகுதியாக இது கருதப்படுகிறது. உலகின் முன்னணி நீச்சல் வீரர்கள் கூட இக்கடல் பகுதியினை நீந்திக் கடப்பதை சாதனையாக எண்ணுகின்றனர். இந்த கடல் பகுதியை தனுஷ்கோடியை சேர்ந்த நீச்சல் காளி, கொல்கத்தாவை சேர்ந்த செனாய், சென்னையைச் சேர்ந்த குற்றாலீசுவரன் மற்றும் அருண் பாலாஜி ஆகியோர் ஏற்கனவே நீந்தி கடந்துள்ளனர். இந்நிலையில் பெண் ஒருவர் இந்த கடல்பகுதியை முதற் தடவையாக நீந்திக் கடந்து சாதனை படைத்திருக்கின்றார்.



கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை 2.30 மணிக்கு தலைமன்னார் கடற்கரையிலிருந்து அவர் தனது நீச்சல் பயணத்தை தொடங்கினார். கடல் கொந்தளிப்பு, எதிர்காற்று ஆகியவற்றை எதிர்கொண்டு சுமார் 14 மணி நேரம் இடைவிடாது நீந்திய பூலா சவுத்ரியை, அவரது கணவர் சக்கரவர்த்தி, 10 வயது மகன் சர பொஜித், பயிற்சியாளர் பொசுபதிக்குண்டு ஆகியோர் உற்சாகப்படுத்தினர். அவர்களது உற்சாகத்தூண்டுதலுக்கிடையே பூலா சவுத்ரி அன்று மாலை 4.20 மணியளவில் தனுஷ்கோடியை வந்தடைந்து சாதனை படைத்தார். பாக்குநீரிணையை நீந்திக் கடந்த முதல் பெண் சாதனையுடன் கரையேறிய பூலா சவுத்ரியை மேற்கு வங்க மாநில விளையாட்டுத்துறை அமைச்சர் சுபு சக்கரவர்த்தி, ராமநாதபுரம் மாவட்ட பொறுப்பாளர் செல்லமுத்து, மற்றும் காவற்துறை அதிகாரிகள், பொதுமக்கள் வரவேற்றனர்.



கடல் கொந்தளிப்பு, எதிர்காற்றை சமாளித்து நீந்த வேண்டியிருந்தது என சாதனை வீராங்கனை பூலா சவுத்ரி நிருபர்களிடம் கூறினார். அவர் தனது அனுபவம் குறித்து மேலும் கூறியதாவது, 1989ல் ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடந்த முதல் பெண் என்ற பெருமையை பெற்றென். பின்னர் 1999ல் மீண்டும் ஆங்கிலக் கால்வையை நீந்திக் கடந்தேன். 2000ம் ஆண்டில் ஸ்பெயினில் உள்ள ஜிப்ரால்டர் கால்வாயினையும், 2001ல் ட்ரீபினா கால்வாயையும், 2002ல் கிரீஸ் கொல்ப் கால்வாயையும், கலிபோர்னியாவில் உள்ள நாட்டலினா கால்வையையும், 2003ல் நியூசிலாந்தில் உள்ள குக்ஸ்ட்ரைப் கால்வாயையும் நீந்தி சாதனை படைத்துள்ளேன்.



தற்பொது கடல் கொந்தளிப்பு, எதிர்காற்று போன்ற ஆரம்ப கட்ட அச்சங்களை கடந்து பாக்குநீரிணையை வெற்றிகரமாக நீந்தி கடந்துள்ளேன். நீந்தி வரும்போது இச்சாதனையை படைக்க முடியுமா என என் மனதில் அச்சம் தோன்றியது. அதனையும் மீறி இச்சாதனையை படைத்திருப்பது எனக்கு மேலும் தைரியத்தை வரவழைத்துள்ளது. இயற்கையின் இடர்பாடுகளால் நான் இந்த சாதனை தூரத்தை கடக்க 14 மணிநேரமானது. என்றாலும் சாதனையை படைத்தது பிரமிப்பாக உள்ளது. இந்த தைரியத்தை துணையாக கொண்டு மேலும் பல நீச்சல் சாதனைகளை படைப்பேன் என்று கூறினார்.

# உலகிலேயே சக்தி வாய்ந்த பெண்கள்!

## 3வது இடத்தில் சோனியா, 44வது இடத்தில் சந்திரிகா

உலகிலேயே சக்தி வாய்ந்த முதல் 100 பெண்கள் யார் என்பதைக் கண்டறியும் கணிப்பொன்றை நடாத்தி, அவர்களின் பெயர்ப்பட்டியலை வெளியிட்டுள்ளது, அமெரிக்காவில் இருந்து வெளிவரும் 'போர்ப்ஸ்' (Forbes) என்ற இதழ். இதில் முதலாவது இடத்தில் அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகரான 39 வயதான கொண்டலீசா றைஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இரண்டாவது இடத்தில் சீனாவின் துணைப் பிரதமரும் சுகாதாரத்துறை அமைச்சருமான வூ ஜீ இடம்பெற்றுள்ளார். மூன்றாவது இடத்தில் இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் சோனியா காந்தி இடம்பெற்றுள்ளார். இப்பட்டியலில் 44வது இடத்தில் சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இடம்பிடித்திருக்கின்றார்.

4வது இடத்தில் அமெரிக்க ஜனாதிபதி புஷ்சின் மனைவி லாரா.

5வது இடத்தில் கிளிண்டன் மனைவி ஹிலாரி.

6வது இடத்தில் அமெரிக்க உச்ச நீதிமன்ற நீதிபதி சந்திரா டே ஒகோனர்.

7வது இடத்தில் அமெரிக்க உச்ச நீதிமன்ற நீதிபதி ரத் வாடர் ஜின்ஸ்பெர்க்

8வது இடத்தில் இந்தோனேஷிய அதிபர் மேகவதி சுகர்னோ புத்ரி.

9வது இடத்தில் பிலிப்பைன்ஸ் அதிபர் குளோரியோ அரோயோ.

10வது இடத்தில் அமெரிக்க கணணிகள் கட்டளையதிகாரி கார்லெத்தோன் பியோர்லினா, உள்ளனர்.

இதேவேளை, மேலும் சில பிரபலமான பெண்களில்...

12வது இடத்தில் இங்கிலாந்து பிரதமரின் மனைவி செர்ரி பிளேயர்.

13வது இடத்தில் ஜோர்டான் ராணி ரனியா.

14வது இடத்தில் வங்காளதேச பிரதமர் கலீதாஜியா.

21வது இடத்தில் இங்கிலாந்து முன்னாள் பிரதமர் மார்கரெட் தாட்சர்.

22வது இடத்தில் ராணி எலிசபெத்.

45வது இடத்தில் மியான்மார் எதிர்க்கட்சி தலைவி சூகி.

ஆகியோர் உள்ளனர். இறுதியாக 100வது இடத்தில் அமெரிக்காவின் நோபல் பரிசுபெற்ற ஜோடி வில்லியம்ஸ் இடம்பிடித்துள்ளார்.









































## மருவியது எப்படி ?

பழமொழிகள் திருக்குறளைப் போல, ஒற்றைவரியில் வாழ்வைச் சொல்பவை. வாய்மொழியாக வந்த பழமொழிகள் பல வழக்கொழிந்துபோய்விட்டன. எஞ்சியுள்ளவையும் காலத்துக்கு காலம் மருவி புதிய புதிய அர்த்தங்களை கொண்டுவருகின்றன. அவ்வாறு கால மாற்றத்தில் மருவி புதிய கருத்துக்களை உருவாக்கிவிட்ட விடயங்களை இப்பகுதியூடாக தொடர்ந்து பார்ப்போம். நீங்கள் அறிந்ததையும் இந்தப் பகுதிக்கு எழுதி அனுப்பிவைக்கலாம்.

& & & & & & &


**'மண் குதிரை நம்பி ஆற்றில் இறங்கலாமா..?'**

'மண் குதிரை நம்பி ஆற்றில் இறங்கலாமா?' என்பதே இன்று மண் 'குதிரையை' நம்பி ஆற்றில் இறங்கலாமா என்று மருவிவிட்டது. 'யை' என்ற ஒரு எழுத்து குதிரையுடன் சேர்ந்ததால். அதன் அர்த்தமே மாறிவிட்டது. அடித்துச் செல்லும் ஆற்றில் ஆங்காங்கே தெரியும் மணல் திட்டுகளில் குதிர்கள் முளைத்திருக்கும். ஆற்றைக் கடப்பவர்கள் இந்த குதிர் இருக்கும் திட்டில் கால் வைத்து நடக்கலாம் என்று நினைப்பார்கள். ஆனால், அதில் காலை வைத்தால் அது புதைந்து விடும். அதனால் தான் மண் 'குதிரை' நம்பி ஆற்றில் இறங்கலாமா என்று வந்தது. ஆனால் இப்போது மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கலாமா என்றாகிவிட்டது.

# இலங்கைத் தமிழர் தேசியம் அதன்தோற்றம் பற்றிய ஆய்வு

ஆக்கியோன்: முருகர் குணசிங்கம் | வெளியீடு: எம். வீ பிரசுரம், சிட்னி | மொழி ஆங்கிலம் (அவுஸ்திரேலியா)

**தற்போது அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து கொண்டிருக்கும் கலாநிதி முருகர் குணசிங்கம் அவர்களின் 'இலங்கைத் தமிழ்த் தேசியவாதமும் அதன் ஆரம்பத் தோற்றம் பற்றியதோர் ஆய்வும்' என்கின்ற வரலாற்று நூல் பலரின் மிகுந்த கவனத்திற்குரியதாகியுள்ளது. ஏற்கனவே ஆங்கிலத்தில் வெளிவந்திருந்த இந் நூல் தற்போது தமிழ் வடிவம் பெற்று இவ்வருட ஆரம்பத்தில் தாயகத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டுத் தற்போது ஐரோப்பிய நாடுகளிலும் அறிமுக விழா நடை பெற்று வருகிறது. இவ்வேளையில் அந்நூல் குறித்தான ஆழமான மதிப்புரை ஒன்றை ஈழநாதம் இதழில் இருந்து மீள் பிரசுரம் செய்கிறோம். இந்த வரலாற்று நூலில் நீங்கள் இலகுவாக நுழைந்துகொள்ள இக்கட்டுரை உதவும் என நினைக்கின்றோம். [ஆ-ர்]**




இலங்கை ஒற்றை நாடு என்ற கூற்றிற்கு இது போன்ற செய்தித் துணுக்குகள் முற்றுப்புள்ளி வைப்பதாகவும், தமிழர்களின் அடையாளச் சிந்தனை பண்டுதொட்டு நிலைபெற்றதாகவும் ஆசிரியர் சான்றாதாரங்களுடன் நிரூபிக்கிறார். விவசாயம், ஏற்றுமதி, சிறு கைத்தொழில், வர்த்தகம் என்பனவற்றால் பலம் பெற்ற தமிழ் மக்கள் அரசியல் உரிமைகளை போராடிப்பெறும் துணிவு பெற்றதில் வியப்பில்லை.

தனது இறுதி அத்தியாயத்தில் ஆசிரியர், தமிழர்களின் அரசியல் செல்வாக்கு இழப்பு, அதற்குரிய முக்கிய காரணங்கள் என்பனவற்றோடு தேசிய எழுச்சி கூர்மைபெற்றதற்கான உடனடிக் காரணத்தைத் திறம்பட விளக்குகின்றார். 1833 இனத்துக்கு ஒரு பிரதிநிதி என்ற அடிப்படையில் சிங்கள - தமிழ் பிரதிநிதிகள் இலங்கையின் முதலாவது சட்டமன்றத்தில் நியமனம் பெற்றனர்.

கல்விதான் தமிழர்களுடைய பெருந் தொழில், மணி ஓடர் (MONEY ORDER) தான் அவர்களுடைய பொருளாதாரத்தின் மூலவேர் என்றும் பேசப்படுவதுண்டு. கல்வி பற்றிய செய்தி உண்மைதான் பக்கம் 180 இல் ஆசிரியர் கூறுகிறார்: 'பொருளாதாரக் காரணிகளும் வேலை வாய்ப்புக்களுக்காக அறிவைப் பெருக்கவேண்டும் என்ற பொதுவான ஆர்வமும் தமிழர்கள் உயர்கல்வி, தொழிற்கல்வி ஆகியவற்றைத் தேட முக்கிய காரணங்களாக அமைகின்றன.' தீபகற்பத்தில் கல்வி வாய்ப்புக்கள் மிக அதிகம். கல்வித் தகுதி பெற்றோர். அரச மற்றும் தனியார் துறைகளில் எழுத்தர் (CLERKS) பதவி தொடக்கம் அதியுயர் பதவிகள்வரை பெற்றனர்.

'பல்கலைக்கழகக் கல்லூரி' UNIVERSITY COLLEGE என்ற உயர்கல்வி அமைப்பு கொழும்பில் 1931 ஆம் ஆண்டு திறக்கப்பட்டது. இது சிலோன் பல்கலைக் கழகமாக (UNIVERSITY OF CEYLON) 1942 இல் தரமுயர்த்தப்பட்டது. இதுதான் இலங்கையின் முதலாவது உயர்கல்விப் பீடம். தமிழ் மாணவர்கள் சென்னை, கல்கத்தா போன்ற இந்திய பல்கலைக் கழகங்களுக்கும், இங்கிலாந்தின் இலண்டன், கேம்பிறிஜ், ஒக்ஸ்போட் பல்கலைக் கழகங்களுக்கும் பணவசதியைப் பொறுத்துப் படிக்கச் சென்றனர். உபகாரச் சம்பளம் அரசிடமிருந்து பெற்று உயர்கல்வி கற்ற தமிழ் மாணவர்களும் உளர். இதை எல்லாம் சுட்டிக்காட்டும் ஆசிரியர், எமது இனத்தின் தன்நம்பிக்கையும் அடையாளங்களைக் காக்கவேண்டும் என்ற தணியாத ஆர்வமும் கல்வியால் தரப்பட்டவை என்கிறார்.

கோல்புறூக் பரிந்துரைகளின் அடிப்படையில் அமைக்கப்பட்ட சட்டசபை அங்கத்தவர்கள் அறுவரும் ஆளுநரால் நியமிக்கப்பட்டனர். மூவர் ஐரோப்பியர்களாகவும், தமிழர், சிங்களவர், பறங்கியர் ஆகிய இனங்களுக்கு ஒவ்வொருவராகவும் அமைந்தனர். 1889 இல் கண்டிச் சிங்களவர்களும் முஸ்லிம்களும் இதே விகிதத்தில் நியமனம் பெற்றனர். கோல்புறூக் பரிந்துரைகளின் சட்டசபை சம்பந்தமான விடயங்கள் எண்பது வருடங்களுக்கு மேலாக அடிப்படைகளில் மாற்றம் இல்லாது தொடர்ந்தன.

19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இந்திய தேசியம் மத, பண்பாட்டு, மற்றும் சமுதாய அடிப்படையில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான மென்போக்கு இயக்கமாக உருவெடுத்தது. 1885 இல் இது இந்திய தேசிய காங்கிரஸ் (INDIAN NATIONAL CONGRESS) என்று அரசியல் விடுதலை அமைப்பாக வளர்ந்தது. 1884 இல் சென்னையில் தமிழ் அங்கத்துவம் கொண்ட மகாஜன சபை தோற்றியது. இது தேசிய காங்கிரசுடன் நெருக்கமான உறவுகளைப் பூண்டு செயற்பட்டது. 204 ஆம் பக்கத்தில் ஆசிரியர் குணசிங்கம் எடுத்துரைப்பதுபோல் இந்த நிகழ்வுகள் தமிழர்களுடைய தேசிய உணர்வுகளும் சிங்களவர்களுடைய தேசிய உணர்வுகளும் தனித்தனியே முனைப்புப்பெறக் காரணமாக அமைந்தன.

20 ஆம் நூற்றாண்டின் முதல் 10 வருடங்களில் கொழும்பின் தமிழ்த் தலைவர்களும் இலங்கை சட்டசபையின் தமிழ் அங்கத்தவர்களும் கூடுல் அரசியல் அதிகாரம்கோரி அரசுக்கு நெருக்குதல் கொடுத்தனர். இதைத் தொடர்ந்து சிங்களத் தலைவர்களும் அதே கோரிக்கையை விடுத்தனர். தொகுதி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதித்துவ முறையை தமிழ், சிங்கள தலைவர்கள் தனித்தனியே கோரினாலும் இதில் தமிழர்கள்தான் முன்னோடியாக அமைந்தனர்.

1910 ஆம் ஆண்டின் அரசியல் சீர்திருத்தங்களின்படி தொகுதி முறைமை ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மட்டக்களப்புத் தமிழர்களுக்கு என்று ஒரு மேலதிக நியமன அங்கத்துவம் அளிக்கப்பட்டது. இப்போது தமிழர்களுக்கு 2, சிங்களவர்களுக்கு 2 என்ற அடிப்படையில் அங்கத்துவம் கிடைத்தது. ஆனால் மிக முக்கியமாக தீவு முழுவதையும் உள்ளடக்கிய படித்த வாக்காளர் தேர்தல் தொகுதி ஒன்று 1910 இல் உருவாக்கப்பட்டது. இந்தத் தேர்தலில் ஒரு சிங்களவரும் தமிழராகிய பொன், இராமநாதனும் போட்டியிட்டனர். இராமநாதன் வெற்றி பெற்றார், இருப்பினும் இனவாத அடிப்படை முரண்பாடுகள் அக்காலப் பகுதியில் கூர்மை அடைந்தன. [பக்கம் 208]

1920 வரையில் அடுத்த கட்ட அரசியல் சீர்திருத்தங்கள் தோன்றியபோது சிங்கள-தமிழ் தலைவர்களுக்கிடையிலான முதலாவது முறிவும் சேர்ந்து தோன்றியது. இதுபற்றிச் சிறிது விரிவாக ஆராய்தல் வேண்டும். அரசியல் சீர்திருத்தங்களை முன்னெடுப்பதற்காக 1888 இல் பொன்.இராமநாதன் இலங்கை தேசிய கழகம் (CEYLON NATIONAL ASSOCIATION) என்ற அமைப்பை உருவாக்கினார். இரு தசாப்தங்களில் இது செயலிழக்க அவருடைய தம்பியாகிய பொன்.அருணாசலம் 1919 ஆம் ஆண்டில் உருவாக்கினார். அவரே இந்த அமைப்பின் தலைவராக அமர்ந்தார். இலங்கை தேசிய காங்கிரசில் இரு இனங்களும் அங்கத்துவம் வகித்தாலும் பெரும்பான்மை தமிழர்வசம் இருந்தது.

1920 இல் இலங்கை அரசியல் சீர்திருத்த அமைப்பு (CEYLON REFORM LEAGUE) சிங்களத் தலைவர்களால் உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பின் தலைமைப் பதவியும் அங்கத்துவமும் சிங்களவர் கையில் இருந்தது. இலங்கைத் தீவின் சுயாட்சியை பிரிட்டிசாரிடம் இருந்து பெறும் நோக்கில் இரு அமைப்புக்களும் இதுவரைகாலமும் நடைமுறையில் இருந்து வந்த இனப் பிரதிநிதித்துவத்தை (COMMUNAL REPRESENTATION) கைவிடுமாறும் தொகுதி பிரதிநிதித்துவ முறையைப் (TERRITORIAL REPESENTATION) புகுத்துமாறும் ஆட்சியாளரை வேண்டத் தீர்மானித்தனர்.

இதில் பொன். அருணாசலம் மிகவும் தீவிரமாக இருந்தார். எதுவிதப்பட்டும் சுயாட்சியைப் பெறவேண்டும் என்பது அவருடைய நோக்கம். ஆனால் தமிழர்களுடைய அரசியல் செல்வாக்கு பறிபோய்விடும் என்ற ஒரே காரணத்திற்காக பிற தமிழ்த் தலைவர்கள் அவருடன் ஒத்துப்போக மறுத்தனர். தொகுதி பிரதிநிதித்துவம் நிச்சயம் தமிழர்களுடைய அரசியல் பலத்தை வீழ்த்திவிடும், அதை ஈடு செய்வதற்காக சிங்களத் தலைவர்களுடன் பேரம் பேசும் நிலைக்கு அருணாசலம் தள்ளப்பட்டார்.

சிங்கள அமைப்பின் தலைவர் ஈ.ஜே.சமரவிக்கிரமா மூத்த சிங்களத் தலைவர் ஜேம்ஸ் பீரிஸ் ஆகியோர், மேற்கு மாகாணத்தில் தமிழர்களுக்கு ஒரு தேர்தல் தொகுதியை ஒதுக்கிக் கொடுப்பதாக வாக்களித்தனர், இந்த உறுதி மொழியின் அடிப்படையில் இரு அமைப்புக்களும் ஆட்சியாளருடன் பேச்சுக்குச் சென்றன. ஆனால் 1920 இல் புதிய அரசியல் அமைப்பு மாற்றங்களை பிரிட்டிசார் புகுத்தியபோது மேற்கு மாகாண தொகுதி ஒதுக்கீடு வாக்குறுதியை நிறைவேற்ற சிங்களத் தலைவர்கள் முற்றாக மறுத்துவிட்டனர்.

அருணாசலமும் பிற தமிழ்த் தலைவர்களும் இலங்கை தேசிய காங்கிரசில் இருந்த ஒட்டுமொத்தமாக இராஜினாமாச் செய்தனர். இந்த நிகழ்ச்சி இன ஒற்றுமையில் ஏற்பட்ட முதலாவது பாரதூரமான பிளவாகக் கருதப்படுகின்றது. (THE FIRST RIFT) அத்தோடு நின்றால் பரவாயில்லை. அருணாசலமும் பிற தமிழ்த் தலைவர்களும் யாழ்ப்பாணம் நோக்கி வந்து 1923 இல் தமிழர்களுக்கு தனி உரித்தான அரசியல் சமுதாய அமைப்பை உருவாக்கினார்.

தமிழ் மகாஜன சபை (TAMIL MAHAJANA SABHAI) என்ற பெயருடன் அருணாசலமும் அவருடைய தோழர்களும் உருவாக்கிய அமைப்பின் அங்குரார்ப்பணக் கூட்டம் 15 ஓகஸ்ட் 1921 இல் யாழ்ப்பாண றிஜ்வே மண்டபத்தில் (RIDGEWAY HALL) மாலை 4.30 மணியளவில் தொடங்கியது. அருணாசலம் தலைமை வகிக்க வைத்திலிங்கம் துரைசாமி பின்வரும் பிரேரணையை வாய்மொழிந்தார்: 'இலங்கையின் எல்லாப் பகுதிகளில் இருந்து வரும் தமிழர்களின் இக்கூட்டம், இலங்கை பூராகவும் கிளை பரப்பிய தமிழ் மகாஜன சபை அமைப்பை உருவாக்கத் தீர்மானிக்கிறது. இந்த அமைப்பு தமிழர்களின் அரசியல், சமுதாய, பொருளாதார, கல்வி மற்றும் பொது நலனை மேம்படுத்தும்'

இந்தக் கூட்டத்தில் பேசிய கிறிஸ்தவ தலைவர் ஜே.வி.செல்லையா பைபிள் வாசகத்திற்கு புதிய அர்த்தம் கொடுத்து பின்வருமாறு பேசினார். 'சிங்கமும் ஆட்டுக்குட்டியும் அக்கம் பக்கமாகப் படுக்கலாம் ஆனால் சிங்கம் ஆட்டுக்குட்டியை விழுங்கி விடக்கூடாது' தலைமை தாங்கிய அருணாசலம் அமைப்பின் நோக்கத்தைத் தெளிவுபடுத்தினார். 'இலங்கை, தென் இந்தியா, தமிழர் குடியேறிய நாடுகள் என்பனவுக்கிடையில் ஒன்றிணைப்பையும், தமிழகம், தமிழ் நிலம் ஆகியவற்றின் ஒருமைப்பாட்டையும் முன்னெடுப்பதாகும்.' தமிழர் தேசிய வரலாற்றில் எழுதப்பட்ட முதலாவது புரட்சிக்குரல் இதுவாகும்.

தனது நூலின் மையக் கருத்தை விரிவுபடுத்தி, ஆசிரியர் குணசிங்கம் தனது நூலின் 223 ஆம் பக்கத்தில் பின்வரும் வினாவை எழுப்புகின்றார்: தமது பாரம்பரிய பூமியை அந்நியர் ஆட்சிப்பிடியில் இருந்து விடுவிக்கப் போரிடாமல், தமிழர்கள் ஏன் தமது மதத்தையும், மதத்தோடு தொடர்புபட்ட பண்பாட்டு விழுமியங்களையும் மீட்டெடுக்கப் போரிட்டார்கள்? இதற்கு விடையாக இந்த ஆராய்ச்சி நூல் அமைகின்றது. அந்தக் காலகட்டத்தில் எது முக்கியமென்று மக்கள் கருதுகிறார்களோ அதற்காகத்தான் அவர்கள் போர்க்கொடி தூக்குவார்கள் என்பதே பதில்.

சைவமத உணர்வும் கிறிஸ்தவ மதப்பரப்பலுக்கு எதிர்ப்பும் தமிழ் தேசியத்தின் ஊற்றாக இருப்பினும், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் தொட்டு தமிழரை ஏமாற்றும் அரசியலை சிங்களத் தலைவர்கள் தொடங்கியபோது இரு மதத் தலைவர்களும் ஒன்றுபட்டனர். ஒரு கிறிஸ்தவரைத் தலைவராக ஏற்கும் அளவுக்கு ஒன்றுமை வலுத்தது. இன்று மதச்சார்பின்மை தமிழர் தேசியக் கொள்கையாக ஏற்கப்பட்டுள்ளது.

இளவயதினரான முருகர் குணசிங்கம் வன்னி கனகராயன் குளத்தைச் சேர்ந்தவர். யாழ் பல்கலைக்கழக வரலாற்றுத் துறையில் பயின்று கலைமாணி பட்டம் பெற்றவர். சிறிது காலம் இதே வளாகத்தில் விரிவுரையாளராகவும், நூலகராகவும் பணியாற்றியவர். அதன்பின் இலண்டன் பல்கலைக்கழகத்தில் நூலக மற்றும் தகவல் விஞ்ஞானத்தில் (LIBRARY AND INFORMATION SCIENCE) முதுமாணிப் பட்டம் பெற்றார். 1990 இல் அவுஸ்திரேலியாவின் சிட்னி பல்கலைக் கழகம் அவருடைய ஆய்வறிக்கையின் திறன் மெச்சி கலாநிதி பட்டம் கொடுத்து கௌரவித்தது.

உணர்த்து முறை, உணர்த்து பொருள், அதன் தன்மை என முக்கூறுகள் உடையதாக ஒரு தரமான இலக்கிய படைப்பு அமையும். உணர்த்து முறை ஆசிரியனின் திறமை வழித்துலங்கும். 1833 தொடக்கம் 1923 வரையிலான காலப்பகுதிக்குரிய அரும்பெரும் தகவல் பெட்டகத்தை ஆசிரியர் தனது விடா முயற்சியால் உருவாக்கியுள்ளார். அவர் தேறித் தெளிந்த நூலகக்கல்வி, இந்தியா, இலங்கை, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளின் பல்வேறு ஆவணக் காப்பகங்களை அணுகித் தகவல் சேமிக்க உதவியிருக்கும்.

பிரெஞ்சு நாட்டு மூதறிஞர் றொமேயின் றோலான்(ROMAIN ROLLAND) 'தான் தேடியதை ஆய்வாளன் பெறுவான்' என்றுள்ளார். தமிழர் தேசியத்தின் கணிசமான பகுதியை முருகர் குணசிங்கம் தேடிப் பெற்றுள்ளார் என்று துணிந்து கூறலாம்.

[முற்றும்]

******


# பாசல் ரவி கடை

**ஆம் இது நிஜம், புதிய டிசைன்களில், அனைத்தும் 70%கழிவில்**



| | | |
|---|---|---|
| பஞ்சாபி | 5-SFRல் | இருந்து |
| டெனிம் | 5-SFRல் | இருந்து |
| சேட் | 5-SFRல் | இருந்து |
| சாறி | 7-SFRல் | இருந்து |
| T-Shirt | 1-SFRல் | இருந்து |
| Audio-CD- | 1-SFRல் | இருந்து |
| மணிக்கூடு | 9-SFRல் | இருந்து |





**தங்கநகைகள் மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். கல்லு, முத்து, Bombay Design உட்பட ஒன்றுக்குமே கூலி அறவிடப்படமாட்டாது. எடைக்கு மட்டுமே பணம் செலுத்தினால் போதும்.**

பாசல் ரவி கடை - *061 / 272 90 30 - 061/272 09 90 - 079/356 22 78*


# மரண அறிவித்தல்



**பரமநாதன் விஜயநாதன்**

**தோற்றம்**
21 * 09 * 1954

**மறைவு**
22 * 08 * 2004

தமிழீழம் திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிட மாகவும், பிரான்சை தற்காலிக வசிப்பிடமாகக் கொண்டவருமான பரமநாதன் விஜயநாதன் அவர்கள் 22.08.2004 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், திரு வீரகத்தி பரமநாதன் (ஓய்வுபெற்ற சிறாப்பர்), காலம் சென்ற திருமதி. விஜயலச்சுமி பரமநாதன் தம்பதிகளின் புதல்வனும்; புஸ்பராணி (தமிழீழம்) பாலசுந்தரம் (பிரான்ஸ்), திலகலச்சுமி (தமிழீழம்), பரமேஸ்வரன்(ராஜன் - கனடா), காலம் சென்ற விக்னேஸ்வரன், மகேஸ்வரன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும்; செல்லத்துரை (கிராமசேவகர் -தமிழீழம்), விஜயகுமாரி (பிரான்ஸ்), மணிவண்ணன் (தமிழீழம்), கீதா (கனடா), பவாநிதி(பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும்; செல்வநர்மதா, தர்சினி, வினோதினி, ஜீவனா, இந்துகாசன் ஆகியோரின் மாமனாரும்; ஹரிபிரசாந், ஜொனாத்தன், எலோடி, ஆகியோரின் சித்தப்பாவும்; சிவிகேசன், ரிஷிகேசன், நிதீபன், மயூரி, மயூரன் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரிகைகள் 26-08-2004 வியாழக்கிழமை காலை 10 மணி தொடக்கம் 11 மணிவரை HôpitalLouis Mourier, 178, Rue des Renouillers, 92701 Colombes என்னுமிடத்தில் நடைபெற்று, மதியம் 13.30 மணிக்கு CREMATION JONCHEROLLES, 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse என்னுமிடத்தில் தகனம் செய்யப்படும்.

(Bus N° 168 (Porte de Paris இல் இருந்து) தரிப்பிடம் Louise Maury Ecoles)

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
**பாலசுந்தரம்(பாலா) -01 39 86 00 88 / 06 14 11 46 10**
Garges les Gonesse
**மகேஸ்வரன் (மகேஸ்) -01 46 49 96 12 / 06 61 87 49 53**
Colombes

# ஏங்குகின்ற கலைஞர்களுக்கு ஆறுதல் தருகிறது புலம்பெயர் மண்!

(17ம் பக்கத தொடர்ச்சி)

எமது மொழி இன வரலாற்றையும் இலக்கியங்களையும் மீள் தரிசனம் செய்து பார்த்தால் இது எமக்குத் தெளிவாகப்புரியும்.

முதற்சங்கம் - இடைச்சங்கம் - கடைச்சங்கம் எனத் தமிழ் மன்னர்களால் சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்த காலங்களில் தமிழிசையும் வளர்ந்தது. தொடர்ந்து தேவாரங்களாக திருஞான சம்பந்தர், சுந்தரமூர்த்திநாயனார், திருநாவுக்கரசர் போன்றோராலும் தமிழிசை பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது. மாணிக் கவாசகரின் திருமுறைப் பாடல்களினாலும் தமிழிசை மென்மேலும் வளர்ந்தது. சேர - சோழ - பாண்டியர் - பல்லவர் காலங்களிலும் தமிழிசை அரியாசனம் பெற்றிருந்தது. நாயக்கர் வரவால் தமிழர் ஆட்சி வலுவற்றுப்போக தமிழிசையும் பின்தள்ளப்பட்டுப் போக தெலுங்கு மொழி முன்னுரிமை பெற கர்நாடக இசையாக மாற்றம் பெற்றதே வரலாற்று உண்மை. அப்படியே பின்வந்த தமிழர்களும், தமிழிசையாளர்களும் செவ்விசை தமிழிசையை மறந்து கர்நாடக இசையென்றே வழக்கில் கொண்டு வந்தனர் - வருகின்றனர்.

**கேள்வி:-** **அப்படியானால் தமிழிசை சார்ந்த விழிப்புணர்ச்சி பின்னர் எவரிடமும் ஏற்படவே இல்லையா?**

**பதில்:-** 1930-40களில் தமிழிசைச் சங்கம் சென்னையில் தோற்றுவிக்கப்பட்டது. ஈ.வே.ரா.பெரியார், மறைமலை அடிகளார், ராஜசேர் அண்ணாமலைச் செட்டியார். கல்கி கிருஸ்ண மூர்த்தியார் மற்றும் எம்.என்.தண்டபாணிதேசிகர் போன்றோர் இத் தமிழிசைச் சங்கத்திற்கு ஆதரவாக இருந்து தமிழிசையை முன்னெடுக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டனர். அதன் காரணமாக சிதம்பரத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஒரு தமிழிசைக் கல்லூரி உருவானது. (100ற்கு) நூறுக்கு மேற்பட்ட மாணவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழக இசைக் கல்லூரியில் தமிழிசை கற்க முற்பட்டார்கள். அவர்களுக்கு அண்ணாமலைச் செட்டியார் பண உதவியும் கிடைத்தது. இவ் ஊக்குவிப்புக்கள் காரணமாய் தமிழிசை வானொலி - அரங்குகளில் தலைகாட்டத் தொடங்கின.

**கேள்வி:-** **தெலுங்கில் இருந்து விடுபட்ட இசை புதிய முயற்சியில் புதிய வடிவம் பெற்றிருந்தனவா?**

**பதில்:-** முயற்சியில் ஒரு தாகம் இருந்தாலும் பாடல்கள் சமயம் சார்ந்ததாயும், வடமொழிச் சொற்கள் கலந்ததாகவுமே இருந்தன.

வடசொற்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்களுக்கான ஒரு தேடல் இன்று நடைபெற்று வருகின்றது.

உதாரணம் "குருவே சரணம் - குருவே அடக்கம்" இப்படி 3000 வட சொற்களுக்கான தமிழ் சொற்கள் அடங்கிய கையேடு சிங்கப்பூரில் வெளிவந்துள்ளது.

**கேள்வி:-** பொதுவாக இசை, மொழிகளுக்கு அப்பால் பட்டது என்று சொல்லுவார்களே?

**பதில்:-** இசையை எந்த மொழியிலும் இரசிக்கலாம் என்பது உண்மைதான், ஆயினும் ஒரு மொழியைப் புரிந்துகொண்டு பாடுதலிலும், இரசிப்பதிலும் ஒரு தெளிவு உணர்வுபூர்வமான ஈடுபாடு இருக்கவே செய்யும்.

தெரிந்தமொழி மேலும் மேலும் இசையைக்கேட்கத்தூண்டும்.

**கேள்வி:-** எமது இலக்கியங்களில் எமது தொன்மையான கலை வடிவமாக ஆட்டம் - பாட்டு - நடிப்பு என்ற மூன்றினையும் உள்ளடக்கிய கூத்துக்களைப் பற்றிக் கூறுகின்றன. அப்படியானால் கூத்திசை முந்தியதா? தமிழிசை முந்தியாதா?




**பதில்:-** இது ஒரு ஆய்வு சம்பந்தமான விடயம்தான். என்னைப்போன்ற பல இசையாளர்களின் கருத்துப்படி, தமிழிசை கிறிஸ்துவுக்கு முற்பட்டது. கூத்திசை பிற்பட்டது என்பதே.

நான் சிறுவயதில் இருந்தே கூத்துக்கள் பார்த்து வருகிறேன். `ஆட்டு வணிகன்' நான் பார்த்த முதல் கூத்து... கூத்திலே பாடப்படுகின்ற பல பண்கள் (ராகங்கள்) தமிழிசையில் உள்ளன. ஆனால் அவர்கள் அதை ஒழுங்காகப் பாடுவதில்லை. ஒவ்வொருவரும் விதம் விதமாகத் தான்தோன்றித் தனமாகப் பாடுவார்கள். தமிழிசை வடிவம் அமைக்கப்பட்டு பாடுகிற எவரும் விலகிப் போகமுடியாமல் வரையறுக்கப்பட்டுள்ளது. சுருதி மாறாத லயம். செவ்விசையில் உள்ளது. ஆகவே எப்படிப் பார்த்தாலும் தமிழிசைதான் முந்தியது என்பதே என் கருத்து.

**கேள்வி:-** நீங்கள் சொல்வது ஒரு வகையில் சரிதான். உதாரணத்திற்கு `நீலாம்புரி' ராகத்தை எடுத்துக்கொண்டால் ஊருக்கு ஊர் அதனை வெவ்வேறு விதமாகப் பாடுவார்கள். தன்னிச்சையாக ஒவ்வொருவரும் பாடுவதனால் கூத்திசை தனது மூலவடிவத்தை இழந்து வருகிறது என்பது மறுக்கமுடியாத உண்மைதான். எனது கேள்வி அதுவல்ல. கட்டமைப்பு இல்லாமல் காலத்துக்குக்காலம் வாய்வழி கேள்வி முறை வழியாக வந்த கூத்திசை பின்னர் நெறிப்படுத்தப்பட்டு செவ்விசையாக ஒரு பயிற்சி முறைக்கு மாறியிருக்கலாம் அல்லவா?

**பதில்:-** இல்லை அப்படிச் சொல்லமுடியாது. நான் ஏற்கனவே சொன்னதுபோல இதற்குத் தகுந்த ஆய்வு அடிப்படையில்தான் சரியான விளக்கம் தரமுடியும். நாட்டார் பாடல்களை எடுத்துக்கொண்டால், அவைகூட செவ்விசைக்குள் உட்பட்டே அமைந்துள்ளன.

**கேள்வி:-** **கடந்த ஆண்டும் டோட்முண்ட் கலையகத்தினரின் அழைப்பின்பேரில் வந்திருந்தீர்கள். இவ்விரு சந்திப்புக்களிலும் அங்குள்ள சிறார்களைப் பற்றிய கருத்துகள், கவனிப்பைப்பற்றிக் கூறுவீர்களா?**

**பதில்:-** மனம் நிறைந்த மகிழ்ச்சியாக இருக்கிறது. பெருமிதமாக மனம் பூரிப்படைகிறது. எங்கே எங்கள் மக்கள் சிதறுண்டு எங்கள் கலைவடிவங்கள் அழிந்து விடுமோ என்று ஏங்குகின்ற என்போன்ற கலைஞர்களுக்கு அந்தக் கவலையே வரக்கூடாத அளவுக்கு ஆறுதல் தருகிறது. எங்கள் தாய் மொழியும் அதன் கலைச் சொத்துக்களும் மென்மேலும் வளர்ச்சி பெறும் என்ற நம்பிக்கை தருகிறது. `மெல்லத் தமிழினிச் சாகும்' என்று பாரதி சொன்னது எமது ஈழச் சிறார்களால் பொய்யாகி விட்டது. அந்தப் பயமே அற்றுப் போய்விட்டது.

**கேள்வி:-** **நன்றி திலகராயா போல் அவர்களே! எமது சிறார்கள் தாய்மொழியிலேயே புதிய சிந்தனைகளோடு தமிழிசையை இலகுவாகக் கற்றுக்கொள்ள சுர தாளக்குறிப்புகளுடன் கீதம், சுதிசுரம், வர்ணம், கீர்த்தனை, பதம், பண்மாலை, தில்லானா முதலிய பல்வகையிலும் செந்தமிழ்பாக்களை யாத்து, மாலையாகக் கோர்த்து மிகச் சிறந்த முத்தாரமாக புத்தகவடிவில் தந்தமைக்காக ஈழமுரசு வாசகர்கள் சார்பாக எமது நன்றியையும் உங்களுக்குக் கூறிக்கொள்கிறோம்.**

**பதில்:-** அதுபோல இவ்வரிய முயற்சியில் முனைந்திருக்கும் டோட்முண்ட் தமிழர் கலையகத்தினருக்கும், அதுபோன்ற ஐரோப்பிய நாடுகளில் தாமிழ்ப்பாலை எமது சிறார்களுக்கு ஊட்டிக் கொண்டுவரும் அனைத்துத் தமிழ்ச்சோலைகளுக்கும், கலைக் கழகங்களுக்கும், பெற்றோர்களுக்கும் சிறார்களுக்கும் தமிழ்த் தாயின் அருளைவேண்டி எனது நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். இச் செய்தியை ஈழமுரசு பத்திரிகை வாசகர்களோடு பரிமாற வாய்ப்பளித்த நிர்வாகத்தினருக்கும் எனது நன்றிகள். வணக்கங்கள்

# வன்முறை

(20ம் பக்கத் தொடர்ச்சி)

இனத்தின் பெயரால், தேசியத்தின் பெயரால், சமாதானத்தின் பெயரால் போர் தொடுக்கப்பட்டு மனிதரை மனிதர் கொன்று குவித்துக்கொண்டிருக்கிறார்கள். எண்ணம் தான் இத்தகைய பயங்கரமான போர்களை உருவாக்கிக் கொண்டிருக்கின்றது. நினைவின் நல்ல விளைவுகளைப் பற்றி அக்கறை கொள்ளாது அதனுடைய அழித்தொழிக்கும் தன்மையைப் பற்றியே இங்கு நோக்குவோம். வரையறுக்கப்பட்ட நினைவே (memory) அழிவை ஏற்படுத்துகின்றது. எனவே இதுதான் இன்று எங்கள் முன்னுள்ள பிரச்சினையாகும்.

அடக்கு முறையால் அல்லது இணக்கத்தால் அல்லது என்னைவிட உயர்வாகக் கருதப்படும் சமாதானம், அன்பு, கடவுள் ஆகியனவற்றுடன் என்னையே நான் அடையாளப் படுத்துவதால் நான் வன்முறையிலிருந்து விடுதலை பெற இயலாது. ஏனெனில் இவை எவையுமே வன்முறையைத் தீர்க்கப்போவதில்லை. நான் உண்மையிலேயே வன்முறை என்ற நோயிலிருந்து விடுபடவிரும்பவேண்டும். ஆரோக்கியமான மனம் நோயின் ஒவ்வொரு வடிவத்திலிருந்தும் விடுபடவே விரும்பும். நான் இவ்வுலகத்தோடு எல்லாவற்றிற்கும் மேலாக என்னோடு சமாதானமாக வாழவே விரும்புகின்றேன். போரை முடிவுக்குக் கொண்டுவரவேண்டுமென்ற அவாவே போரை உற்பத்தியாக்கும்.

இன்று எமக்கு மக்களை விட, பொருட்களை விட, கருத்துக்களும் உணர்வுகளும், நாமே எமது மனங்களில் உருவாக்கிய விம்பங்களுமே முக்கியமானவை ஆகிவிட்டன. இன்னொரு விதமாகக் கூறுவதானல் நாம் மெய்ம்மையில் அல்லாது கருத்துப் புனைவுகளிலேயே வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். மக்களுடனான எமது உறவு கூட ஒருவிதக் கருத்துப் புனைவேயாகும். உண்மையைச் சொல்வதானால், நாம் மக்களுடன் எவ்வித யதார்த்த உறவும் கொண்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாகக் கருத்துக்களுடனும், விம்பங்களுடனும், கருத்தியற் புனைவுகளுடனுமான உறவையே பேணிக் கொண்டிருக்கின்றோம். விம்பங்களை உருவாக்குவதென்பது மிகவும் சுலபமான காரியம். ஒருவரைப் புரிந்துகொள்ள முடியாதபோது, அவரைப்பற்றி ஒரு சின்னத்தை -ஓர் அடையாளத்தை நாம் மிகச் சுலபமாக உருவாக்கிவிடுகின்றோம். சகல சமய வணக்கத் தலங்களும் சின்னங்களாலும், அடையாளங்களாலும் நிரம்பி உள்ளன. திசைகளும், ஆண்டவனுடைய பெயரும் பல பெயர்களும்கூட அடையாளங்களாக வணங்கப்படுகின்றன. அடையாளங்களும் சின்னங்களும் இறந்த காலத்திற்கு உரியவை. நாங்கள் அவற்றிற்கு ஆடை உடுத்தி, அலங்கரித்து, மாலை அணிவித்து வணங்குகின்றோம். உயிரற்ற பொருட்களுக்கு எங்களால் செய்ய முடியாதவற்றையெல்லாம் நாங்கள் அவற்றிற்கு சமயச் சடங்குகள் என்ற பெயரால் செய்து மகிழ்கின்றோம். நாம் எம்மைப் புரிந்துகொள்ளாத வரைக்கும் எப்பொழுதும் குழப்ப நிலையிலேயே நாம் இருக்கவேண்டும். நாம் எம்மைப் புரிந்துகொள்ளாத வரைக்கும் வன்முறையாளர்களாகவே தொடர்ந்து இருப்போம்.

தேசியம், இன உறவு, ஜனநாயகம் ஆகியவை யாவும் வெறும் கருத்துக்களே. இக்கருத்துக்களுக்காக நாம் எங்களையே கொன்று அழிக்கத் தயாராக இருக்கின்றோம். கருத்துக்கள் யாவும் விம்பங்களானபடியால் அவை இறந்த காலத்தவை. `நான்' என்பதும் இறந்த காலம். `கருத்து' என்பதும் இறந்தகாலம். எனவே எமது ஒட்டுமொத்த வாழ்க்கையும் இறந்தகால வாழ்க்கையாகவே அமைகின்றது. ஆனால் நிகழ்காலத்தில் உயிர் வாழ்ந்துகொண்டும், அசைந்துகொண்டுமிருக்கும் வாழ்க்கையானது எப்பொழுதும் நிகழ்காலத்திற்குரியதே. நாங்கள் இறந்தகாலக் கண்களால் தான் மனிதர்களையும் மற்றப்பொருள்களையும் பார்க்கின்றோம். நாங்கள் எதையும் எவரையும் உள்ளது உள்ளபடி பார்க்கத் தெரியாத குருடர்களாக இருக்கின்றோம். அதேபோல் எமக்குள் எதையும் பார்க்கத் தெரியாதவர்களாக இருக்கின்றோம். எமக்குள் நாங்களே பல விம்பங்களைக் கட்டியெழுப்பிக்கொண்டு இருக்கும்போதுகூட இப்படி விம்பங்களைக் கட்டிக்கொண்டிருக்கின்றோம் என்பதை நாம் புரிந்துகொள்கின்றோமில்லை. நாங்கள் நேற்றைய கண்களோடு - நேற்றைய நினைவுகளோடு பார்க்கும்போது எங்களது பார்வையில் உயிர்ப்பு இருக்காது. நாம் ஏன் இப்படிக் கண்மூடித்தனமாகச் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றோம் என்பதற்கான விடை பிறரிடமில்லை. இருக்கவும் முடியாது. இதற்கான விடையை எமக்காக நாங்களே தெரிந்துகொள்ள வேண்டும். விடையைப் புறத்திலிருந்து எதிர்பார்த்துப் பயனேதுமில்லை. விடை எங்களுக்குள்தான் உள்ளது. ஒன்றைத் தெளிவாகக் கேட்பதற்கும் பார்ப்பதற்கும் குறுக்கேயுள்ள இடையூறுகள் - தடங்கல்கள் நீங்க வேண்டும். மனம் அமைதியாக இருப்பதற்கு, முதலில் அது தெளிவாக அல்லவா இருக்க வேண்டும்? மனதுக்குள், கோட்பாட்டுக் கலங்கல்களும், சித்தாந்தக் கலங்கல்களும், அறிவுக் கலங்கல்களும், எண்ணக்கலங்கல்களும், இனவாதக் கலங்கல்களும் இல்லாமலிருந்தால் எங்களுடைய உள்நோக்கிய பார்வை தெளிவுபெறும். அத்தெளிவில் அமைதி நிலவும்.

எங்களது மனம் அமைதியாக உள்ளது என்பதை நாம் எப்படி உணர்வது, காண்பது?

எண்ணமே எங்களது நினைவு. எண்ணமே எங்களுக்கு நாங்கள் விதித்துள்ள வரையறை. எனவே எண்ணம் குறுக்கிடும்வரை, நாங்கள் `வரையறை' என்ற காலப்பொறிக்குள் விழுந்துகொண்டுதானிருப்போம். இது பற்றிய விழிப்பை-தெளிவை நாங்களாகவே பெறுவோம் என்றால் எங்களுக்குள் இருந்தபடியே எங்களை ஆட்சி செலுத்திக்கொண்டும் ஆட்டிப்படைத்துக்கொண்டும் இருக்கும் `நான்' என்ற முனைப்பு - அகந்தை நீங்கிவிட்டது என்றுதானே பொருள்?


IMPORTAS Asian Groceries

Importers, Distributors & Wholesalers of **Kings, Niru, Suryaa, TRS, GFT**

உங்கள் வியாபார ஸ்தாபனங்களுக்குத் தேவையான இலங்கை, இந்திய, தாய்லாந்து உணவுப் பொருட்களுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

| | | |
|---|---|---|
| பறோட்டா | 36X375 | 1.00 ஈரோ |
| Family பறோட்டா | 24X750 | 1.80 ஈரோ |
| பாலப்பம் | 30X400 | 1.30 ஈரோ |
| மசாலாதோசை | 30X400 | 1.30 ஈரோ |
| இட்டலி சாம்பார் | 30X500 | 1.40 ஈரோ |
| சப்பாத்தி | 36X400 | 1.10 ஈரோ |
| பூரி மசாலா | 30X500 | 1.50 ஈரோ |
| சென்ன பட்டூரா | 30X500 | 1.50 ஈரோ |

சி.புவனேஸ்வரன் (குஞ்சன்) S.J.N. Imports
Tel: 0049 -24625557

Tobeleackerstrasse 4, 8212 Neuhausen Tel: + 41 52 672 28 38Fax: + 41 52 228 67 45

# கதிர்வீச்சை கண்டறியும் கருவி கொழும்புத் துறைமுகத்தில் அமெரிக்கா பொருத்துகிறது

கொழும்பு துறைமுகத்தில் அணுப் பொருட்களை (கதிர்வீச்சு) கண்டறிவதற்கான கருவிகளை அமெரிக்கா பொருத்தவுள்ளதாக சிறீலங்காவின் மத்திய சூழலியல் அதிகார சபைத் தலைவர் திலக் ரணவிராஜா தெரிவித்துள்ளார். சட்டம், ஒழுங்கு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரான திலக் ரணவிராஜாவே மத்திய சூழலியல் அதிகார சபைத் தலைவராகவுமுள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் கூறுகையில், கொழும்பு துறைமுகப் பாதுகாப்பு குறித்து அமெரிக்காவுடன் புரிந்துணர்வு உடன்பாடொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்த உடன்பாட்டின்படி கொழும்பு துறைமுகத்தில் அணுப் பொருட்களை (கதிர்வீச்சை) கண்டறிவதற்கான கருவிகளை அமெரிக்கா பொருத்தும்.

அண்மையில் அமெரிக்கா சென்றிருந்த துறைமுகங்கள், விமான சேவைகள் அமைச்சர் மங்கள சமரவீர, இது தொடர்பாக இறுதிப் பேச்சுக்களை நடத்தியிருந்தார். இந்தப் புரிந்துணர்வு உடன்பாட்டின்படி, கொழும்புத் துறைமுகமூடாக வெளியிலோ அல்லது வெளிநாடுகளிலிருந்து கொழும்புத் துறைமுகமூடாகவோ அணுப் பொருட்கள் சென்றுவருவதைத் தடுக்க அமெரிக்கா தனது செலவில் இந்தக் கருவியைப் பொருத்தும். பல்வேறு நாடுகளினதும் முக்கிய துறைமுகங்களில் அமெரிக்கா இந்தக் கருவியைப் பொருத்தியுள்ளது. இதன் மூலம் சம்பந்தப்பட்ட நாடுகளினதும் அமெரிக்காவினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதே இதன் நோக்கம்.

# மஹிந்த ராஜபக்சவின் கவலையும் சந்திரிகாவின் அதிர்ச்சியும்



(22.08.04)

ஈ.பி.டி.பி. குழுவின் ஊடகச் செயலாளர் பால நடராஜா ஐயர் கொலை செய்யப்பட்டதையிட்டு அதிர்ச்சியடைந்திருப்பதாகத் தெரிவித்துள்ள சிறீலங்காவின் பிரதமர் மஹிந்த ராஜபக்ச, இப்படுகொலையை வன்மையாகக் கண்டிப்பதாகவும் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் அறிக்கையொன்றையும் வெளியிட்டுள்ளார். அவ் அறிக்கையில், பால நடராஜ ஐயரின் படுகொலையை வெறுமனே ஒரு அரசியல் படுகொலையாக மட்டும் எடுத்துக் கொள்ள முடியாது. அவர் மொழிபெயர்ப்பாளராக, இலக்கியவாதியாக, ஊடகவியலாளராக தமிழ் - சிங்கள சமூகத்திற்கு அரும் பணியாற்றியுள்ளார். கடந்த இரண்டு தசாப்தங்களாக இடம்பெற்று வரும் பிரச்சினைக்குத் தீர்வு காணுமுகமாக அனைத்து அரசியற் கட்சிகளும் பேச்சுவார்த்தை மூலம் ஒரு தீர்வை ஈட்டுவதற்கு முயற்சித்து வரும் இவ்வேளையில் இம் மிலேச்சத்தனமான படுகொலையை யார் மேற்கொண்டார்கள் என்பதற்கு சான்றுகள் தேவையில்லை.

தமிழ் சமூகத்தின் கல்விமான்கள், அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள் ஆகியோரைப் படுகொலை செய்வது அச்சமூகத்தின் சமூக விழுமியங்களை வளர்ப்பதற்கு உதவப் போவதில்லை. பால நடராஜ ஐயரின் மனைவி ஜெகதீஸ்வரி ஐயருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஈ.பி.டி.பி. அமைப்பாளர்களுக்கும் எனது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பால நடராஜ ஐயரின் மறைவுச் செய்தியைக் கேட்டு அதிர்ச்சியடைந்திருப்பதாக சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவும் தெரிவித்துள்ளார். அவரின் மறைவு குறித்து அனுதாபச் செய்தியொன்றை அவரது மனைவிக்கு அனுப்பி வைத்துள்ள சந்திரிகா, அதில் மேலும் தெரிவித்திருப்பதாவது, பால நடராஜ ஐயர் ஒரு உண்மையான ஜனநாயகவாதி. இந்த நாட்டிலுள்ள தமிழ்ப் பேசும் மக்களது உரிமைகளை நிலைநாட்டுவதற்காக அவர் பாடுபட்டுள்ளார். அவர் தமிழர்களது உரிமைகளை வன்முறைகள் மூலமாகவும் ஆயுத பாவனை மூலமாகவும் அடைந்துவிட முடியாது என்பதில் நம்பிக்கை கொண்டிருந்தார். அவர் ஒரு சிறந்த எழுத்தாளராக தமிழ் இலக்கியத்துறைக்கு அரும்பணியாற்றியுள்ளார்.



அரசியல் எதிரிகளைப் பயங்கரவாத நடவடிக்கைகள் மூலம் அழித்தொழிக்கும் வன்முறைக் கலாசாரத்திற்கு உங்கள் கணவரும் பலியானதையிட்டு நான் திகிலடைந்துள்ளேன். தங்களுக்கும் உங்கள் மூன்று மகள்மாருக்கும் தங்கள் குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன், என்று தெரிவித்துள்ளார்.

# காணாமல் போன விமான `எதிர்ப்பு ஏவுகணைகள்' மாரவிலவில் கண்டுபிடிப்பு

(22.08.04)

நீர்கொழும்பு வாவியில் அண்மையில் வீழ்ந்து நொருங்கிய `மிக்-27' ரக போர் விமானத்திலிருந்து காணாமல் போன விமான`எதிர்ப்பு ஏவுகணைகள்' ஐந்து மாரவிலவிலுள்ள மீனவர் ஒருவரின் காணியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை இந்த ஏவுகணைகள் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து சந்தேக நபரான மீனவரும் ஏவுகணை வைக்கப்பட்டிருந்த பெட்டியை விலைக்கு வாங்கிய போத்தல் கடை வியாபாரியான தமிழர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேக நபர்களை தீவிர விசாரணைகளுக்கு உட்படுத்தி வரும் மாரவில பொலிசார், மீட்கப்பட்ட ஐந்து ஏவுகணைகளையும் விமானப் படையினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது, கடந்த யூன் மாதம் 9ம் திகதி சிறீலங்கா வான்படையின் `மிக் 27' ரக போர் விமானமொன்று பயிற்சிக்காக கட்டுநாயக்கவின் விமானப் படை விமானத் தளத்திலிருந்து புறப்பட்டு சில நிமிடங்களில் இயந்திரக் கோளாறு காரணமாக நீர்கொழும்பு வாவியில் வீழ்ந்து நொருங்கியது. இதையடுத்து விமானப் படையினர் வீழ்ந்து நொருங்கிய விமானத்தின் பாகங்களை வாவியிலிருந்து மீட்டபோதும் விமானத்தில் பொருத்தப்பட்டிருந்த எதிர்ப்பு ஏவுகணைகள் அடங்கிய பெட்டி காணாமல் போயிருந்தது.

விமானம் வாவியில் வீழ்ந்து நான்கு பாகங்களாக நொருங்கிய போது ஏவுகணை அடுக்கி வைக்கப்பட்டிருந்த பெட்டி கடலில் வீழ்ந்து நீரில் மிதந்து அடித்துச் செல்லப்பட்டிருக்கிறது. அப்போது நீர்கொழும்பு கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் அப்பெட்டியை மீட்டெடுத்துச் சென்று பார்த்துள்ளனர். அதில் ரொக்கட் வடிவிலான ஏவுகணைகள் இருப்பதை அவதானித்த அவர்கள் இரகசியமாக அதனை எடுத்துச் சென்று குழி தோண்டிப் புதைத்துள்ளதுடன் ஏவுகணை வைக்கப்பட்டிருந்த அலுமினியப் பெட்டியை போத்தல் கடையொன்றுக்கு அதிக விலைக்கு விற்பனை செய்துள்ளனர்.

நீண்ட காலம் மிகவும் இரகசியமாக வைக்கப்பட்டிருந்த இந்த உண்மை, தொலைபேசித் தகவல் ஒன்றின் மூலம் மாரவில பொலிசாருக்கு கிடைத்துள்ளது. இதனையடுத்து உசாரடைந்த பொலிசார் போத்தல் வியாபாரியைக் கைது செய்ததுடன் மஹாவெவ மட்டுகொட்டுவ பகுதியில் வசித்து வரும் மீனவ வீட்டு வளவில் புதைத்து வைக்கப்பட்டிருந்த காணாமல்போன ஏவுகணைகள் ஐந்தையும் மீட்டு அந்த மீனவரையும் கைது செய்தனர். இதேநேரம், ஏவுகணைகளை புதைத்து வைத்திருந்ததற்கான காரணத்தை அறிந்து கொள்வதற்காக மேலதிக விசாரணைகளை பொலிசார் நடத்தி வருகின்றனர்.

# சந்திரிகா இலண்டனில்!

(22.08.04)

சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு மீண்டும் நேற்று இலண்டன் வந்துள்ளார். ஒருவார காலம் அவர் இலண்டனில் தங்கியிருப்பார் என்று ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. ஜனாதிபதி வெளிநாடு சென்றுள்ளதையடுத்து அவர் வசம் இருந்த பாதுகாப்புத் துறைக்கு பதில் அமைச்சராக ரட்ணசிறி விக்கிரமநாயக்கவும் புனர்வாழ்வு, நல்லிணக்க பதில் அமைச்சராக நிமால் டி சில்வாவும் உயர் கல்வி பதில் அமைச்சராக தினேஷ் குணவர்த்தனவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# இலங்கைக்கு கடத்த....

(04ம் பக்க தொடர்ச்சி)

அப்போது அவர்கள் வைத்திருந்த சூட்கேஸில் சிறுசிறு பொட்டலங்களாக 23 கிலோ பிரவுண் சுகர் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இது குறித்து இவர்கள் மேற்கொண்ட விசாரணையில் பங்கஜ் பார்கவ் என்பவர் மத்திய பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும், அவரோடு சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் மரிய ஜோன்சன் மற்றும் சிவகங்கையைச் சேர்ந்த விஜயகுமார் ஆகிய மூன்று பேரும், மத்திய பிரதேசத்திலிருந்து கார் மூலம் கிருஷ்ணகிரி வந்ததாகவும், அங்குள்ள ஒரு விடுதியில் தங்கிவிட்டு, அங்கிருந்து இலங்கைக்குப் போதைப்பொருளை கொண்டு செல்ல இருப்பதாகவும் கூறியுள்ளனர். இந்த சம்பவம் குறித்து 3 நபர்களையும் கைது செய்து சேலம் போதைப்பொருள் கடத்தல் தடுப்புப் பிரிவு, நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிபதி இவர்களை விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டார்.

S.A. Nathan Credit & insurence Bern

சுவிசில் 14 வருட அனுபவத்தோடு கூடிய பணத்தினை பெற்றுக்கொடுத்து வாடிக்கையாளர்களின் நன்மதிப்பைப் பெற்று முன்னணி வகிக்கும் ஒரே நிறுவனம் S.A. Nathan Credit

* கடன் பெறுவோருக்கு வங்கி ஆலோசனையுடன் விசேட சலுகை
அதிககூடிய பணமா! குறைந்த வட்டி வீதமா! GE capital லா (Pro credit), Swiss Credit ஆ எது வேண்டுமாயினும் நாடவேண்டிய நிறுவனம் S.A. Nathan Credit
* அத்தோடு அனைத்து காப்புறுதிகளும் செய்து கொடுக்கப்படும்.

CREDIT
வங்கிக்கடன்
S.A.NATHAN

வங்கி கடன் பெற விரும்புகின்றீர்களா?
B or C or CH உள்ளவர்களின் பணத்தேவையை உடனுக்குடன் பூர்த்தி செய்யக் காத்திருக்கின்றோம்.

S. Atputhanathan (Atputhan) Kaspar str 15/94, 3027 Bern CH. Tel: 031 992 62 14 / Fax: 031 992 62 11 / Natel: 079 208 50 46

# விடுதலைப் புலிகளுக்கு ஆத்திரமூட்டி...

கிழக்கில் வாகரைக்குத் தெற்கே காயாங் கேணிப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த கிளைமோர் தாக்குதலில் அம்பாறை மாவட்ட முன்னாள் அரசியல்துறைப் பொறுப்பாளர் பாவாவும், மட்டு அம்பாறை மாவட்ட புனர்வாழ்வுப் பொறுப்பாளர் யோகாவும் கொல்லப்பட்டனர். இது விடுதலைப்புலிகளுக்கு ஆத்திரமூட்டும் செயலாகவே கருதப்படுகிறது. கிளைமோர் குண்டு வெடிக்கப்பட்டதுடன் துப்பாக்கிப் பிரயோகமும் செய்யப்பட்டிருக்கிறது. இதில் ஒரு முக்கிய பெண் போராளியும் காயமடைந்திருக்கிறார்.

காயாங்கேணிப் பகுதியில் படைமுகாமுக்கு அருகிலேயே இச் சம்பவம் நடந்திருக்கிறது. மட்டக்களப்பு அம்பாறைப் பகுதியில் முக்கிய அரசியல் பொறுப்பாளரான சேனாதிராசாவும் வேறு சிலரையும் சமீப காலத்தில் அரசபுலனாய்வுப் பிரிவினர் தாக்குதல் நடத்தி கொலை செய்யப்பட்டிருக்கின்றனர். புலனாய்வுப் பிரிவினர் சில 'சில்லறைகளைக் கொண்டு இக் கொலைகளைச்' செய்து விடுதலைப்புலிகளுக்கு ஆத்திரமூட்டிய போதிலும் போர் நிறுத்தத்தை விடுதலைப்புலிகள் தொடர்ந்தும் கடைப்பிடித்துவந்துள்ளனர்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடங்கும் போது, போரினால் பாதிக்கப்பட்டு இருப்பிடங்களை விட்டு வெளியேறிய மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பி புனர்வாழ்வு பெறுவதற்கும் தங்களைப் புனரமைத்துக் கொள்ளவும் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரமுள்ள ஓர் அமைப்பை உருவாக்கிச் செயல் படுத்த முடியும் என்று விடுதலைப்புலிகள் காத்திருக்கின்றனர்.

இந்நிலையில் விடுதலைப்புலிகள் சமர்ப்பித்த இடைக்காலத்தன்னாதிக்க அதிகாரசபையின் வரைபுத்திட்டத்தை ஏற்றுப் பேச்சுவார்த்தையைத் தொடங்குவதற்கு சந்திரிகா அரசு தயாரில்லை. ஆனால் இதற்கொரு மாற்றுத்திட்டத்தைத் தயாரித்துப் பேச்சுவார்த்தை நடத்தவே அரசு முன்வந்திருக்கிறது.

ரணில் அரசு இதற்கு முன் மாற்றுத்திட்டங்கள் சமர்ப்பித்து அது பாதிக்கப்பட்ட தமிழ்மக்களுக்குப் பயன் தராது என்று விடுதலைப் புலிகள் நிராகரித்துவிட்டனர். விடுதலைப்புலிகள் சமர்ப்பித்த இடைக்காலத் தன்னாதிக்க அதிகார சபைக்குத் தமிழீழ மக்கள் கடந்த பொதுத் தேர்தலில் அங்கீகாரமளித்ததுடன் தமிழீழ விடுதலைப் புலிகள்தான் தமிழீழ மக்களின் அங்கீகரிக்கப்பட்ட ஒரே பிரதிநிதிகள் என்பதையும் கடந்த தேர்தலில் மக்கள் உறுதிப்படுத்தியுமுள்ளனர்.

இந்நிலையில் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்குப் பல்வேறு காரணங்களைச் சொல்லி அரசு காலங் கடத்திவருகின்றது.

எந்த சமாதானத்திட்டத்தையும் அரசில் கூட்டுச் சேர்ந்துள்ள ஜே.வி.பி எதிர்க்கிறது. ஆளும் கட்சிக்குள் சமாதானப் பேச்சுக்கு ஒத்த கருத்தில்லை.

சந்திரிகா அம்மையாரின் ஜனாதிபதி பதவிக்காலம் அடுத்தவருடத்துடன் முடிவடையும். தொடர்ந்து ஜனாதிபதிப் பதவியில் இருக்கமுடியாது. இதற்காக அரசியல் அமைப்பில் திருத்தம் செய்ய அல்லது புதிய அரசியலமைப்பை உருவாக்கி நாடாளுமன்றத்துக்கு அதிகாரம் வழங்கி பிரதமமந்திரியாகத் தொடர்ந்து நாட்டின் தலைமைப் பதவியிலிருக்கத் திட்டமிடுகிறார். இது சரிவராவிடில் மீண்டும் ஒரு பொதுத் தேர்தலுக்குச் செல்லவும் அவர் தயாராகிறார் !

இதில் எதைச் செய்தாலும் இன்று நாடுள்ள பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிக்க முடியாது. சமாதானப் பேச்சுவார்த்தை தொடங்கி சுமூகமாக நடந்தால்தான் டோக்கியோ மாநாட்டில் உதவி வழங்கும். நாடுகள் உறுதியளித்த நிதி உதவி, இலங்கைக்குக் கிடைக்கும்.

புதிய அரசியலமைப்பைத் தயாரித்தால் கூட ஒஸ்லோ மாநாட்டில் தெரிவிக்கப்பட்ட சமஷ்டி ஆட்சி அமைப்பு யோசனையை கூட இணைத்துக்கொள்ள, சந்திரிகா ஆட்சி தயாராக இல்லை.

இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை அமைக்கவும் அம்மையாரின் ஆட்சி விரும்பவில்லை.

ஆனால் விடுதலைப்புலிகளுக்கு ஆத்திரமூட்டி அவர்களைப் போருக்குத் தூண்டிவிடவேண்டும்.

இல்லையேல் நாட்டில் நடக்கும் கொலைகள் எல்லாவற்றுக்கும் புலிகளே பொறுப்பு என்று அவர்களைப் பயங்கரவாதிகளாக்க வேண்டும்.

இதுவும் சரிவரவில்லையெனில் கிழக்கில் கொலைகளைத் தமது ஆட்களைக்கொண்டு தூண்டிவிட்டு தமிழீழத் தாயகத்தில் அமைதியாகவும் அச்சமின்றியும் மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகத்திலிருக்கும் பகுதிகளுக்கு தமது அரச படையை நகர்த்தி, ஜனநாயகத்தைக் காப்பாற்றப் போர்புரிய வேண்டும்.

போர் தொடங்கினால் ஜனநாயகத்தைப் பாதுகாக்கவும் நாட்டின் ஒருமைப்பாட்டைக் காப்பாற்றவும் போர் புரிவதாகச் சொல்லி உலக நாடுகளிடம் ஓலமிட்டு உதவி கேட்கலாம். இதன் மூலம் நாட்டில் விலைவாசி உயர்வுக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுவதைத் தடுக்கவும் முடியும். பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க வெளி உதவியையும் பெற்றுக்கொள்ளலாம்.

இவையே சந்திரிகா அம்மையாரின் திட்டம். இதனால் எப்படியாவது மீண்டும் ஒரு போரைத் தொடங்குவதற்கே சந்திரிகா அம்மையார் பல்வேறு நிபுணர்களுடனும் கலந்தாலோசனை செய்துகொண்டிருக்கிறார். போரைத் தொடர்வதன் மூலம் ஜே.வி.பியின் மிரட்டலிலிருந்தும் தன்னைப் பாதுகாத்துக்கொள்ளவும் அம்மையார் சிந்திக்கிறார்.

இலங்கையிலுள்ள அரசியல் ஆய்வாளர்களும் புத்திஜீவிகளும் இராணுவ ஆய்வாளர்களும் சந்திரிகா அம்மையார் மீண்டும் ஒரு போருக்குத் தயாராகுவதாகவே கருதுகின்றனர்.

விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரையில் போர் தம்மீது திணிக்கப்பட்டால் அதை எதிர்த்து முறியடிக்கத் தயாராக இருப்பதுடன் தமிழீழ விடுதலையை முழுமையாக்கவும் ஆயத்தமாக இருக்கின்றனர். ஆனால் அவர்கள் வலுச் சண்டைக்குச் செல்லமாட்டார்கள். பொருளாதாரப் போராட்டத்தை விவேகமாக நிறைவேற்றவும் அவர்கள் ஆயத்தமாக இருப்பதாகவும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.


## மரண அறிவித்தல்

அன்னையின் மடியில் 22.09.1954



ஆண்டவன் அடியில் 22.08.2004

**திருமதி. ஜெகதீஸ்வரி தவபாலசிங்கம்**
(மயிலிட்டி வடக்கு கிராமசபை Road காங்கேசன்துறை)

தாயகத்தில் மயிலிட்டியில் பிறந்து வளர்ந்து இந்தியாவில் (சென்னையில்) ஞாயிற்றுக்கிழமை (22.08.04) அன்று காலமானார். அன்னார் திரு. காசிப்பிள்ளையின் அன்பு மகளும், காலம் சென்ற தவபாலசிங்கத்தின் அன்பு மனைவியும், குமார் (சுவிஸ்), ராஜேஸ்வரி, வசந்தராணி (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு அக்காவும்,

சிவசுதன் (சுதன் — பிரான்ஸ்), சிவதிபன் (பேராளி), சிவாஜினி ஆகியோரின் அன்புத் தாயாரும்,

இராஜேஸ்வரன் (பிரான்ஸ்), தவராணி (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரிகைகள் நாளை 23.08.04 பிற்பகல் இரண்டு மணிக்கு சென்னையில் நடைபெற்றது (மடிப்பாக்கம்)

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்

**பிள்ளைகள், மருமக்கள், சகோதரர்கள்; பெறாமக்கள்**

**தொடர்புகளுக்கு :**
**சுதன் (பிரான்ஸ்) 0603813897**
**00914422471979**
**மருமகன் (பிரான்ஸ்)-0148350674**



## வீடு வாடகைக்கு

Métro (ligne 8) Créteil Préfecture மிக அருகில் F3 (74 m2) appartement (ஒரு Hall மற்றும் இருண்டு படுக்கை அறைகள்) உடனே வாடகைக்கு விடப்படும்.

அணுகவும்: மகலி 06 81 22 94 08



ஈழமுரசு
POOBALAM WEEKLY

"POOBALAM"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris, France.

**RCS PARIS**
B 452 164 817 (2004B03079)

**Directeur de la publication:**
A.F. Santiogu

**Redacteur:** K. Jeisanthar

**Impression:**
IMPRIMERIES SAGITTAIRE
157 Boulevard Davout
75020 Paris.
Tel - 01 40 30 24 78

Dirigeant : Yohan TUIL

நிர்வாகி: அ.பி. சந்தியோகு
ஆசிரியர்: கி.ஜெய்சந்தர்

தபால் தொடர்புகளுக்கு:
POOBALAM
22, Rue Perdonnet,
75010 Paris, France

ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு:
E.Mail-Poobalam@free.fr

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பிரான்ஸ்:
Tel: 01 40 05 95 15
Fax: 01 40 05 95 16
E.Mail-poobalamad@free.fr

ஜேர்மனி:
T C C (வெளியீட்டுப் பிரிவு)
POSTFACH 101 613
46016 OBERHAUSEN
GERMANEY
TEL: 0208 205 99 103
FAX: 0208 205 99 104
HAND: 0049 172 28 86 291

சுவிஸ்:
MEDIA HOUSE
POSTFACH 6707, 3001 BERN.
TEL: 031 381 75 72

டென்மார்க்: அன்பு
P.O.Box 65
7400 Herning, Denmark.
Tel: 86336352 - Fax: 65302588

பிரித்தானியா:
பரணி : - Tel: 07958675021
மோகன் : - Tel: 07961582285

இத்தாலி: மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD
Tel: 22425527

நெதர்லாந்து: த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

அவுஸ்திரேலியா:
Tel: 61 3 8802 8368



**குறிப்பு:**
இவ்விதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு. ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.





## மோகன் ஜுவல்லர்ஸ் அன்ட் ரெக்ஸ்டைல்ஸ்

**Basel மாநகரில் ஓர் அலங்கார மாடம்**

சுவிஸ் அரசின் அங்கீகாரம் பெற்று தரமான தங்க நகை விற்பனையாளர்களாய் திகழும் பிரம்மாண்டமான நிறுவனம்...
22 கரட் தங்க நகைகள் உங்கள் விருப்புக்கேற்ற ஏராளமான தெரிவுகளில்
மற்றும் சுவிசில் கல்லு முத்து பதிப்பதற்கு கூலி எதுவும் அறவிடாத ஒரே ஒரு நிறுவனம்

**மோகன் ஜுவல்லர்ஸ்**

வண்ணப்புடவைகள் பஞ்சாபிகள், சட்டைகள் ஆண்கள் சிறுவர்களுக்கான உடைகள் என அனைத்தும் எம்மிடமே!
**புதிய பழைய திரைப்படப் பாடல்கள், படங்கள், நாடகங்கள், DVD, VCD, VIDIO Cassettes**
**என்பன விற்பனைக்கும் வாடகைக்கும் கிடைக்கும்**
உலகின் அனைத்துப் பகுதிக்குமான பணமாற்றுச் சேவை உடனுக்குடன்

**MOHAN JEWELLERS & TEXTILES**
**Elisabethen anlage 25**
**4051 Basel**
**Tél - 061 271 41 09**
**Fax - 061 271 41 17**
**WWW.mohantextiles.com**

# புலிகள் - முஸ்லிம் பிரதிநிதிகள் அடிக்கடி சந்திப்பதால் நல்லுறவை வளர்க்க முடியும்

## - நோர்வே பிரதி செயலாளர் -

(22.08.04)

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கும் மட்டு. மாவட்ட சிவில் முஸ்லிம் பிரதிநிதிகளுக்குமிடையிலான சந்திப்புக்கள் அடிக்கடி தொடர்ந்து இடம்பெறுவது அவசியமாகும். இதனால், இரு சமூகங்கள் இடையேயும் பரஸ்பர நல்லுறவுகள் வளர்ந்து துரதிர்ஷ்ட வசமாக ஏற்படும் பிரச்சினைகளுக்கு இதய சுத்தியுடன் பேசி தீர்வு காண முடியும் என நோர்வே தூதுவராலய பிரதி செயலாளர் கிபீஜஸ்ட்ரி ஹோம் ஸ்ட்டல் தெரிவித்தார்.

காத்தான்குடியில் முஸ்லிம் சிவில் சமூகப் பிரதிநிதிகளுக்கும் சிறீலங்காவின் நோர்வே தூதுவராலய பிரதி செயலாளருக்குமிடையே நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது தொடர்ந்தும் கருத்தினை தெரிவித்த ஹோம் ஸ்ட்டல், புலிகள் - முஸ்லிம்கள் சந்திப்பதன் மூலம் சுமூகமான ஆரோக்கியமான நல்லுறவையும் நம்பிக்கையையும் உருவாக்க முடியும். எமது சமாதான நடவடிக்கை ஒருவரையறைக்குள் உட்பட்டதாகும். யாரையும் நோர்வே குறை கூறவும் மாட்டாது. விமர்சிக்கவும் மாட்டாது. அத்துடன் சமாதான முன்னெடுப்பின் போது மிகவும் அர்ப்பணிப்புடன் இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதில் பல்வேறு தியாகங்களை மேற்கொண்டு நிரந்தரமான, நிம்மதியான சமாதானத்திற்காக உழைத்து வருகின்றோம். யார் விரும்பினாலும் சரி விரும்பாவிட்டாலும் சரி, சமாதானத்தை நிலை நிறுத்துவதில் நாம் மூன்றாந்தரப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

மூன்றாந் தரப்பு அவசியம் இல்லையெனில் நாம் ஒதுங்கிக் கொள்ள தயாராக இருக்கின்றோம். இரு தரப்பினரையும் சமாதானத்தின் முன் கொண்டு வருவதும், சமாதானத்திற்கு தேவையான வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்துவதே எமது பாரிய பணியாக எண்ணி செயல்பட்டு வருகின்றோம். இந்நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம்களாகிய நீங்கள், சமாதானத்திற்கு பூரணமான ஒத்துழைப்பினை வழங்குவீர்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு. இங்கு வாழ்கின்ற இரு சமூகங்களும் நான் ஏற்கனவே கூறியது போன்று விடுதலைப் புலிகளையும் சந்தித்து தமக்குள் ஏற்படும் பிணக்குகளை இனம் கண்டு இரு தரப்பினரும் பேசி இணக்கப்பாட்டுக்கு வருவதே சமாதானத்தின் வெளிப்பாடாகுமென்றும் அவர் தெரிவித்தார்.

# ஹெல உறுமயவின் விபரீத ஆசை!


(22.08.04)

விடுதலைப் புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனையின் அடிப்படையில் சமாதானப் பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்படுமாயின் நாட்டை காப்பாற்றுவதற்காக தேரர்கள் மரணத்தை சந்திக்க கூட தயாராக இருக்கின்றார்கள் என்று சிங்கள இனவாத அமைப்பான ஜாதிக ஹெல உறுமயவின் தேசிய பிக்குகள் முன்னணியின் பிரதான செயலாளர் கலவல்கல சந்தா லோக்கதேரர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி விடுதலைப் புலிகளுடன் மேற்கொள்ளவிருக்கின்ற சமாதான பேச்சுவார்த்தை தொடர்பாக தேசிய பிக்கு முன்னணியின் நிலைப்பாடு குறித்து ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த ஊடகவியலாளர் மாநாடு கொழும்பு கொம்பனி வீதியிலுள்ள நிப்போன் விடுதியில் கடந்தவாரம் நடைபெற்றது. அவர் அங்கு தொடர்ந்து கூறுகையில், இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனை தொடர்பாக சமாதான பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்படுமாயின் இறுதி பேச்சுவார்த்தைக்கு விடுதலைப் புலிகள் வரவும் மாட்டார்கள். அவ்வாறான பேச்சுவார்த்தை அவர்களுக்கு தேவையும் இல்லை. புலிகள் சமர்ப்பித்துள்ள யோசனைகளின் படி பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டால் 'ஈழம்' உருவாகி விடும். ஆனால் அதற்கு பின்னர் நாட்டில் சமாதானம் இருக்காது. எனவே புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனையின் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டால் ஏற்படும் விளைவுகள் குறித்து பொதுமக்களுக்கு விளக்கமளித்து அதற்கெதிராக பொதுமக்களை எழச்செய்யவிருக்கின்றோம்.

இதற்காக எதிர்வரும் 24ம் திகதி செவ்வாய்க்கிழமை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் விசேட பொது மாநாடு ஒன்றினையும் நடத்தவிருக்கின்றோம். இம்மாநாட்டில் சகல மாவட்டங்களையும் சேர்ந்த பௌத்த துறவிகள், பொதுமக்கள், அரசியல்வாதிகள் மற்றும் பலர் கலந்து கொள்ளவிருக்கின்றனர். இந்த மாநாட்டிற்கு பின்னர் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த வேண்டாம் என்று அரசாங்கத்திற்கு தொடர்ச்சியாக அழுத்தம் கொடுப்பதுடன், அவ்வாறான பேச்சுவார்த்தைக்கு துணை போக வேண்டாம் என்று அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு எதிராகவும் குரல் கொடுக்கவிருக்கின்றோம் என்றார்.



ஈ.பி.டி.பி. சின்ன பாலாவின் மரணச் சடங்கில் உரையாற்றும் ஹெல உறுமயவைச் சேர்ந்த பௌத்த பிக்கு ஒருவர்...

# தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பிரதமர் மன்மோகன் சிங்கை வைகோ சந்திக்கவுள்ளார்

இலங்கை அமைதி முயற்சிகளில் இந்தியாவும் பங்கெடுக்க வேண்டும் என்று கோரி பிரதமர் மன்மோகன் சிங்கை, சிறீலங்கா நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் சென்று சந்தித்துக் கோரிக்கை விடுக்கப் போவதாக ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கூறியுள்ளார். தனது மறுமலர்ச்சி நடைப் பயணத்தில் திருச்சி வந்த வைகோவை பிரதமர் மன்மோகன் சிங் கைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்தினார். இந்த நிலையில் நிருபர்களிடம் வைகோ பேசுகையில், சிறீலங்கா நாடாளுமன்ற உறுப்பினர்களான சேனாதிராஜா, சந்திரசேகரன் ஆகியோர் சமீபத்தில் 22 பேர் கொண்ட குழுவுடன் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்துப் பேசவுள்ளனர்.

அடுத்த மாதம் இந்த உறுப்பினர்கள் இருவரும் பிரதமரை சந்திக்கும்போது நானும் உடனிருப்பேன். இலங்கையில் நிரந்தர அமைதியை ஏற்படுத்தும் முயற்சிகளில் இந்தியா ஈடுபட வேண்டும் என்பதை வெளியுறவுத்துறை அமைச்சர் நட்வார் சிங்கிடம் தெரிவித்திருக்கிறேன். பல விடயங்கள் குறித்தும் விளக்கினேன். முந்தைய மத்திய அரசுகளிடம் சொல்லப்படாத பல விடயங்களையும் நட்வார் சிங்கிடம் விளக்கினேன். என்னால் முடிந்தவரை இலங்கையில் நிலவும் சூழல் குறித்துத் தெளிவாக அவரிடம் சொன்னேன். நட்வார் சிங் முழுமையாக விபரங்களைக் கேட்டறிந்தார்.

தூத்துக்குடி, கொழும்பு இடையே கப்பல் போக்குவரத்தை மத்திய அரசு தொடக்க வேண்டும். இந்த விடயத்தில் ஜெயலலிதாவின் எதிர்ப்பைப் பற்றி கவலைப்படக் கூடாது. கப்பல் போக்குவரத்துத் தொடங்கப்பட்டால் விடுதலைப் புலிகளால் தமிழகத்தின் பாதுகாப்புக்குப் பிரச்சினை வரும் என்று முதல்வர் ஜெயலலிதா கூறியிருக்கிறார். ஜெயலலிதா எதற்கெடுத்தாலும் இதைத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறார். ஊடுருவ வேண்டும் என்று நினைத்தால் எப்படியும் ஊடுருவுவார்கள். கடந்த 12 வருடங்களில் புலிகள் யாராவது இங்கே ஊடுருவினார்கள் என்று எந்தப் புலனாய்வு அமைப்பாவது சொல்லியிருக்கிறதா? என்றார் வைகோ.

### கொழும்பில் என்றுமில்லாதளவிற்கு ஊடுருவல்

# சந்திரிகாவிற்கு புலனாய்வுத்துறை எச்சரிக்கை

(23.08.04)

கொழும்புக்குள் விடுதலைப் புலிகளின் 350 தற்கொலைத் தாக்குதல் நபர்களும் அவர்களுக்கு உதவுவதற்காக 150 பேரும் ஊடுருவியிருக்கிறார்கள். இவ்வளவு எண்ணிக்கையில் விடுதலைப் புலிகள் தலைநகருக்குள் ஊடுருவியிருப்பது இதுவே முதல் தடவையாகும். இவ்வாறு தெரிவிக்கும் புலனாய்வு பிரிவினரின் அறிக்கை ஒன்றை சிறீலங்கா பொலீஸ்மா அதிபர் அண்மையில் நடந்த தேசியப் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் அரசுத் தலைவர் சந்திரிகாவிடம் சமர்ப்பித்திருக்கின்றார் என கொழும்பு ஆங்கில இதழொன்று தெரிவித்துள்ளது. பெரியதொரு தாக்குதலுக்கான முன்னேற்பாடே இந்த ஊடுருவல் என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விவகாரம் குறித்து, தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் சந்திரிகாவால் விரிவாக ஆராயப்பட்டதாகவும் தற்கொலைத் தாக்குதல் நபர்களின் ஊடுருவலால் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலைச் சமாளிக்க எடுக்கப்படவேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து உரிய உத்தரவுகளை விடுத்ததுடன், முக்கியம் வாய்ந்த வீதிகளை மூடுவதுடன், பாதுகாப்பு வேலிகளை அமைத்து வீதித்தடைகளை ஏற்படுத்துவதுடன், விசேட தாக்குதல்களுக்கும் படையினரைத் தயாராக இருக்குமாறும் பணித்துள்ளதாக அவ்விதழ் மேலும் தெரிவித்துள்ளது.


Restaurant Tharsana's

* இலங்கை, இந்திய உணவுவகைகளை உங்கள் குடும்பத்தோடு வந்து சுவைத்து மகிழ்ந்திடவும்
* உங்கள் இல்லத்தின் இனிய விழாக்களை கொண்டாடி மகிழ்ந்திடவும், அனைத்து உணவு வகைகளையும் முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்வதற்கும் லாச்சப்பலில் நீங்கள் நாடவேண்டியது.

Restaurant Prassah Gastronomiques Indiennes

தர்ஷனாஸ் உணவகம்
23, Rue Perdonnet, 75010 Paris
Tél: 01 40 05 08 36- 06 80 02 93 41
M°: La Chapelle ou Stalingrad

தர்ஷனா & பிரஷா உணவகங்கள்
இங்கு சாப்பாடுகளை ஓடருக்குப் பெற்றுக் கொள்வதுடன், உங்கள் விழாக்களையும் இங்கு மகிழ்வுடன் கொண்டாடலாம்

பிரஷா உணவகம்
54 Rue Louis Blanc, 75010 Paris
Mo: La Chapelle ou Louis Blanc
Tel: 01 53 26 39 41

அசைவத்திற்கோ பல... சைவத்திற்கோ ஒன்று தான்!
பிரான்சில், ஈழத்தமிழர்களின் முதலாவது முழுமையான சைவ உணவகம்
கிருஸ்ண பவன்
விதம் விதமான தோசை, இட்லி, சப்பாத்தி, பூரி, இடியப்பம், பிட்டு, சைவ பலகாரங்கள், இனிப்புப் பண்டங்கள், சைவச் சாப்பாடுகள் இன்னும் பல....
கைதேர்ந்த சமையற்கலை வல்லுநர்களின் தயாரிப்பில் தூயக தென்னிந்திய உணவு வகைகளை சுவைத்து மகிழ்ந்திட 'கிருஸ்ண பவன்'
கிருஸ்ண பவன்
24, Rue Cail
75010 Paris
Tél : 01 42 05 78 43
M° : La Chapelle / Gare du Nord
- ரம்மியமான சூழலில் இரசித்து சுவைக்க ஒரு சைவ உணவகம் -

ஈழமுரசு ஐரோப்பா
POOBALAM WEEKLY
அனைத்துத் தொடர்புகளுக்கும்:
POOBALAM
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 05 95 15
Fax: 01 40 05 95 16
E.Mail-Poobalam@free.fr
www.poobalam.com

வீடு வாங்குதல்—விற்றல்—முதலீடு செய்தல்
- வீடு வாங்குவோருக்கான 100% கடன் வசதி
- SCI ஸ்தாபனத்தின் மூலம் வீடுகள் வாங்கி முதலீடு செய்து கொள்ளுதல்
- கட்டப்பட்ட புதிய — பழைய வீடுகள் வாங்குதல்
- நிலம் வாங்கி புதிய வீடுகள் கட்டுதல்
முழு அளவிலான இலவச ஆலோசனைகள் வழங்கப்படும்
தொடர்புகள்: 06 64 73 49 82

# தமிழீழ தேசியக் கொடி ஏற்றுவதை தடுத்து நிறுத்துமாறு கண்காணிப்புக் குழுவிடம் படையினர் கோரிக்கை



(22.08.04)

படைக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இடம்பெறும் நிகழ்ச்சிகளில், தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழீழ தேசியக் கொடியை ஏற்றி வருவதைத் தடுத்து நிறுத்துமாறு, சிறீலங்கா முப்படையினர், இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இந்தக் கோரிக்கை, சிறீலங்கா சமாதானச் செயலகத்தினூடாக இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இதேவேளை, சிறீலங்கா படைக் கட்டுப்பாட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகள் தேசியக் கொடியினை ஏற்றிவைத்ததன் மூலம், 136 தடவைகள் போர் நிறுத்த உடன்படிக்கையை மீறியுள்ளதாக இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது. அத்துடன், யாழ்ப்பாணத்தில் மாத்திரம் 55 தடவைகள் இவ்வாறு போர் நிறுத்த ஒப்பந்தம் மீறப்பட்டுள்ளதாகவும் கண்காணிப்புக் குழு கூறியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழீழ தேசியக் கொடியேற்றலுடனேயே, தமிழர் தாயகத்திலும் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் தமிழ் மக்களின் நிகழ்வுகள் ஆரம்பமாவது குறிப்பிடத்தக்கது.

## தூய தமிழ்ப் பாவனையை ஊக்குவிப்பதற்கு திலீபன் நினைவுநாளில் அதிக முக்கியத்துவம்

ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்து சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்த தியாகி லெப்.கேணல் திலீபனின் 17வது நினைவு தினத்தை முன்னிட்டு தூய தமிழ் பிரயோகம் மற்றும் பிறக்கும் குழந்தைகளுக்கு தூய தமிழில் பெயர் சூட்டுதல் போன்ற விடயங்களை ஊக்குவிப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

திலீபனின் நினைவு நிகழ்வுகள் அடுத்த மாதம் 15ம் திகதி முதல் 29ம் திகதி வரை இடம்பெறவுள்ளன. இந்த நிகழ்வுகள் தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று யாழ். ப.நோ.கூ.சங்க மண்டபத்தில் இடம்பெற்றது. இக் கூட்டத்திலேயே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் தியாகி திலீபனின் நினைவு நகிழ்வுக் காலத்தில் பல்வேறு சிரமதான மற்றும் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் எடுப்பது குறித்தும் இங்கு நடைபெற்ற கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

## தாய் மடியின் தாலாட்டு ஒலிப்பேழை வெளியீடு

தமிழீழ விடியல் இசைக்குழுவின் "தாய் மடியின் தாலாட்டு" ஒலிப்பேழை வெளியீடு இன்று திங்கட்கிழமை யாழ். பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றுள்ளது.

## சமாதான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படாவிட்டால் நிதி உதவி இல்லை

**- அமெரிக்கா அறிவிப்பு**

பரஸ்பரம் நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கும் சாத்தியமான அளவுக்கு துரிதமாக பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கும் நிகழ்ச்சி நிரலை தயாரிப்பதற்குமான நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு சிறீலங்கா அரசாங்கத்தையும், விடுதலைப் புலிகளையும் அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது. இலங்கையின் புனர்நிர்மாண நடவடிக்கைகளுக்கு நிதி உதவி அளிப்பதற்கு உறுதியளித்ததன் பிரகாரம் அமெரிக்கா தயாராக இருப்பதாகவும் ஆனால், இது சமாதான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டாலே சாத்தியப்படும் என்றும் வாஷிங்டன் அறிவுறுத்தியிருக்கிறது. 'இலங்கையில் வன்செயலும் சமாதான நடவடிக்கைகளும்' என்ற தலைப்பில் அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் பிரதி பேச்சாளர் அடம் எட்லி கடந்த வியாழக்கிழமை இதுதொடர்பாக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது... படுகொலைகள், தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் உட்பட இடம்பெற்று வரும் சம்பவங்கள் குறித்து சிறீலங்காவிற்கான அமெரிக்கத் தூதுவர் கெவ்ரி லூன்ஸ்நெட்டுடன் அமெரிக்க பிரதி வெளிவிவகார அமைச்சர் ஆர்மிரேஜ் ஆராய்ந்துள்ளார். உறுதியளிக்கப்பட்டதன் பிரகாரம் பேச்சுகான நிகழ்ச்சி நிரலை சாத்தியமான அளவுக்கு துரிதமாகத் தயாரிக்கும் பணியில் ஈடுபடுமாறு, சம்பந்தப்பட்ட தரப்பினரை வலியுறுத்துவதாக தெரிவிக்கப்பட்டுள்ளதுடன்,

2002 யுத்த நிறுத்தத்துடன் ஆரம்பிக்கப்பட்ட சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கான விருப்பத்தை ஜனாதிபதி குமாரதுங்க வெளிப்படுத்தியுள்ளார். அதற்கு விடுதலைப் புலிகள் சாதகமான முறையில் பதிலளித்து சிறீலங்கா அரசுடன் பேச்சை ஆரம்பிக்க வேண்டிய தேவை உள்ளது, என்று சிறீலங்கா அரசின் சார்பாகவும் தமது கருத்தை வெளியிட்டுள்ளது.

## யாழில் சிறீலங்காப் புலனாய்வினரின் அப்பக் கடை

### மாணவர் போராட்டத்தால் அகற்றப்பட்டது

(23.08.04)

யாழ்ப்பாணம் கலட்டிச் சந்தியில் சிறீலங்கா இராணுவ முகாமுடன் இணைந்ததாக அமைந்திருக்கும் அப்பக் கடையை அங்கிருந்து அகற்றுமாறு கோரி பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று மாலை ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர். அப்பக் கடையின் முன்பாக மாலை 5.30 மணியளவில் சுலோக அட்டைகளுடன் குழுமிய மாணவர்கள் அங்கு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

சுடச்சுட அப்பம் விற்பனை செய்யப்படும் இந்தக் கடையை சிறீலங்கா இராணுவம் தனது புலனாய்வுத் தகவல் மையமாகப் பயன்படுத்துகின்றது என்று குற்றஞ்சாட்டிய மாணவர்கள் இராணுவத்தின் புலனாய்வு நடவடிக்கைகளைக் கண்டித்து வரையப்பட்ட சுலோக அட்டைகளை வைத்திருந்தனர் கோசங்களையும் எழுப்பினர். கடையை மூடிவிடுமாறு மாணவர்கள் படையினரிடம் கோரினர். ஒரு கட்டத்தில் கடைக்குள் புகுந்த மாணவர்கள் அங்கிருந்த தளபாடங்களைச் சேதப்படுத்தினர். இதனால் அங்கு பதற்றமான ஒரு நிலைமை உருவானது.

இதனையடுத்து, அப்பக் கடையை மூடிவிடுவதாக இராணுவத்தினர் உறுதி அளித்த பின்னரே மாணவர்கள் அவ்விடத்திலிருந்து அகன்றனர். 'தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் என்ற அமைப்பு கடந்த வாரம் படையினரின் உணவகங்கள் குறித்து எச்சரிக்கை அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

PHONE 2000
Reparation -Abonnements Telephones Mobiles -Vente en Gros et Detail - Deblocage
Internet-installation Cybercafe -Abonnement ADSL -Creation de Site web.
LES PROFFESSIONNELS DE LA TÉLÉPHONIE MOBILE À VOTRE SERVICE
SFR
PHONE 2000 2, Rue Perdonnet, 75018 Paris. ☎: 01 40 05 03 43 Fax: 01 40 05 03 53 M°: La Chapelle
PHONE 2000 85, Rue des Pyrénées, 75020 Paris. ☎: 01 40 09 13 15 Fax: 01 40 09 01 31 M°: Maraîchers
PHONE 2000 19, Rue du Labat, 75018 Paris. ☎: 01 42 58 55 40 Fax: 01 42 58 55 46 M°: Marcadet Poissonniers
PHONE 2000 Informatique 87, Rue des Pyrénées, 75020 Paris. M°: Maraîchers Tél: 06 20 21 11 11
PHONE 2000 4, Rue de Cail, 75010 Paris. ☎: 01 40 05 93 28 Fax: 01 40 05 97 03 M°: La Chapelle ou Gare du Nord
PHONE 2000 5, Bld. davout, 75020 Paris. ☎: 01 43 71 40 30 Fax: 01 40 09 01 31 Mobile: 06 17 17 28 17 M°: Porte de Vincennes
Pour plus Dinformation Visitez: www.Phone2000.net -Tel: SFR Siva: 06 20 21 11 11